எதிர்பார்ப்பு

EXPECTATION

55-1001

சனிக்கிழமை மாலை,
அக்டோபர் 1, 1955

ஷாவானோ உயர்நிலைப்பள்ளி,
ஷாவானோ, விஸ்கான்சின், அமெரிக்கா

சகோ.வில்லியம் பிரன்ஹாம்

எதிர்பார்ப்பு (55-1001)



கர்த்தர் எனக்குக் கொடுத்த வேறெந்த தரிசனத்தையும் கனப்படுத்தாமல், உலகத்தில் வேறெதுவுமே செய்யாமல் இருந்திருந்தாலும், இதுவே எல்லாவற்றிற்கும் தகுதியானதாக இருக்கிறது. ஒவ்வொரு பிரயாசமும், குடும்பத்தாரிடம் சொன்ன ஒவ்வொரு பிரியாவிடையும், நான் கடந்து வந்த ஒவ்வொரு மனவேதனையும், மற்றும் மற்ற எல்லாமும், அங்கேயே அதற்குத் தகுதியானதாக மாறிவிடுகிறது. நேற்றிரவு சக்கர நாற்காலியில் அமர்ந்திருந்த ஒரு சகோதரி, இங்கேயுள்ள அந்த சக்கர நாற்காலியில் இருந்து வெளியே அழைக்கப்பட்டார் என்று அவர்கள் சொன்னார்கள். அவர்கள் அதை வைத்திருக்கிறார்கள்... அவள் காலையில்

நிகழ்ச்சியில்—தொலைபேசியில் தன்னைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தாள். இன்று இரவு அவள் மீண்டும் கட்டிடத்திற்கு வந்திருக்கிறாளா என்று நான் ஆச்சரியப்படுகிறேன்? அந்த சகோதரி இங்கே இருந்தால்... சகோதரி, நீங்கள் இங்கே இருந்தால் உங்கள் கையை உயர்த்துவீர்களா? இதோ அவள் இருக்கிறாள், சக்கர நாற்காலி இல்லாமல். "தேவனுக்கு ஸ்தோத்திரம்" என்று சொல்வோம். [சபையார், "தேவனுக்கு ஸ்தோத்திரம்" என்கிறார்கள்.] இயேசு கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிந்ததற்காக, என் அன்புச் சகோதரியே, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. அவருடைய ஆசீர்வாதங்கள் எப்போதும் உங்களுடன் இருக்க வேண்டும் என்பதே என் ஜெபம்.

இப்போது, என்றாவது ஒரு நாள் உங்கள் இருவரையும் பார்த்து, உங்களுடன் பேசி, உங்கள் கைகுலுக்க முடியும் என்று நம்புகிறேன். இந்தப் பூமியில் என்னால் அதைச் செய்ய முடியாவிட்டால், வரவிருக்கிற உலகத்தில், நாம் அந்த நித்திய ஜீவ விருட்சத்தின் அருகே உட்காரும்போது நான் அதைச் செய்வேன்; அங்கே தொல்லைகள் எல்லாம் முடிந்துவிடும்.

ஆஹா, அது எவ்வளவு அற்புதமாக இருக்கும் அல்லவா?

2 வாழ்க்கை முடிவடையும் ஒரு இரவை நினைத்துப் பாருங்கள்; முடிவாக இயேசு வருகிறார், நாம் அவரை ஆகாயத்தில் சந்திக்கச் செல்கிறோம், அங்கே ஒரு லட்சம் மைல் நீளத்திற்கு அந்தப் பெரிய பந்தி ஆயத்தம் செய்யப்பட்டிருக்கிறது. அங்கே சுற்றிலும், ஊழியக் களத்தின் பழைய போர்வீரர்கள் அமர்ந்திருக்கிறார்கள், மேசையின் குறுக்கே ஒருவரையொருவர் பார்க்கிறார்கள், அங்கே என் சகோதரனும் சகோதரியும் அமர்ந்திருப்பதைக் காண்கிறார்கள். மேசையின் குறுக்கே கையை நீட்டி அவர்களில் ஒருவரின் கையைப் பிடிக்கும்போது, அவ்வப்போது நாம் சற்று கண்ணீர் சிந்தத்தான் செய்வோம். ஆனந்தக் கண்ணீர் நம் கன்னங்களில் உருண்டோடும், அப்போது ராஜா தமது மகிமையோடு வெளியே வந்து, மேசையின் ஓரமாக நடந்து வந்து, நம் கண்களிலிருந்து கண்ணீரைத் துடைப்பார். [டேப்பில் காலியான இடம்] கூட்டங்களை நடத்துவதிலும், ஒன்றாகக் கூடிவருவதிலும், அவரைப் பற்றிப் பேசுவதிலும் அதுவே

நம்முடைய நோக்கமாக இருக்கட்டும், அவரைப் பற்றி நாம் நினைப்பதும், அந்த இரவில் அவரைச் சந்திப்பதும் அதுவாகவே இருக்கட்டும்.

பாருங்கள் நண்பர்களே, இங்கேயுள்ள காரியங்களைப் பார்க்காதீர்கள், முடிவைப் பாருங்கள். எனக்கு நேராக இங்கேயுள்ள காரியங்களை நான் பார்க்க வேண்டியிருந்தால், நான் ஒரு சோர்வடைந்த நபராகவே இருப்பேன். ஆனால் நான் ஒருபோதும் இங்கே பார்ப்பதில்லை; நான் முடிவையே கவனிக்கிறேன்.

3 கொஞ்ச காலத்திற்கு முன்பு, என் மேலாளர்களில் ஒருவரான திரு. பாக்ஸ்டர்... உங்களில் பலருக்கு அவரைத் தெரிந்திருக்கும் என்று நினைக்கிறேன். நான் எப்போதும் விரும்பும் ஒரு சிறிய கதையை அவர் மேற்கோள் காட்டிக் கொண்டிருந்தார். அவர்கள் அனைவரும் சைக்கிள் ஓட்டிக் கொண்டிருந்தார்கள்; அவர் ஒரு கனேடியர். அவர்கள் சைக்கிள் ஓட்டுவார்கள், அவர்கள் அதில் மிகவும் கைதேர்ந்தவர்களாக இருந்ததால்,

கைப்பிடிகளைப் பிடிக்காமலேயே அவர்களால் ஓட்ட முடிந்தது. எனவே, ஸ்வின் (Schwinn), ஸ்வின் (அப்படித்தான் நினைக்கிறேன்) சைக்கிள் கம்பெனியார், வான்கூவரில் பன்னிரண்டு அங்குலப் பலகையின் மீது கீழே விழாமல் நூறு கெஜம் சைக்கிள் ஓட்டும் எந்தவொரு சிறுவனுக்கும் ஒரு பரிசை வழங்கவிருந்தார்கள்.

சரி, அவர்கள் அனைவரும் இந்த சைக்கிள்களை ஓட்டுவதற்கு அங்கே ஏறினார்கள். அங்கே ஒரு சிறிய கோழைத்தனமான சிறுவன் இருந்தான். அவனை நாம், முரட்டுத்தனமான ஆட்கள், உங்களுக்குத் தெரியுமல்லவா, "அம்மா பிள்ளை" என்று அழைப்போமே அதுபோல இருந்தான். ஆகையால், அவன் ஓட்ட மாட்டான் என்று எங்களுக்குத் தெரியும். எனவே அவர்கள் அனைவரும் ஏறியபோது, இந்த சிறிய கோழைத்தனமான சிறுவனைத் தவிர மற்ற அனைவரும் கீழே விழுந்தார்கள். ஆனால் அவன் இறுதிவரை ஓட்டிச் சென்று, இறங்கி, சைக்கிளை வென்றான். எனவே எல்லா சிறுவர்களும் அவனைச் சுற்றி வளைத்து, "நீ இதை எப்படிச் செய்தாய்?" என்று கேட்டார்கள்.

4 அதற்கு அவன், "நண்பர்களே, நீங்கள் என்ன செய்தீர்கள் என்று நான் உங்களுக்குச் சொல்கிறேன்" என்றான். "நீங்கள் ஏறியபோது, அவர்கள் உங்களைத் தள்ளியவுடனே, நீங்கள் புறப்பட்டீர்கள்," என்று சொல்லி, "நீங்கள் பலகையில் உங்களை நிலைநிறுத்திக் கொள்ள முயற்சி செய்து, இப்படியே பார்த்துக் கொண்டிருந்தீர்கள்" என்றான். "அதுதான் உங்களை அசைவடையவும், பதட்டமடையவும், கீழே விழவும் செய்தது" என்றான். அவன் கூறினான், "நான் ஒருபோதும் அங்கே கீழே பார்க்கவே இல்லை," "நான் முடிவைப் பார்த்தேன், என் கண்களை முடிவின் மீதே வைத்திருந்தேன், இறுதிவரை நேராக, நிலையாக ஓட்டினேன்" என்றான்.

உங்கள் கண்களை முடிவின் மீதே வையுங்கள், இயேசு வருகிறார், அப்போது அது எப்படி இருக்கும்? இப்போது மக்கள் உங்களைப் பற்றி என்ன சொன்னாலும் சரி, நீங்கள் எப்படித் துன்புறுத்தப்பட்டாலும் சரி, ஏனென்றால் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள், கேலி செய்யப்படுவார்கள்,

பரியாசம் பண்ணப்படுவார்கள், இன்னும் பல. ஆனால் முடிவில் அது எப்படி இருக்கும் என்பதைக் கவனியுங்கள்; அங்கேதான் அதற்கான பலன் கிடைக்கும். உறுதியாகப் பிடித்துக் கொண்டு, உங்கள் கண்களை முடிவின் மீதே வையுங்கள்; அது உங்களுக்கு நன்மையாக இருக்கும்.

5 கர்த்தர் இப்போது உங்களை ஆசீர்வதிப்பாராக, சற்று நேரத்திற்கு முன்பு எனக்காக ஒரு அன்பு காணிக்கை எடுத்தார்கள் என்று என் மகன் என்னிடம் சொன்னான், அதை நான் அறிவேன். அது எனக்கு வேண்டாம் நண்பர்களே; நான் அதற்காக இங்கே வரவில்லை. அது தேவனுக்குத் தெரியும். ஆனால் நான் ஒரு கூட்டத்தை நடத்தி நீண்ட காலமாகிவிட்டது, என் வீட்டில் ஒரு நாளுக்கான செலவுகள் சுமார் நூறு டாலர்கள் ஆகிறது. நான் அநேகமாக வங்கியில் இருப்பதை விட அதிகமாகவே பணம் எடுத்திருப்பேன். நான் இதை உங்களுக்கு உறுதியளிக்கிறேன். வேலை செய்வதற்கு என்னிடம் முதலீடு இல்லை; நான் வெறும் வேலை மட்டும்தான் செய்கிறேன். என்

கடன்களை அடைத்த பிறகு என்னிடம் மீதம் ஏதேனும் இருந்தால், அது நேராக வெளிநாட்டு ஊழியங்களுக்குச் செல்கிறது என்பதை பரலோகத்திலிருக்கும் தேவன் அறிவார், அதற்காகவே என் இதயம் ஏங்குகிறது. வெளிநாட்டு ஊழியங்களின் தேவைகள் எப்படி இருக்கின்றன என்பதைப் பற்றிப் பிரசங்கிக்க, இங்கே ஒரு வாரம் தங்கியிருக்க வேண்டுமென்று விரும்புகிறேன். இங்கே நம்மிடம் பெரிய சபைகளும் காரியங்களும் இருக்கின்றன; ஆனால் அவர்களிடம் ஒன்றுமே இல்லை. எப்படி லட்சக்கணக்கானோர் கிறிஸ்துவிடம் வருகிறார்கள்...

ஆனால் இப்போது, ஒவ்வொரு பைசா பணமும் பயபக்தியுடன் கவனமாகக் கையாளப்படும் என்பதை நான் உங்களுக்கு உறுதியளிக்கிறேன். என் மனைவிக்கும்— இங்கேயுள்ள என் மகனையும் சேர்த்து கவனித்துக் கொள்ள வேண்டிய நான்கு பிள்ளைகளுக்கும் எனக்குத் தேவையற்றதை, கர்த்தருடைய வேலைக்காக மட்டுமே நான் வைத்திருக்க வேண்டும்; நான் அதை நல்ல காரியத்திற்காகப் பயன்படுத்துவேன்; அது

ஒருபோதும் தவறான காரியத்திற்குப் போகாது. அது சுவிசேஷத்தினிமித்தமே செல்லும். முடிவில், அது நீங்களாக இருப்பீர்கள்; அது— அது மகிமையில் உங்கள் வீட்டிற்கான கற்களை வைக்கட்டும் என்பதே என் ஜெபமாக இருக்கிறது.

6 இப்போது, இங்கேயுள்ள இந்த கைக்குட்டைகளுக்காக, நாம் ஜெபிக்கிறோம். இப்போது, நான் இதைச் சொல்லப் போகிறேன். தற்போது, ஆதரிப்பதற்கு என்னிடம் எந்த நிகழ்ச்சிகளும் இல்லை. பெரிய வானொலி நிகழ்ச்சிகள், சர்வதேச அளவிலான நிகழ்ச்சிகள் மற்றும் காரியங்களை நடத்தும் பல சகோதரர்களை நீங்கள் கேள்விப்படுகிறீர்கள். அவர்களின் நிகழ்ச்சியை ஆதரிக்க அவர்களுக்கு நிறைய பணம் தேவைப்படுகிறது, எனவே அவர்கள் எங்களுக்கு எழுதுங்கள் என்று சொல்கிறார்கள். அது உங்கள் முகவரியைப் பெறுவதற்காகத்தான் என்பது எனக்குத் தெரியும். ஆனால் நீங்கள் வேண்டாம்... அது... ஜெபத் துணிகளையும் மற்ற காரியங்களையும் அனுப்புவதற்கு, எனக்கு வரும் கடிதங்களுக்குப் பதிலளிப்பதற்கே எனக்கு நேரம் மிகவும்

கடினமாக இருக்கிறது. இது உங்கள் முகவரிக்காக அல்ல, இல்லை.

உங்கள் வீட்டில் வைத்துக்கொள்வதற்கு, நான் ஜெபித்த ஒரு ஜெபத் துணி உங்களுக்குத் தேவைப்பட்டு, உங்களிடம் அது இல்லையென்றால், இண்டியானாவிலுள்ள ஜெபர்சன்வில்லில் உள்ள எனக்கு எழுதுங்கள், நாங்கள் செய்யக்கூடிய எதையும், முற்றிலும் இலவசமாக ஒன்று உங்களுக்கு அனுப்பி வைக்கப்படும். உங்களிடம் பணம் வற்புறுத்திக் கேட்கப்படவோ அல்லது ரசீது அனுப்பப்படவோ மாட்டாது, ஏனென்றால் நாங்கள் அப்படிச் செய்வதில்லை. நாங்கள் வெறும்... என் கடிதங்களுக்குப் பதிலளிக்கப் போதுமான அளவு மட்டுமே என்னிடம் உள்ளது, ஆதரிக்க என்னிடம் எந்த நிகழ்ச்சிகளோ அல்லது வேறெதுவுமோ இல்லை, அதனால் எனக்கு—எனக்கு—எனக்குப் பணம் தேவையில்லை. அது உண்மைதான். வெறும்... இது உங்களுக்கு உதவி செய்வதற்காக மட்டுமே; அதற்காக மட்டுமே நான் இதைச் செய்கிறேன். நிகழ்ச்சிகளை நடத்தும்

சகோதரர்கள் இருக்கிறார்கள், ஏன், அவர்களை ஆதரிக்க நீங்கள் உதவுங்கள்.

7 இப்போது, இந்த கைக்குட்டைகளுக்காக நாம் ஜெபிக்கும்போது, ஒரு கணம் நம் தலைகளைத் தாழ்த்துவோமா. எங்கள் அன்புள்ள பரலோகப் பிதாவே, இந்த மூன்று நாட்களில் நாங்கள் உருக்கமான அன்புடன் நேசிக்கக் கற்றுக்கொண்ட இந்த சகோதர சகோதரிகளின் மத்தியில், ஷவானோவில் உள்ள இந்த அழகான சிறிய ஆராதனையின் நிறைவில், இன்று இரவு நாங்கள் வந்திருக்கிறோம். இன்று காலை ஒலிபரப்பைக் கேட்டபிறகு, மிகவும் புகழ்பெற்ற மருத்துவமனை மரித்துப்போவதற்காகக் கைவிட்ட ஒரு பெண்ணின் ஒலிப்பதிவு ஒலிக்கக் கேட்டபிறகு, இன்று இரவு இங்கே அமர்ந்திருக்கிறோம்... ஆனால் அப்போது இயேசு சரியான நேரத்தில் வந்தார். இன்று இரவு அவள் இங்கே ஆரோக்கியமாக, அழகாக அமர்ந்திருக்கிறாள். ஓ, அதற்காக நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். அவளுடைய மக்கள் அனைவரும் அதற்காக மகிழ்ச்சியடைகிறார்கள் என்பதை நாங்கள் அறிவோம். நாங்கள் மிகவும் மகிழ்ச்சி

யடைகிறோம்... அவளைக் காணக் கிடைத்ததற்கே நான் மகிழ்ச்சியடைகிறேன் பிதாவே.

நேற்றிரவு சக்கர நாற்காலியில் அமர்ந்திருந்த இந்தச் சிறிய சகோதரி, இங்கே அமர்ந்திருந்தார்... இன்று இரவு, சபையாரின் மத்தியில் பின்னால், தாழ்மையோடு, ஒரு சாட்சியாக தேவனுக்குத் துதி செலுத்துவதற்காக எழுந்திருக்கிறார். தேவனே, இந்தக் காரியங்களுக்காக உமக்கு நன்றி. நீர் குணமாக்கிய மற்ற அநேகருக்காகவும் பிதாவே, நாங்கள் அவர்களுக்காக மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். பலரால் இங்கே வர முடியவில்லை; அவர்கள் வியாதிப் படுக்கைகளில் இருக்கிறார்கள், அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கைக்குட்டைகள் இதோ இங்கே இருக்கின்றன. தேவனே, நான் இந்தக் கைக்குட்டைகளின் மேல் கைகளை வைக்கும்போது, நீர் இவற்றோடு செல்வீரா. பரிசுத்த பவுலின் சரீரத்திலிருந்து கைக் குட்டைகளையும் கச்சைகளையும் எடுத்தார்கள் என்று பைபிளில் எழுதப்பட்டிருப்பதை நாங்கள் அறிவோம்.

8 பிதாவே, வியாதியஸ்தர்களைக் குணமாக்கிய அதே கர்த்தராகிய இயேசுவாகவே நீர் இன்றிரவும் இருக்கிறீர். நீர் இதை அருளிச் செய்ய வேண்டும் என்று ஜெபிக்கிறேன், ஒவ்வொருவருக்கும் சுகத்தை தாரும். இந்த மக்களை முழுமையாக ஆசீர்வதியும்.

பிதாவே, நாங்கள் உம்முடைய வார்த்தையைச் சில நிமிடங்கள் வாசித்துப் பேசும்போது நீர் எங்களுக்கு உதவி செய்யும்படியும், பின்னர் இன்றிரவு உம்முடைய ஆவியானவரை ஊற்றும்படியும் கர்த்தாவே, நாங்கள் இப்போது ஜெபிக்கிறோம். இன்று இரவு நம் மத்தியில் ஒரு பலவீனமான நபர் கூட இருக்கக் கூடாது. இப்போது பலவீனமாக இருப்பவர்கள், வார்த்தையைக் கேட்பதன் மூலம்... [டேப்பில் காலியான இடம்— ஆசிரியர்.]... சபையார் மத்தியில் கீழே இறங்கி, அப்படியே கடந்து செல்லுங்கள்... மேலும் குருடான ஃபானி கிராஸ்பி பாடியதைப் போல, ஒவ்வொருவரும்:

என்னைத் தாண்டிச் செல்லாதேயும், ஓ அன்புள்ள இரட்சகரே,

என் தாழ்மையான அழுகுரலைக் கேளும்;

நீர் மற்றவர்களை அழைத்துக் கொண்டிருக்கும்போது,

என்னைத் தாண்டிச் செல்லாதேயும்.

இன்று இரவு ஒவ்வொருவரும் அவருடைய கரத்திலிருந்து ஒரு தெய்வீகத் தொடுதலைப் பெற்று சுகமடைவார்களாக.

பிதாவே, உமது பிள்ளைகளாக இல்லாத எவரேனும் இங்கே இருந்தால், இன்று இரவு அவர்கள் உம்முடைய செயல்பாட்டையும், கிரியையையும், யதார்த்தத்தையும் காண் பார்களாக. நீர் அவர்கள் இதயத்தில் பேசுவீராக, "என்றாவது ஒரு நாள் நான் இந்த உலகத்தை விட்டுச் செல்ல வேண்டும் என்பதை அறிந்து, பாவ வாழ்க்கையில் நான் சோர்வ டைந்துவிட்டேன்" என்று அவர்கள் சொல்வார்களாக. இந்த இரவில் அவர்கள் உம்மைத் தங்கள் அன்பான அருமையான இரட்சகராகக் கண்டுகொள்ள வருவார்களாக. உமது அன்பான குமாரனாகிய இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறோம். ஆமென்.

9 இப்போது, சிலர் சுற்றிலும் நின்று கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் அறிவேன், நிற்க வேண்டியிருக்கிற அவர்களுக்காக நான்— நான் பரிதாபப்படுகிறேன், அதன் அர்த்தம் என்னவென்பது எனக்குத் தெரியும். ஆனால் இப்போது, நீங்கள் இங்கே இருப்பதில் நான்— நான் மகிழ்ச்சியடைகிறேன். எங்களுக்குப் போதுமான இடம் இல்லை; இது ஒரு சிறிய அரங்கம் மட்டுமே, நாங்கள் மூன்று நாட்களுக்கு மட்டுமே இருக்கிறோம். தேவனுக்குச் சித்தமானால், நீங்கள் விரும்பினால், என்றாவது ஒரு நாள் நான் உங்களிடம் திரும்பி வந்து— விஸ்கான்சின் மற்றும் அதைச் சுற்றியுள்ள நீங்கள் வாழும் இந்த மக்கள் மத்தியில் ஒரு— ஒரு கூட்டத்தை நடத்த நீண்ட காலம் தங்கியிருப்பேன் என்று நம்புகிறேன். நீங்கள் மிகவும் நல்லவர்கள், நான் உங்களை நேசிக்கிறேன்.

மேலும்—இப்போது, நான் தேவனுடைய வார்த்தையின் ஒரு பகுதியை மட்டும் வாசிக்க விரும்புகிறேன், ஏனென்றால், நான் எப்பொழுதும் சொல்வது போல், என் வார்த்தை வெறும் ஒரு மனிதனுடைய வார்த்தை

மட்டுமே. ஆனால் அவருடைய வார்த்தை நித்தியமானது, அது சத்தியமானது: வானமும் பூமியும் ஒழிந்துபோம், ஆனால் அவருடைய வார்த்தை ஒருபோதும் தவறாது. இப்போது, என்னிடம் இல்லை—என்னிடம் நேரமில்லை, ஒரு வழக்கமான வேதப்பகுதியை என்னால் அமைக்க முடியாது, ஏனென்றால் நான் பேசுவதற்கான காரணம், இந்தச் சபையின் உணர்வை அறிந்துகொள்வது மட்டுமே; அதற்காகவே இது: ஆவியானவரின் அபிஷேகம் மக்களைப் பற்றிக்கொள்வதை நான் அறியும் வரை சுற்றிலும் உணர்ந்து பார்ப்பதற்காக, அதன் பின்பு நான் ஜெப வரிசையைத் தொடங்குவேன். இப்போது, அதனால்தான் நான் பேசுகிறேன்.

10 நான் என் வேதப்பகுதியைச் சுமந்து செல்வதில்லை; கடந்த சில இரவுகளாக நான் செய்ததைப் போலவே, இங்கும், அங்கும், இன்னும் பல இடங்களிலுமாக வேதவாக்கியங்களைப் பற்றிச் சிறிது பேசுகிறேன். ஆனால் இப்போது, கர்த்தருக்குச் சித்தமானால், நாளை முதல் சிக்காகோவில், தேவனுக்குச் சித்தமானால், அங்கே கீழேயுள்ள சபைக்கு—சபைக்குச் சிறிது பிரசங்கிக்கச்

செல்லவிருக்கிறேன். சிக்காகோவில் வசித்துக் கொண்டு, இப்போது நடைபெறும் மற்ற எந்த எழுப்புதல் கூட்டங்களிலும் கலந்துகொள்ளாத நீங்கள், நீங்கள் மற்ற எழுப்புதல் கூட்டங்களில் கலந்துகொள்ளாமல் சிக்காகோவில் வசிப்பவர்களாக இருந்தால், வருகிற வாரம் லேன் டெக் ஆடிட்டோரியத்திற்கு வாருங்கள். நகரத்தில் ஒரு மாநாடு நடத்துகிறார்கள், அங்கே ஒவ்வொரு இரவும் நான் பேசுகிறேன், அது மிகவும் மகிழ்ச்சியாக இருக்கும்.

அங்கே உங்களுக்கு அன்பானவர்கள் யாராவது இருந்தால், அவர்களுக்கு ஒரு கடிதம் அனுப்பி அவர்களை வரும்படி சொல்லுங்கள். ஒருவேளை அவர்கள்—அவர்கள் இரட்சிக்கப் படாமல் இருந்தால், ஒருவேளை கர்த்தர் அவர்களை இரட்சிக்கலாம். அவர்கள் வியாதியாயிருந்தால், ஒருவேளை கர்த்தர் அவர்களைக் குணமாக்கலாம். ஆகவே, நாங்கள் உங்களுக்கு நன்றி கூறுகிறோம்.

11 இப்போது, பரிசுத்த லூக்கா எழுதிய சுவிசேஷப் புத்தகத்தில், 2-ம் அதிகாரத்தில், வாசிப்பதற்கு மிகவும் பரிச்சயமான ஒரு சிறிய

வேதப்பகுதியை, நான் 25-ம் வசனத்திலிருந்து தொடங்கிக் வாசிக்கிறேன்:

அப்பொழுது சிமியோன் என்னும் பேர்கொண்ட ஒரு மனுஷன் எருசலேமில் இருந்தான்; அவன் நீதியும் தேவபக்தியும் உள்ளவனாயும், இஸ்ரவேலின் ஆறுதல் வரக்காத்திருக்கிறவனாயும் இருந்தான்; அவன் மேல் பரிசுத்த ஆவி இருந்தார்.

கர்த்தருடைய கிறிஸ்துவை நீ காணுமுன்னே மரணமடையமாட்டாய் என்று பரிசுத்த ஆவியினாலே அவனுக்கு அறிவிக்கப் பட்டுமிருந்தது.

அவன் ஆவியின் ஏவுதலினால் தேவாலயத்திலே வந்திருந்தான். இயேசு என்னும் பிள்ளைக்காக நியாயப்பிரமாணமுறைமையின்படி செய்வதற்குத் தாய் தகப்பன்மார் அவரை உள்ளே கொண்டுவருகையில்,

அவன் அவரைத் தன் கைகளில் ஏந்திக்கொண்டு தேவனை ஸ்தோத்திரித்து:

ஆண்டவரே, உமது வார்த்தையின்படி உமது அடியேனை இப்பொழுது சமாதானத்தோடே போகவிடுகிறீர்;

உம்முடைய இரட்சணியத்தை என் கண்கள் கண்டது என்றான்.

கர்த்தர் தமது வார்த்தையை வாசித்ததை ஆசீர்வதிப்பாராக. இது சிமியோன், வேதாகமத்தின் ஒரு முதிர்ந்த ஞானி. நாம் பேசுவதற்கான ஒரு சிறிய தலைப்பை எடுத்துக்கொள்ள வேண்டுமென்றால், அது "எதிர்பார்ப்பு" என்பதாக இருக்கும்.

உங்களுக்குத் தெரியும், பொதுவாக, மக்கள் எதை எதிர்பார்க்கிறார்களோ அதையே பெறுகிறார்கள், அப்படித்தானே? நீங்கள் பாருங்கள், சிலர் கூட்டங்களுக்கு வந்து, "உங்களுக்கு ஒன்று தெரியுமா, நான் இது போன்ற எதையும் நம்புவதில்லை. நான் சும்மா போகிறேன்; அதில் ஒன்றுமே இல்லை என்று எனக்குத் தெரியும்" என்று சொல்வார்கள். சரி, பிசாசு நிச்சயமாக உங்களுக்கு ஏதேனும் ஒன்றைக் காட்டுவான்; நீங்கள் அதை எதிர்பார்க்கிறீர்கள்; அவன் உங்களுக்குச் சரியில்லாத ஒன்றை—அதாவது நீங்கள் எதிர்பார்த்ததை மட்டுமே காட்டுவான்.

ஆனால் நீங்கள் அங்கே சென்று கூட்டத்திலிருந்து நல்லதைப் பெற வேண்டும் என்று எதிர்பார்த்தால், தேவனும் உங்களுக்கு ஏதேனும் ஒன்றைக் காண்பிப்பார். எனவே நீங்கள் பொதுவாக எதை எதிர்பார்க்கிறீர்களோ அதையே பெறுகிறீர்கள். ஆகையால் இன்று இரவு நம்முடைய எதிர்பார்ப்புகளை உயர்வாக வைத்துக்கொள்வோம். இன்று இரவு நான் இங்கே சில சக்கர நாற்காலிகளையும், ஒன்று அல்லது இரண்டு கட்டில்களையும் காண்கிறேன். நேற்றிரவு சக்கர நாற்காலியில் இருந்த அந்தப் பெண் நடப்பதைப் போல நாளையும் நீங்கள் நடக்கப் போகிறீர்கள் என்ற எதிர்பார்ப்பை நீங்களும் நானும் வளர்த்துக் கொள்வோம். இன்று இரவு கட்டிலில், ஸ்ட்ரெச்சரில் இருக்கிற நீங்கள், ஒருவேளை நம்பிக்கையற்ற நிலையில் இருக்கலாம், ஆனால் இங்கே ஸ்ட்ரெச்சரில் இருந்த இந்தப் பெண்ணும் அப்படித்தான் நம்பிக்கையற்ற நிலையில் இருந்தாள். அவளைப் போலவே நாளையும் நாம் இங்கே தேவனைத் துதித்துக்கொண்டு நடமாடப் போகிறோம் என்ற பெரிய எதிர்பார்ப்புகளுடன் இன்று இரவு நம்

விசுவாசத்தைக் கட்டியெழுப்புவோம். நீங்கள் பார்க்கிறீர்களா?

12 சகோதரி நீங்களும் இங்கே அதையே செய்யுங்கள். இப்போது, உங்கள் ஆர்த்ரைடிஸை குணமாக்குவது தேவனுக்கு ஒரு காரியமே இல்லை; அவர் அதைக் குணமாக்க முடியும் என்பது உங்களுக்குத் தெரியும். அவர் அதைச் சொஸ்தமாக்க முடியும், மேலும் அவர்—அவர் விரும்புவதையெல்லாம் செய்ய முடியும் (பார்க்கிறீர்களா?), அல்லது நீங்கள் அவரைச் செய்ய அனுமதிப்பதையெல்லாம் அவர் செய்வார். அவர் அதைச் செய்வதற்கு உங்கள் விசுவாசம் அவரை அனுமதிக்க வேண்டும். இப்போது பாருங்கள், இங்கே உள்ள நீங்கள் அனைவரும் மனதளவில் சரியாக இருக்கிறீர்கள். ஆனால் இங்கே உள்ள இந்த ஏழைச் சிறிய சகோதரி மனதளவில் சரியாக இல்லை. அவளுக்கு மிகுந்த அழுத்தம் இருந்தது; அவள் சுயநினைவுடனும், சுயநினைவற்றும் இருந்தாள், மூளையில் அழுத்தம், எல்லாம் தவறாக இருந்தது, புகழ்பெற்ற மேயோ பிரதர்ஸ் கூட அவளுக்கு ஒன்றும் செய்ய முடியவில்லை. ஆனால் இயேசுவால் முடிந்தது. அப்படியானால்

பார்க்கிறீர்களா? அந்த நிலையில் அவள் அங்கே படுத்திருந்தபோது, தேவனுடைய இறை யாண்மை...

நான் இன்று அவளைப் பற்றி விசாரித்துக் கொண்டிருந்தேன், என் மகனிடமும் மற்றவர்களிடமும் அந்தப் பெண் எந்த நிலையில் படுத்திருந்தாள் என்று கேட்டுக் கொண்டிருந்தேன். நான் முன்னோக்கிப் பார்த்து அந்தத் தரிசனத்தைக் கண்டு, அவள் ஒரு மருத்துவமனை இருந்த இடத்திலிருந்து வந்தாள் என்றும், அங்கே மிகப்பெரிய உயரமான கோபுரத்தைக் கொண்ட இடம் இருந்தது என்றும் மற்ற காரியங்களையும் சொன்னேன். அவள் மறுபக்கத்தில், அந்த வழியில், பலிபீடத்தின் முன்புறத்தை நோக்கி, அங்கே சுற்றிலும் படுத்திருந்தாள். நான்—பரிசுத்த ஆவியானவர் அவளைச் சுற்றிச் சென்று, அவளை வெளியே இழுத்து, அவளைக் குணமாக்கி, அவளைச் சொஸ்தமாக்குகிறார். அவர் மிகவும் அன்பானவர்.

13 இப்போது, இன்றிரவு அவரை நம்புங்கள், அவர் உங்களுக்கும் அதே போலச்

செய்வார். ஏனென்றால் அவர் பட்சபாதமுள்ளவர் அல்ல; அவர் விசுவாசத்தையே மதிக்கிறார். தேவன் விசுவாசத்தை மட்டுமே கனப்படுத்துவார். சில நேரங்களில் உங்கள் இரட்சிப்பு கூட—உங்கள் சுகத்துக்காகப் பிராயச்சித்தம் செய்யாது. உங்கள் இரட்சிப்பின் தகுதியினால் அல்ல, அதனாலோ நீங்கள் சுகமடையவில்லை; உங்கள் விசுவாசத்தின் தகுதியினாலேயே நீங்கள் சுகமடைகிறீர்கள். பார்க்கிறீர்களா?

கிறிஸ்தவர்கள், புகழ்பெற்ற கிறிஸ்தவர்கள் மேடைக்கு வந்து, குணமடையாமல் செல்வதையும், ஒரு வேசி மேடையில் நடந்து வந்து, உடனடியாகக் குணமடைவதையும் நான் பார்த்திருக்கிறேன். பார்க்கிறீர்களா? ஏனென்றால் அந்தக் கிறிஸ்தவர் பல இடங்களுக்கு இழுத்தடிக்கப் பட்டிருப்பார், சந்தேகப் படுகிறவராக, "அற்புதங்களின் நாட்கள் முடிந்துவிட்டனவோ?" என்று ஒருவிதமாக விசுவாசிக்கிறவராக இருப்பார். அவர்கள் அதைப் பெறாமல் தவறவிட்டுச் சென்றுவிடுவார்கள். ஆனால் ஒரு பாவம் செய்த ஏழை வேசியோ, தான் குற்றவாளி

என்பதையும், தேவனுக்கு முன்பாக ஆக்கினைக்குள்ளானவள் என்பதையும் அறிந்து மேடைக்கு வந்து, அங்கே தன் இருதயத்தைக் கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுத்து, எந்தவொரு— எந்தவொரு தடையுமின்றி உடனடியாகச் சுகமடைந்து நடந்து செல்வாள். ஆகவே இது உங்கள் விசுவாசத்தின் தகுதியைச் சார்ந்ததே.

இயேசுவின் நாட்களில் பாருங்கள், பரிசேயர்களும் சதுசேயர்களும் எப்படிச் சந்தேகத்தோடு கடந்து சென்றார்கள் என்று. அந்த நாளின் தெருவோரப் பெண்கள் மற்றும் பலர், மற்றும் பிச்சைக்காரர்கள், மற்றவர்கள் குணமடையாத நிலையில் இவர்கள் குணமடைந்தார்கள். பார்க்கிறீர்களா? அது உங்கள் விசுவாசத்தின் தகுதியினாலேயே இருந்தது.

14 இப்போது, எதிர்பார்ப்புடன் இருப்பதைக் குறித்தும், நீங்கள் எதைப் பெற்றுக்கொள்ளலாம் என்று எதிர்பார்க்கலாம் என்பதைக் குறித்தும் இன்றிரவு நாம் சற்றுப் பேசப்போகிறோம். நம்முடைய எதிர்பார்ப்புகளை உயர்வாக வைத்துக்கொள்வோம். இப்போது, அடுத்த சில

நிமிடங்களுக்கு நான் அதைக் குறித்துப் பேச விரும்புகிறேன்.

இப்போது நண்பரே, நீங்கள் முதலில் சிந்திக்க வேண்டிய காரியம், எப்போதுமே— தேவனுடைய வார்த்தையைத்தான். நேற்றிரவு நான் சொன்னது போல, தேவனுடைய வார்த்தை ஒரு விதை. அந்த விதை சரியான நிலத்தில் விதைக்கப்படும்போது, அந்த விதை எதைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறதோ அதை அது உருவாக்கும். ஒரு விதை இருந்து, அது கோதுமையாக இருந்தால், அந்தக் கோதுமையில் ஜீவன் இருந்து, அந்தச் சரியான விதை சரியான வகையான நிலத்தில் சென்றால், கோதுமையை உருவாக்கும். சோளம் சோளத்தை உருவாக்கும். வாற்கோதுமை வாற்கோதுமையை உருவாக்கும். அதுபோலவே, தேவனுடைய ஒவ்வொரு தெய்வீக வாக்குத்தத்தமும், அது சரியான இடத்தில் வைக்கப்படுமானால், அது எதை உருவாக்குமென்று வாக்குத்தத்தம் செய்ததோ அதைச் சரியாக உருவாக்கும்.

15 இன்று நான் ஒரு நண்பரிடம் சொன்னது போல், "அது சூழ்நிலைதான்." அது

அப்படித்தான் இருக்கிறது. நீங்கள் விரும்புகிறீர்கள்... இன்றிரவு இங்கே ஒரு பெரிய சுகமளிக்கும் ஆராதனையைப் பெற நீங்கள் விரும்பினால், நீங்கள் சுகமடையப் போகிறீர்கள் என்று நம்புகிற ஒரு பெரிய விசுவாசத்தின் சூழ்நிலையை நாம் கொண்டிருப்போம். பார்க்கிறீர்களா? இப்போது, இயேசு இங்கே மேடையிலோ அல்லது வெளியேயோ எவ்வளவு உண்மையாக இருந்தாலும் சரி, நீங்கள் சுகமடைவதற்கான சூழ்நிலை சரியாக இல்லாவிட்டால் அவரால் உங்களைக் குணமாக்க முடியாது. பார்க்கிறீர்களா?

இப்போது பாருங்கள், இயேசு தம்முடைய சொந்த ஊருக்குச் சென்றபோது, அவர்களின் [சபையார், "அவிசுவாசம்" என்கிறார்கள்] அவிசுவாசத்தினிமித்தம், அங்கே அநேகத்த பலத்த செய்கைகளை அவரால் செய்ய முடியவில்லை, சரிதான், அவிசுவாசம்தான். அவர் எவ்வளவு பெரியவராக இருந்தபோதிலும், அவர் மாம்ச சரீரத்தில் வெளிப்பட்ட யெகோவா தேவனாக இருந்தார். தேவன் உலகத்தைத் தமக்கு ஒப்புரவாக்கிக்கொண்டு கிறிஸ்துவுக்குள்

இருந்தார். ஆனால் விசுவாசம் வரும்வரை அவரால் அசைய முடியவில்லை.

16 சகோதரர் போஸ்வொர்த்தை எத்தனை பேருக்குத் தெரியும்? உங்கள் அனைவருக்கும் தெரியும் என்று எனக்குத் தெரியும். அவர் நகைச்சுவை செய்வதில் கெட்டிக்காரர், மோசமானவை அல்ல, நல்ல நகைச்சுவைகள். ஆனால் அது அல்ல—உலகம் எதைச் சொல்கிறதோ அதை நான் சொல்கிறேன்... அமெரிக்க மக்கள் பெரும்பாலும் அப்படித்தான் இருக்கிறார்கள்; அவர்கள் பொழுதுபோக்கைத் தேடுகிறார்கள். அதனால்தான் இன்று நமது சபைகள் மிகவும் தடம் மாறிவிட்டன, ஏனென்றால் அவர்களிடம் நிறைய ஹாலிவுட் சுவிசேஷம் இருக்கிறது. அது சரிதான், ஏராளமான கவர்ச்சிப் பையன்கள் வெளியே வந்து, நடித்துக்கொண்டு, நிறைய காரியங்களைச் செய்துகொண்டு, தங்களை அலங்கரித்துக் கொண்டு, நிறைய உளவியலைச் செலுத்த முயற்சிக்கிறார்கள், ஆனால் நானோ, சுவிசேஷத்தை உண்மையாகவே வெளிக் கொண்டுவரக் கூடிய, பழைய காலத்து

இரத்தத்தால் கழுவப்பட்ட சுவிசேஷத்தை விரும்புகிற ஒரு வகையைச் சேர்ந்தவன். அது சரிதான்.

நாம் நிறைய ஆடம்பரங்களையும், கிளாசிக் காரியங்களையும், எல்லாவற்றையும் கொண்டு செல்ல வேண்டும் என்று நான் நம்பவில்லை. சுவிசேஷத்தை தூய்மையாகவும், தெளிவாகவும், எளிமையாகவும் வையுங்கள். வெப்ஸ்டருக்குக் கூடத் தெரியாத பெரிய வார்த்தைகளை நீங்கள் பேச வேண்டியதில்லை; நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் சுவிசேஷத்தை தெளிவாகவும் உண்மையாகவும் பிரசங்கிப்பது மட்டுமே; அவர்கள் அதைப் புரிந்துகொள்வார்கள்.

17 சமீபத்தில் ஃபோர்ட் வேனில், அவர்கள்... "வி தி பீப்பிள்" (We The People) என்ற பத்திரிகையை வாங்கும் நீங்கள் அனைவரும், அங்கே அவருக்காக நடந்த எனது கூட்டத்தில் ஒரு சிறிய பார்வையற்ற சிறுமி குணமாக்கப்பட்டதை குறித்து, கர்த்தர் செய்ததை, அவர்கள் ஒரு கட்டுரையாக எழுதினார்கள். அசெம்பிளி ஆஃப் காட் மக்களே, அது உங்கள் "எவாஞ்செல்" (Evangel)

மற்றும் பலவற்றில் வெளிவந்தது. எனவே அந்த நாள் இரவு நாங்கள் மேடையிலிருந்து வந்தோம், கோணலான பாதங்களைக் கொண்ட ஒரு சிறிய குழந்தையின் கால்கள் நேராக்கப்பட்டன, மற்றும் ஒரு-மற்றும் ஒரு சிறிய பார்வையற்ற சிறுமி தன் பார்வையைப் பெற்றாள். எனவே அவர்கள் அதை மதங்கள் மற்றும் பலவற்றைப் பற்றிப் பேசும் "எவாஞ்செல்" மற்றும் "வி தி பீப்பிள்" ஆகியவற்றில் போட்டிருந்தார்கள். இது ஒரு... உலகம் முழுவதும் செல்கிறது மற்றும் காரியங்களின் நிகழ்வுகளைப் பற்றி அது எழுதுகிறது.

எனவே, எனக்காக அவர்கள் பாடும் என்னுடைய பாடல் பாடப்படும் மேடையின் பின்புறத்தில் நான் இருந்தேன்... என் பழைய நண்பர் பால் ரேடர் அதை எழுதினார், "ஒன்லி பிலீவ்" (Only Believe). நான் அங்கே பின்புறத்தில் சிந்தித்துக் கொண்டிருந்தேன், அது மைக்ரோஃபோன் வழியாக வருவதைக் கேட்டபோது, நினைத்துப் பாருங்கள், இதே அறையில்தான் பால் அந்தப் பாடலை எழுதினார். அவர் நீண்ட காலத்திற்கு முன்பே

மகிமைக்குச் சென்றுவிட்டார். நான்-நான் அங்கே பின்புறத்தில் இருந்தேன், அங்கே ஒரு மனிதர் வந்தார், அவரை வைத்து என்ன செய்வது என்று அவருக்குத் தெரிந்த அறிவை விட அவருக்கு அதிக கல்வி இருந்தது என்று நான் நினைக்கிறேன். அவர் கூறினார், "சகோதரர் பிரன்ஹாம்," அவர் கூறினார், "உங்கள் செய்தி நன்றாக இருந்தது," அவர் கூறினார், "ஆனால், ஓ, உங்கள் இலக்கணம்."

நான் சொன்னேன், "ஆம், ஐயா, அது சரிதான்." நான் சொன்னேன்-நான் சொன்னேன், "என் இலக்கணம் மிகவும் மோசமானது என்று எனக்குத் தெரியும்." நான் சொன்னேன், "அதற்காக நான் வருந்துகிறேன்." நான் சொன்னேன், "நான் பத்து பேர் கொண்ட குடும்பத்தில் வளர்ந்தேன், நான்தான் மூத்தவன். என் அப்பா இறந்துவிட்டார், நான் பத்து குழந்தைகளையும் என் அம்மாவையும் கவனித்துக் கொள்ள வேண்டியிருந்தது..." நான் சொன்னேன், "கல்வி கற்க எனக்கு ஒரு வாய்ப்பு கிடைக்கவில்லை."

"ஓ, அதெல்லாம் இப்போது ஒரு காரணமல்ல," என்றார், "நீங்கள் ஒரு மனிதர்."

நான் சொன்னேன், "ஆம், அது சரிதான் என்று எனக்குத் தெரியும்." நான் சொன்னேன், "ஆனால் கர்த்தர்... நான் சுவிசேஷ ஊழியத்திற்குச் செல்லும் வரை நான் மிகவும் கடினமாக உழைக்க வேண்டியிருந்தது," நான் சொன்னேன், "பின்னர் நான் இங்கே ஆரம்பித்தபோது," நான் சொன்னேன், "எல்லா இடங்களிலிருந்தும் மக்கள் என்னை அழைக்கிறார்கள், எனக்கு ஒரு வாய்ப்பு கூட கிடைக்கவில்லை."

அவர் கூறினார், "ஓ, நீங்கள் ஒரு தொலைதூரக் கல்விப் படிப்பை மேற்கொள்ளலாம்." அவர் கூறினார், "உங்கள் இலக்கணம் மிகவும் மோசமாக இருக்கிறது."

நான் சொன்னேன், "அது மோசமானது என்று எனக்குத் தெரியும், சகோதரரே." நான் சொன்னேன், "நான் அதை வெறுக்கிறேன், ஆனால் என்னால் ஒன்றும் செய்ய முடியவில்லை."

அவர் சொன்னார், "நீங்கள் 'ஹெய்ன்ட்' (hain't), மற்றும் 'ஹிஸ்' (his), மற்றும் 'டெய்ன்ட்' (tain't) போன்ற வார்த்தைகளைப் பயன்படுத்துகிறீர்கள், மற்றும்..."

நான் சொன்னேன், "நல்லது, அவர்கள் அதை நன்றாகப் புரிந்துகொள்வதாகத் தெரிகிறது." நான் சொன்னேன்...?...

அவர் கூறினார், "சரி," அவர் கூறினார், "பாருங்கள், சகோதரர் பிரன்ஹாம், நீங்கள் செய்யும் ஒரு தவறு, அப்படிப்பட்ட பார்வையாளர்களுக்கு முன்னால் மிகவும் மோசமாக இருக்கிறது." கூறினார், "நீங்கள், 'மக்கள் இந்தப் போல்பிட்டிற்கு (polpit) வருகிறார்கள்' என்று சொன்னீர்கள்." கூறினார், அவர்கள்... மேலும் அவர் கூறினார், "நீங்கள் 'போல்பிட்' என்று சொல்லக்கூடாது."

நான் சொன்னேன், "சரி, அது அப்படித்தானே?" மற்றும் நான்...

அவர் கூறினார், "இல்லை," என்றார், "நீங்கள் 'போல்பிட்' என்று சொல்லாமல் 'புல்பிட்' (pulpit) என்று சொன்னால் உங்கள்

சபை உங்களை இன்னும் அதிகமாகப் பாராட்டும்."

18 ஹ்ம்ம். நான் சொன்னேன், "சகோதரரே, உங்களுக்கு ஒன்று தெரியுமா? நான் உங்களை நேசிக்கிறேன்." ஆனால் நான் சொன்னேன், "நான் உங்களுக்குச் சொல்கிறேன், நான் 'போல்பிட்' என்று சொன்னாலும் அல்லது 'புல்பிட்' என்று சொன்னாலும் அந்த மக்கள் அதைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. நான் சுவிசேஷத்தை தெளிவாகப் பிரசங்கிக்க வேண்டும் மற்றும் நான் பேசுவதை உருவாக்கிக் காட்ட வேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்கள்." நான் சொன்னேன், "அவர்கள் சரியாக அப்படித்தான் இருக்கிறார்கள். எப்படியிருந்தாலும் நான் வெறும் ஒரு பழைய கிராமத்து விவசாயி என்பது அவர்களுக்குத் தெரியும், எனவே நான்-நான் இல்லாத ஒன்றாக என்னால் இருக்க முடியாது; எனவே நான் அப்படித்தான் பேச வேண்டியிருக்கிறது. எனவே நீங்கள் அதை அப்படியே மன்னித்துவிடுங்கள்; எனக்குத் தெரிந்த ஒரே வழி அதுதான்." ஆகையால், ஆனால் எனக்குத் தெரிந்த ஒரு

காரியம், இயேசு என்னை இரட்சித்தார், நான் அவரை முழு இதயத்தோடும் நேசிக்கிறேன். மேலும் அவர் எனக்கு மகிமையில் ஒரு வீட்டைக் கொடுப்பதாக வாக்குத்தத்தம் செய்துள்ளார், நான் அதை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். அவர் செய்த இந்த நற்செய்தியைச் சொல்லி, என்னால் முடிந்தவரை பலரை அங்கே அழைத்துச் செல்ல நான் விரும்புகிறேன்."

19 இப்போது, மற்றும் இப்போது, நீங்கள் நினைவில் கொள்ளுங்கள், வியாதியஸ்தர்களுக்காக ஜெபிக்கும்படி ஒரு சுவிசேஷ கூட்டத்திற்கோ அல்லது ஒரு நபர் வருவதற்கோ நீங்கள் இப்போது காத்திருக்க வேண்டியதில்லை, உங்களுக்கே அந்த உரிமை இருக்கிறது. நினைவில் கொள்ளுங்கள், வரங்களும் அழைப்புகளும் அற்புதமானவை; ஆனால் நினைவில் கொள்ளுங்கள், இயேசு கிறிஸ்துவுக்கு அடுத்தபடியாக தேவன் உலகிற்கு கொடுத்த மிகப் பெரிய காரியம் இங்கே இருக்கிறது, அதுதான் வேதாகமம். உங்களுக்கு ஒன்று தெரியுமா? தேவனுடைய வார்த்தை

பிசாசை எந்த இடத்திலும், எங்கும், எந்த நேரத்திலும், அவனுடைய சொந்த இடத்திலேயே தோற்கடிக்கும். அது உங்களுக்குத் தெரியுமா? தேவனுடைய வார்த்தை மட்டுமே...

மிகவும் பலவீனமான கிறிஸ்தவன்கூட அதைச் செய்யக்கூடிய அளவிற்கு இயேசு அதை மிகவும் எளிதாக்கினார். இயேசு பூமிக்கு வந்தபோது பாருங்கள்: அவர் தேவனுடைய குமாரனாக இருந்தார், அதை நீங்கள் நம்பவில்லையா? அவர் மரியாளின் கர்ப்பத்தில் உற்பவிக்கப்பட்டு கன்னிப் பிறப்பாகப் பிறந்தார். சர்வவல்லமையுள்ள தேவன் மரியாள் மேல் நிழலிட்டு, கிறிஸ்து இயேசுவாகிய குமாரனைக் கொண்டுவந்த அந்த இரத்த அணுவை சிருஷ்டித்தார். தேவனாகிய யெகோவா, அந்த சரீரத்தில், தமது குமாரனுக்குள் தாமே வாசம்பண்ணினார். பிதா குமாரனுக்குள் வாசஸ்தலமாக வாசம் பண்ணினார்.

20 அவர் இங்கே பூமியில் இருந்தபோது, அவர் உள்ளே சென்றார்... யோவானின் ஞானஸ்நானத்தில் அவர் ஆவியானவராலே

நிரப்பப்பட்ட பிறகு, அவர் வனாந்தரத்திற்குச் சென்றார், நாற்பது நாட்கள் சோதிக்கப்பட்டார்; வெளியே வரும்போது, பிசாசு அவரை சந்தித்தான். அவர் நிச்சயமாக, மோசேயின் எதிர்-மாதிரியாக இருந்தார். அவன் மோசேயை அவனுடைய பலவீனமான இடத்தில் சோதித்தான். மோசே தனது கோபத்தினால், கட்டளைகள் அனைத்தையும் உடைத்தார். அது ஆசாரியத்துவம் உடைக்கப்படும் என்பதைக் காட்டியது.

ஆனால் இயேசுவின் போது, அவருடைய பலவீனமான இடம்: அவர் பசியாயிருந்தார்; அவர் நாற்பது நாட்கள் உபவாசம் இருந்தார். மேலும் அவர்-சாத்தான் அவரை சந்தித்து, "நீர் தேவனுடைய குமாரனேயானால், இந்தக் கல்லுகள் அப்பங்களாகும்படி சொல்லும்" என்றான். இப்போது இயேசு தமக்குள் தேவனுடைய எல்லா வல்லமைகளையும் கொண்டிருந்தாலும், அவர் தனது எந்த வல்லமையையும் பயன்படுத்தவில்லை; குறைந்தபட்ச கிறிஸ்தவர்கள், அல்லது பலவீனமான கிறிஸ்தவர்கள், அதையே பயன்படுத்தக் கூடிய அளவிற்கு அவர் அதை

மிக எளிமையாகக் கொண்டுவந்தார். அவர் கூறினார், "மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே".

21 அவன் அவரை தேவாலயத்தின் உப்பரிகையின்மேல் கொண்டுபோய் நிறுத்தி, "நீர் இங்கிருந்து கீழே குதியும், அவர் தம்முடைய தூதர்களுக்கு உம்மைக் குறித்துக் கட்டளையிடுவார்," மற்றும் பல என்று சொன்னான்.

இயேசு, "எழுதியிருக்கிறதே" என்று மீண்டும் பிதாவின் வார்த்தையைச் சொன்னார்.

மேலும் அவன் அவரை ஒரு மலையின் மீது கொண்டுபோய், உலகத்தின் சகல ராஜ்யங்களையும், அவை ஒவ்வொன்றையும் அவருக்குக் காண்பித்து, "இவையெல்லாம் என்னுடையவை, நான் விரும்பியபடி இவைகளைச் செய்வேன்" என்றான். நமக்கு ஏன் போர்கள் மற்றும் எல்லாம் இருக்கின்றன என்பதை நீங்கள் காண்கிறீர்கள். இப்போது

இந்த உலகத்தின் அதிபதி யார் என்று. மேலும் அவன், "நீர் சாஷ்டாங்கமாய் விழுந்து, என்னைப் பணிந்துகொண்டால், இவைகளை யெல்லாம் உமக்குத் தருவேன்" என்றான்.

இயேசு அவனிடம், "உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே" என்றார். மேலும் இயேசு பிதாவின் வார்த்தையின் மூலம் சாத்தானைத் தோற்கடித்தார்.

நீங்களும் அதே காரியத்தைச் செய்ய முடியும். அது சரியில்லை என்று சொல்லி அவன் உங்களை எவ்வளவு மோசமாகச் சோதித்தாலும், அது வெறும்... "எழுதியிருக்கிறதே" என்று சொல்லுங்கள். அது எதுவாக இருந்தாலும், தேவனுடைய வார்த்தை சாத்தானை எங்கும் தோற்கடிக்கும். நீங்கள் அவனுடன் நேருக்கு நேர் நின்று, "எழுதியிருக்கிறதே." "தேவன் அப்படிச் சொன்னார்; அது அதைத் தீர்த்துவிடுகிறது" என்று சொன்னால். தேவன் அப்படிச் சொன்னால்; அது உண்மையில் அதை

சத்தியமாக்குகிறது. சகல வானங்களும் பூமியும் ஒரு நாள் சுருட்டப்பட்டு, இனி இல்லாமல் போகும். ஆனால் தேவனுடைய வார்த்தை நித்தியமானது மற்றும் தவறாது, ஏனென்றால் தேவன் அதைப் பேசியிருக்கிறார். மற்றும் அவர்...

22 இன்றிரவு நீங்கள் அமர்ந்திருக்கும் இந்த பூமியே தேவனுடைய வார்த்தையைத் தவிர வேறொன்றுமில்லை என்பதை நீங்கள் உணருகிறீர்களா? தேவன் தமது சொந்தமாகப் பேசப்பட்ட வார்த்தையிலிருந்து உலகத்தை உண்டாக்கினார் என்பது உங்களுக்குத் தெரியுமா? உங்களுக்குத் தெரியாவிட்டால், அவருக்கு அந்தப் பொருட்கள் எங்கிருந்து கிடைத்தன? அவர், "உண்டாகக்கடவது" என்றார். அது உருவாகி ஒரு உலகத்தை உருவாக்கியது. "உண்டாகக்கடவது." வெளிச்சம் உண்டாயிற்று. "உண்டாகக்கடவது." அவர் தமது சொந்த வார்த்தையை நம்பினார். அவருடைய சொந்த வார்த்தை பூமியை சிருஷ்டிப்புக்குள் கொண்டுவந்தது. இல்லாத மற்றும் தோன்றாத காரியங்களிலிருந்து அவர் உலகத்தை

உண்டாக்கினார், ஆனாலும் இன்றிரவு நீங்கள் அமர்ந்திருக்கும் பூமியை அவர் உண்டாக்கினார். இன்றிரவு நீங்கள் அமர்ந்திருக்கும் நாற்காலியை அவர் உருவாக்கினார்; அவர் பேசிய வார்த்தை அந்தப் பொருளை பூமிக்குள் கொண்டுவந்தது, அது தேவனுடைய வார்த்தை. ஆமென். நாம் காண்கிற எல்லாமே அவர் பேசிய வார்த்தையால் உருவாக்கப்பட்டிருக்கும்போது, நாம் எவ்வளவு சிறியவர்கள், எவ்வளவு அற்பமானவர்கள், மற்றும்-மற்றும்-மற்றும் தேவனுடைய வார்த்தையை அவிசுவாசிப்பது எவ்வளவு அற்பமானது என்று நீங்கள் சிந்திக்கத் தொடங்குவீர்கள். அவர் அதைப் பேசி இருப்புக்குக் கொண்டுவந்தார்.

அவர் உங்களைப் பேசி இருப்புக்குக் கொண்டுவந்தார். அவர் என்னைப் பேசி இருப்புக்குக் கொண்டுவந்தார். ஓ, ஆச்சரியமே, நாம் அதை நினைக்கும் போது, அவர் யார் என்பதை நாம் காணும்போது அந்த பழைய சிறிய சந்தேகங்கள் எல்லாம் விலகிப்போய்விடுகின்றன. ஏன், அவர் தமது கைகளை நீட்டி, "ப்ஃப்ஃப்!" என்று ஊதி சந்திரனையும் நட்சத்திரங்களையும் இருப்புக்குக்

கொண்டுவந்தார். அதைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? சூரிய குடும்பத்தை உருவாக்கியது யார்...

23 நீண்ட காலத்திற்கு முன்பல்ல, அங்கே பாலோமர் மலையில் ஒரு கண்ணாடியின் வழியே பார்த்துகொண்டு நின்றபோது, என்னால் நூற்று இருபது மில்லியன் ஒளியாண்டு தூரத்தைப் பார்க்க முடிந்தது. அதை மைல்களாகப் பிரித்துப் பாருங்கள், அது எவ்வளவு தூரம் இருக்கும் என்று பாருங்கள். அதற்கும் அப்பால் இன்னும் சந்திரன்களும், நட்சத்திரங்களும், உலகங்களும் இருந்தன. என் பிதா அவற்றைப் பேசி இருப்புக்குக் கொண்டுவந்தார், நீங்கள் அவருடைய வார்த்தையை விசுவாசிக்கும்படி தமது குமாரனை இங்கே மரிப்பதற்காக அனுப்பிய அதே நபர்தான் அவர். தேவனுடைய ஆவியினால் நீங்கள் மறுபடியும் பிறக்கும்வரை உங்களால் அவருடைய வார்த்தையைச் சரியாக விசுவாசிக்க முடியாது. அது ஆழமானது, அது கடினமானது, ஆனால் அது சரியானது.

இன்று உலகத்திற்கு என்ன பிரச்சனை என்றால், நம்மிடம் அதிகமான அறிவுபூர்வமான மதம் இருக்கிறது. அறிவுபூர்வமான... என்று சொல்லக்கூடிய ஒன்று இருக்கிறது. நான் கடுமையாகப் பேச விரும்பவில்லை, மக்களின் உணர்வுகளைப் புண்படுத்த நான் விரும்பவில்லை, ஆனால் இன்று இந்த தேசத்தைக் கடந்து வார்த்தையைப் பிரசங்கிக்கும் இந்த சுவிசேஷகர்களிடம் உள்ள பிரச்சனை என்னவென்றால், அவர்கள் சென்று ஒரு பெரிய கூட்டத்தை நடத்துவதாகவும், ஆயிரக் கணக்கானோர் மனந்திரும்பியிருப்பதாகவும் கூறுகிறார்கள், ஆனால் சில வாரங்கள் கழித்துச் சென்று பார்த்தால், அவர்களில் யாருமே அங்கு மிச்சமிருப்பதில்லை. அது என்ன? அவர்கள் ஒரு அறிவுபூர்வமான விசுவாசத்தைப் பெறுகிறார்கள்.

24 இப்போது, தேவன் அறிவுபூர்வமான விசுவாசத்தினால் அறியப்படுவதில்லை. தேவன் புதிய பிறப்பின் அனுபவத்தால் மட்டுமே அறியப்படுகிறார். இயேசு, "ஒருவன் தேவனுடைய ஆவியினாலே மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக்

காணமாட்டான்" என்று கூறினார். இப்போது, இங்குள்ள எந்தவொரு வேதாகம அறிஞருக்கும் தெரியும், அங்கே "காண" என்ற வார்த்தைக்கு "உங்கள் கண்களால் பார்ப்பது" என்று அர்த்தமல்ல. அதற்கு "புரிந்துகொள்வது" என்று அர்த்தம்.

நீங்கள்-நீங்கள் சொல்கிறீர்கள், "நான்... ஏதோ ஒன்றைப் பார்த்துவிட்டு, "என்னால் அதைப் பார்க்க முடியவில்லை (புரிந்துகொள்ள முடியவில்லை)" என்று சொல்கிறீர்கள். அதன் அர்த்தம்; உங்களுக்கு அது புரியவில்லை; நீங்கள் அதை நேராகப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் உங்கள் கண்களால் பார்க்கிறீர்கள், ஆனால் உங்கள் இதயத்தால் புரிந்துகொள்கிறீர்கள். அது சரிதான். உங்களால் அதைப் புரிந்துகொள்ள முடியாது. முதலில் நீங்கள் தேவனுடைய ஆவியினால் மறுபடியும் பிறக்கும் வரை, எந்த மனிதனும் தேவனைப் பற்றி எதையும் அறிய முடியாது.

"எவனும் இயேசுவைக் கிறிஸ்து என்று சொல்லமுடியாது" என்று வேதாகமம் கூறுகிறது. பரிசுத்த ஆவியானவராலே ஒழிய அது நடக்கும்

ஒரே காரியம்... நீங்கள் சொல்லலாம், "சரி, அவர் தேவனுடைய குமாரன் என்று நான் நம்புகிறேன்." நீங்கள் மறுபடியும் பிறக்கவில்லை என்றால், அதற்காக நீங்கள் வேறொருவருடைய வார்த்தையை எடுத்துக் கொள்கிறீர்கள். நீங்கள் சொல்கிறீர்கள், "வேதாகமம் அப்படிச் சொல்கிறது." அது சரிதான்; வேதாகமம் சரியானது, ஆனால் உங்களைப் பற்றி என்ன? நீங்கள் சொல்கிறீர்கள், "பிரசங்கியார் அப்படிச் சொன்னார்." பிரசங்கியார் சரியே, ஆனால் உங்களைப் பற்றி என்ன? "அம்மா அப்படிச் சொன்னார்கள்." அம்மா சொல்வது சரி, ஆனால் உங்களைப் பற்றி என்ன? இது உங்களுடைய சொந்த தனிப்பட்ட அனுபவம், நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும் அல்லது நீங்கள் ஒருபோதும் தேவனைப் புரிந்துகொள்ள மாட்டீர்கள்.

25 அப்பொழுது உங்களுக்குத் தேவை என்று அவர் அறிந்திருக்கிறபடியே அவர் தன்னை உங்களுக்கு வெளிப்படுத்துவார். இப்போது, உங்களுக்குள் இரண்டு காரியங்கள் உள்ளன- அவை அபிப்பிராயத்தை ஈர்க்கின்றன.

முதலாவது ஒரு அறிவுபூர்வமான பகுதி உள்ளது, அது உங்கள் மனப் பகுதி. அடுத்தது உங்கள் ஆத்துமா. உங்களுக்கு ஒரு ஆத்துமாவும் ஒரு மனதும் இருக்கிறது. மற்றும்...

இப்போது, இங்கே நீண்ட காலத்திற்கு முன்பு அல்ல, பழைய காலத்து மனிதர்களும் அறிவியலும் கூறின, "சரி, உங்களுக்குத் தெரியுமா, 'ஒரு மனுஷன் தன் இருதயத்தில் நினைப்பது போல' என்று தேவன் உங்களைப் பற்றிச் சொன்னபோது நிச்சயமாக ஒரு தவறு செய்துவிட்டார். ஒரு மனிதன் சிந்திப்பதற்கு இருதயத்தில் எந்த மன திறன்களும் இல்லை— எந்த மன திறன்களும் இல்லை, அது மாம்சம்." விமர்சகர்கள் ஒரு மனிதன் தன் இருதயத்திலிருந்து சிந்திக்க முடியும் என்று நினைப்பது அபத்தமானது என்று மீண்டும் கூறினார்கள்.

சுமார் ஆறு மாதங்களுக்கு முன்பு, சிகாகோ மற்றும் அதைச் சுற்றியுள்ள நீங்கள், தேவன் சொன்னது சரிதான் என்று கண்டுபிடித்தீர்கள். மனித இருதயத்தில் இரத்தமோ அல்லது வேறு எதுவுமோ இல்லாத ஒரு சிறிய நுண்ணிய செல்

இருப்பதை விஞ்ஞான ஆராய்ச்சி கண்டறிந்துள்ளது, அது ஒரு சிறிய அறை, விலங்குகளுக்கு அது இல்லை, மனிதனுக்கு மட்டுமே உள்ளது; மற்றும் அது ஆத்துமாவின் உறைவிடம் என்று அவர்கள் கூறுகிறார்கள். ஆகையால், எல்லாவற்றிற்கும் மேலாக, ஒரு மனிதன் தன் இருதயத்தில் விசுவாசிக்கிறான். நீங்கள் உங்கள் மனதால் சிந்திக்கிறீர்கள், ஆனால் உங்கள் இருதயத்தால் விசுவாசிக்கிறீர்கள். தேவன் சொல்வது முற்றிலும் சரிதான்; அது உங்கள் இருதயத்தில்தான் உள்ளது.

26 இப்போது, உங்கள் அறிவுபூர்வமான விசுவாசம் தர்க்கிக்கும். நீங்கள் சொல்வீர்கள், "இப்போது, வேதாகமம் அதைப் போதிக்கிறது என்று எனக்குத் தெரியும், நிச்சயமாக. ஆனால் இப்போது நான் சிந்திக்கிறேன், அற்புதங்களின் நாட்கள் முடிந்துவிட்டன. போதகர் அப்படிச் சொன்னார், யாரோ ஒருவர் அப்படிச் சொன்னார். நான்-இந்த நாளில் நமக்கு அது இல்லை என்று நான் நம்புகிறேன்." இப்போது, பாருங்கள், நீங்கள் அறிவுபூர்வமான

விசுவாசத்தைப் பயன்படுத்துகிறீர்கள். மேலும் அந்த அறிவுபூர்வமான விசுவாசம் தேவனுடைய வார்த்தையுடன் தர்க்கிக்கும், ஆனால் இருதயத்திலிருந்து வரும் மறுபடியும் பிறந்த அனுபவம் தர்க்கிக்காது; அது சொல்லும், "தேவனுடைய வார்த்தை சரியானது. இதில் செய்வதற்கு வேறு ஒன்றுமில்லை; அது சரிதான்." ஏனென்றால், இங்கே உள்ளே உள்ள ஒன்று அதைத்தானே சொல்கிறது; நீங்கள் அதற்காகச் செய்ய வேண்டியது ஒன்றுமில்லை. அது இருதயத்தில் உள்ள தேவன்.

இப்போது, ஒரு அறிவுபூர்வமான விசுவாசம் தர்க்கிக்கும். இப்போது, இன்று நமது சபைகளின் பிரச்சனை அதுதான். பரிசுத்த ஆவியானவரைப் பெறும் உண்மையான பழைய கால அனுபவங்களிலிருந்து நாம் விலகிச் சென்றுவிட்டோம். நாம் அதிலிருந்து விலகிச் சென்றுவிட்டோம், அதற்குப் பதிலாக ஒரு அறிவுபூர்வமான கல்லூரியை-ஒரு கல்லூரி கல்வியை மாற்றாக வைத்துக்கொண்டோம். இப்போது, நான்... நான் இப்போது என் அறியாமையை ஆதரிக்க முயற்சிக்கவில்லை. ஆனால் நான் இதைச் சொல்ல முயற்சிக்கிறேன்:

கல்வி மற்றும் இரட்சிப்பு ஆகிய இரண்டிற்கும் இடையே ஒன்று வந்தால், நான் இரட்சிப்பையே தேர்ந்தெடுப்பேன். ஆம், ஐயா. என் குழந்தைகளுக்கு ஏபிசி (abc) தெரியாவிட்டாலும் அவர்கள் இயேசு கிறிஸ்துவை அறிந்திருக்க வேண்டும் என்றே நான் விரும்புவேன். அது சரிதான், அது உண்மை. கல்வி அற்புதமானது என்று நான் நினைக்கிறேன், ஆனால் அது ஒரு குறிப்பிட்ட எல்லை வரை மட்டுமே செல்லும்.

27 ஆனால் இன்று அதன் பிரச்சனை என்னவென்றால், நாம் முற்றிலுமாக கல்வியையே சார்ந்துள்ளோம் மற்றும் இரட்சிப்பிற்குப் பதிலாக அதை ஏற்றுக்கொண்டோம். இன்று நமக்கு தேவையில்லை... என்ன நடந்தது என்று உங்களுக்குத் தெரியுமா? பரிசுத்த ஆவியானவரைப் பெறுவதற்கான பழைய காலத்து மேல் அறைக்குப் பதிலாக, பிரசங்கியாருக்குச் சம்பளம் கொடுக்க சூப்களையும் மற்ற காரியங்களையும் விற்கும் இரவு உணவு அறையாக அதை நாம்

மாற்றிவிட்டோம், ஆனால் அது நமக்குத் தேவையில்லை. வேதாகமத்திற்கும், பழைய காலத்து பரிசுத்த ஆவியானவருக்கும், நல்ல பழைய காலத்துப் பரிசுத்த பவுலின் எழுப்புதலுக்கும், வேதாகமத்தின் பரிசுத்த ஆவியானவருக்கும் நாம் திரும்பிச் செல்ல வேண்டும், இதுதான் இன்றிரவு சபைக்கு மீண்டும் நமக்குத் தேவையானது. அது சரிதான்.

மேலும், நண்பரே, அது புதிய பிறப்பின் அனுபவத்தின் மூலமாக மட்டுமே வரும். ஒரு பறவை தன் சிறகுகள் இல்லாமல் பறக்க முடியாதது போல, ஒரு மனிதன் மறுபடியும் பிறக்காமல் தேவனுடைய ராஜ்யத்திற்குச் செல்ல முடியாது. அவனால் அதைச் செய்ய முடியாது; அவன் எவ்வளவு பெரிய பறவையாக இருந்தாலும், அவனுக்குச் சிறகுகள் இல்லை; அவனால் பறக்க முடியாது. அதுபோலவே ஒரு மனிதனும் மறுபடியும் பிறக்காமல் பரலோகத்திற்குச் செல்ல முடியாது. இயேசு அப்படிச் சொன்னார். மேலும் அது அறிவுபூர்வமானது அல்ல என்று நாம் அறிவோம். இன்று சபைகளில் மக்கள் பேசுவதை நீங்கள் கேட்கலாம்; அவர்கள்

தர்க்கித்து, "இப்போது, நான் உங்களுக்குச் சொல்கிறேன்; அது சரியல்ல" என்று சொல்கிறார்கள். ஏனென்றால், பாருங்கள், அவர்கள் சந்தேகப்படுகிறார்கள். மேலும் உங்கள் ஆத்துமா என்னவென்றால்...

28 சமீபத்தில் ஒரு பெண்ணுடன் எனக்கு ஏற்பட்ட ஒரு அனுபவம் இங்கே உள்ளது. ஒரு சுற்றுப்புறத்தில் ஒரு பெண் வாழ்ந்து வந்தாள். அவள் ஒரு நல்ல பெண்ணாக வளர்க்கப்பட்டாள். அவள் ஒரு நல்ல வீட்டில் வளர்க்கப்பட்டாள், அவள் சபைக்குச் சென்றபோதிலும்; சபையில் அவள் மிகவும் உண்மையாக இருந்தபோதிலும், சபையில் அவள் பியானோ வாசிப்பவராக இருந்தபோதிலும், மறுபடியும் பிறந்த ஒரு கிறிஸ்தவர் என்று நாம் அறிந்துகொள்ளும் அளவிற்கு அவள் ஒருபோதும் மாறவில்லை. அங்கே சபையைச் சுற்றி வந்த ஒரு நல்ல பையனை அவள் திருமணம் செய்து கொண்டாள், அவன் ஒரு நல்ல பையன். அவர்கள் சிறிது காலம் ஒன்றாக வாழ்ந்தார்கள்.

சிறிது காலத்திற்குப் பிறகு அவர்கள் ஒரு குடியிருப்புப் பகுதிக்குச் சென்றார்கள்; அவள் இன்னும் சேர்ந்துகொண்டாள், தனது கடிதத்தை வேறொரு சபைக்குக் கொண்டு சென்றாள். அவள் இங்கே இந்த குடியிருப்பில் வாழ்ந்தாள். அவள் ஒரு-அவள் தேவனைக் கண்டறிந்த ஒரு பழைய காலத்து தாயால் வளர்க்கப்பட்டாள், ஒரு பழைய காலத்து தாய். இன்று தாய் என்று அழைக்கப்படும் இந்த சிகரெட் பிடிக்கும், மது அருந்தும், இரவில் சுற்றித்திரியும் பெண்களைத் தவிர்த்து, அவர்களைப் போன்ற இன்னும் சிலரை நாம் பெறுவதற்கு தேவன் நமக்கு உதவி செய்வாராக. அதை மேடையிலிருந்து சொல்வது மிகவும் மோசமானது, ஆனால் அதுதான் அப்பட்டமான உண்மை. அது ஒரு வெட்கக்கேடு, சகோதரரே. நான் உங்களுக்குச் சொல்கிறேன்; அமெரிக்காவின் தாய்மை உடைந்துவிட்டது என்று நினைப்பது அவமானகரமானது. அது எந்த ஒரு தேசத்தின் முதுகெலும்பாகும்.

29 ஒரு குழந்தைக்குக் கிடைக்கும் முதல் பிரசங்கியார் தாய்தான். நான்கு... ஐந்து

சுவிசேஷங்கள் உள்ளன: மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் மற்றும் தாய். ஒரு தாய் ஆவியால் நிரப்பப்பட்ட ஒரு பெண்ணாக இருக்க வேண்டும், அவள் தன் குழந்தைகளுக்குக் கற்பிக்கவும், ஜெபிக்கக் கற்றுக்கொடுக்கவும், தேவனைப் பற்றி அறியச் செய்யவும் முடியும், மற்றும் பல. அதற்குப் பதிலாக, அவர்கள் குழந்தைகளை ஒரு குழந்தை காப்பாளரிடம் கொடுத்துவிட்டு இரவு முழுவதும் சுற்றுகிறார்கள். பின்னர் ஞாயிற்றுக்கிழமை காலையில் ஞாயிறு பள்ளிக்குச் சென்று தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று அழைத்துக்கொள்கிறார்கள்.

நான் அதைவிட்டு விலகுவது நல்லது, இல்லையா? ஏனென்றால் இந்தக் காரியங்களைப் பற்றிய உண்மையை நம்புகிற நான் ஒரு பழைய கிராமத்து வகையைச் சேர்ந்தவன். அது சரிதான். கொஞ்ச காலம் கழித்து நீங்கள் சுட்டெரிக்கப்படுவதை விட இப்போதே உங்களைச் சுட்டெரிப்பது நல்லது, ஆகையால் அது-அது உண்மை. எனவே நீங்கள் நினைவில் கொள்ளுங்கள்; இதுதான் உண்மை; இதுதான் சுவிசேஷத்தின் உண்மை.

இல்லாத ஒரு சிறிய பழைய குடிசையில்தான் நான் வளர்ந்தேன். அந்த காலையில் அந்தச் சிறிய வீட்டிற்குள் நான் நடந்தபோது, நான் உங்களுக்குச் சொல்கிறேன், நீங்கள் தேவனுடைய சமூகத்தில் இருப்பதை அறியமுடியும். நான் அங்கே பார்த்தேன்; சுவர்களில் எந்தப் படங்களும் ஒட்டப்படவில்லை; சுவரில் ஒரு மிகப் பெரிய பலகை இருந்தது: தேவன் எங்கள் வீட்டை ஆசீர்வதிப்பாராக. உங்களுடைய ஆடம்பரமான படங்களை விடவும், ஹாலிவுட்டின் காரியங்களை விடவும் அதை நான் விரும்புகிறேன்.

62 நான் அதைப் பார்த்தேன், "உங்களுக்கு என்ன தெரியும்" என்று நான் நினைத்தேன். பின்பு அந்தச் சிறிய பழைய இரும்புக் கம்பிகள் கொண்ட கட்டிலில், சுமார் நூற்று எண்பது பவுண்ட் எடையுள்ள ஒரு பெரிய பையன், "உம், உம், உம்" என்று முனகிக் கொண்டிருந்தான். நான் கேட்டேன், "இவனுக்கு என்ன பிரச்சனை?"

அவள் சொன்னாள், "போதகரே, அவன் மரித்துக் கொண்டிருக்கிறான்."

நான் அவனுடைய பாதங்களைப் பிடித்துக்கொண்டேன்; அவனுடைய பாதங்களில் வியர்வையால் மிகவும் பிசுபிசுப்பாக இருந்தது, அவன் மரித்துக்கொண்டிருப்பதைப் போல உணர்ந்தேன். மேலும் அவள் சொன்னாள், "அவன் இனி ஒருபோதும் பிழைக்கமாட்டான் என்று மருத்துவர் சொல்கிறார். அவன் தவறான சகவாசத்தில் சேர்ந்துவிட்டான். அது பால்வினை நோய், சிபிலிஸ் (syphilitic), அது முற்றிப்போய், அவனுடைய இருதயத்திற்குச் சென்று, அவனுடைய இருதயத்தை அரித்துவிட்டது. அதனால், அவன் சொன்னான்... அந்த மருத்துவர் சொன்னார், "அவன் மரிக்கப் போகிறான்." மேலும், "தான் தொலைந்து போய்விட்டதாக அவன் சொல்லிக்கொண்டே இருக்கிறான்" என்றாள். நான் சிறிது நேரம் அங்கே இருந்தேன்; அவன் சொன்னான், "ஊஊஊஊ, இங்கே மிகவும் இருட்டாக இருக்கிறது."

"அவன் ஒரு படகில் இருப்பதாகவும், நடுக்கடலில் தொலைந்துவிட்டதாகவும் அவன் நினைக்கிறான்" என்று அவள் சொன்னாள். மேலும் அவள் அழத் தொடங்கி, "போதகரே, அவன் அப்படி மரிப்பதை என்னால் பார்க்க முடியாது; அவன் என் குழந்தை" என்றாள். மேலும் அவள் அவன் அருகில் சென்று, அவனுடைய நெற்றியில் முத்தமிட்டு, "அம்மாவின் குழந்தையை தேவன் ஆசீர்வதிப்பாராக" என்றாள்.

63 ஓ, நான் நினைத்தேன், அவன் எவ்வளவு அவமானத்திற்குள்ளானாலும், அவன் எவ்வளவு பெரியவனாகவும் பருமனானவனாகவும் இருந்தாலும்; தாயின் இருதயத்திற்கு அவன் இன்னும் அவளுடைய குழந்தைதான். மேலும் நான் நினைத்தேன், "தேவனே, அந்தத் தாய் அதை எல்லாம் பொருட்படுத்தாமல் அவனுக்கு முத்தமிட்டு, அவன் தன் குழந்தை என்று சொல்ல முடியுமானால், நீர் எங்களுக்கு எவ்வளவு அதிகமாகச் செய்வீர்? நீர் சொன்னீர், 'ஒரு தாய் தன் பாலகனை மறந்தாலும், நான் உன்னை மறக்கமாட்டேன்; என்

உள்ளங்கைகளில் உன்னை வரைந்திருக்கிறேன்' என்று." நான் நினைத்தேன், "என்னவொரு அன்பு." அவள் அவனை முத்தமிட்டு கட்டியணைத்தாள். நான் கேட்டேன், "அத்தை, ஜெபத்திற்காகத் தலைவணங்குவீர்களா?"

அவள் முழங்கால்படியிட்டாள், நான் சொன்னேன், "அத்தை, நீங்கள் நடத்துங்கள்." ஒரு ஜெபத்தைக் குறித்து நீங்கள் பேசுகிறீர்களே, ஓ, அந்தப் பழைய பக்தியுள்ள... [டேப்பில் பதிவாகவில்லை]... தேவனைப் பற்றிக் கொண்டது, நான் அந்த சிறிய பழைய கட்டிலின் கம்பியைப் பிடித்துக்கொண்டு அங்கே நின்று அழுதேன் [டேப்பில் பதிவாகவில்லை] அவள் மீண்டும் அவனை முத்தமிட்டாள். நான் சொன்னேன், "அத்தை, இப்போது என்னோடு முழங்கால்படியிடுவீர்களா," நான் சொன்னேன், "ஜெபிப்பீர்களா."

அவள் சொன்னாள், "ஆம், போதகரே." அவள் சொன்னாள், "நான் கர்த்தரிடம் கேட்பதெல்லாம் இதுதான், அவன் போவதற்கு முன்பாக, அவன் இரட்சிக்கப்பட்டுவிட்டான்

என்று அவன் சொல்வதை நான் கேட்க முடிந்தால் போதும்."

64 நான் முழங்கால்படியிட்டு, சொன்னேன், "பரம பிதாவே, நான் ஏன் இங்கே இருக்கிறேன் என்று எனக்குத் தெரியவில்லை; என் விமானம் சென்று சுமார் இரண்டு மணிநேரம் ஆகிவிட்டது." நான் சொன்னேன், "நீர் ஏன் என்னை இங்கே நடத்தினீர் என்று எனக்குத் தெரியவில்லை; நான் வந்திருக்கும் ஒரே இடம் இதுதான், ஆகையால், நிச்சயமாக நீர் என்னை நடத்தின இடம் இதுதான்." நான் சொன்னேன், "நான்-நீர் என்னை எங்கேயாவது நடத்துவீர் என்று நான் எதிர்பார்த்திருந்தேன், அவள் நான் இங்கே இருக்க வேண்டும் என்று எதிர்பார்த்திருந்தாள். ஆகையால், தேவனே, நீர் இரக்கமாயிருந்து இந்தப் பையனின் உயிரைக் காப்பாற்றும்படி நான்-நான் ஜெபிக்கிறேன்."

நான் என் கைகளை அவனுடைய பாதங்கள் மேல் வைத்திருந்தேன், அவன் சொன்னான், "அம்மா."

அவள் சொன்னாள், "சொல்லு, கண்ணா."

அவன் சொன்னான், "அறையில் வெளிச்சம் வரவில்லையா?"

அங்கிருந்து சுமார் ஒன்று அல்லது இரண்டு நிமிடங்களில், அவன் கட்டிலின் ஓரத்தில் எழுந்து உட்கார்ந்து எங்களுடன் பேசிக்கொண்டிருந்தான். நான் அவசரமாகப் புறப்பட்டு, ஒரு வாடகைக் காரை அழைத்து, விமான நிலையத்திற்குச் சென்றேன்; அவர்கள் கடைசி அழைப்பை விடுத்துக் கொண்டிருந்தார்கள்; அது இரண்டு மணிநேரம் தாமதமாக நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. நான் என் விமானத்தைப் பிடித்து வீட்டிற்குச் சென்றேன்.

65 அதன்பிறகு சுமார் ஆறு அல்லது எட்டு மாதங்கள் கழித்து, ஏறக்குறைய ஒரு வருடம் இருக்கும், நான் ஒரு ரயிலில் வந்துகொண்டிருந்தேன். உங்களுக்குத் தெரியும், மெம்பிஸில் (Memphis) நீங்கள் எப்படி இந்த வழியாக வருவீர்கள் என்று; நான் ஒரு ஹாம்பர்கர் வாங்குவதற்காக ஓடினேன்; ரயிலில் சாப்பிட மிகவும் அதிக... மிகவும் அதிக கட்டணம் வசூலிக்கிறார்கள். அதனால், ரயில்

நின்ற பிறகு நான் அங்கே சென்று எனக்காக ஒரு ஹாம்பர்கர் வாங்க வேண்டியிருந்தது. எனக்காக ஒரு ஹாம்பர்கர் வாங்க நான் அங்கே ஓடினேன், நான் போய்க்கொண்டிருந்தபோது யாரோ, "ஏய், போதகர் பிரான்ஹாம்" என்று சத்தமிடுவதைக் கேட்டேன். நான் வெளியே பார்த்தேன், அங்கே ஒரு சுமைதூக்குபவர் (redcap) இருந்தார். அவர் சொன்னார், "ஹலோ," பெரிய கறுப்பினப் பையன், அவனுடைய பற்கள் பளபளத்தன; அவன் சொன்னான், "எப்படி இருக்கிறீர்கள்?" மேலும் சொன்னான், "உங்களுக்கு என்னைத் தெரியாது, இல்லையா?"

நான் சொன்னேன், "எனக்குத் தெரியும் என்று நான் நினைக்கவில்லை."

அவன் சொன்னான், "சுமார் ஒரு வருடத்திற்கு முன்பு, நீங்கள் வந்தபோது, கேட் அருகே வெளியே என் அம்மா ஜெபித்துக் கொண்டிருந்த இடத்திற்கு கர்த்தர் உங்களை நடத்தினாரே, உங்களுக்கு நினைவிருக்கிறதா?"

நான் கேட்டேன், "நீதான் அந்தப் பையனா?"

நான் சொன்னேன், "ஆம், போதகர் பிரான்ஹாம்," சொன்னான், "நான் குணமடைந்தது மட்டுமின்றி, இப்போது நான் ஒரு கிறிஸ்தவனும்கூட."

ஓ, என்னே, அது என்ன? அந்த நாளில் சிமியோனுடன் இருந்த அதே தேவன்தான், இன்று அந்தப் படிக்காத கறுப்பினப் பெண்ணுக்காக ஒரு விமானத்தைத் தரையிறக்கி நிறுத்தக்கூடிய—நிறுத்தக்கூடிய அதே பரிசுத்த ஆவியானவர். சற்று நினைத்துப் பாருங்கள்; அந்த ஏழை, ஒன்றுமறியாத, படிக்காத, நீக்ரோ பெண்ணின் ஜெபத்திற்காக, தேவன் இரண்டு மணிநேரம் ஒரு விமானத்தைத் தரையிலேயே நிறுத்திவைத்தார், ஜீவனுள்ள தேவனுடைய இறையாண்மை அது. நான் அவரை எதிர்பார்க்கிறேன்.

66 இந்த நாட்களில் ஏதோவொரு நாளில் என் வாழ்க்கை முடிவடையும்போது, என் கடைசி ஜெபம் ஏறெடுக்கப்படும்போது, நான் கடைசியாக என் பைபிளை மூடுவதற்கு சில நிமிடங்களே இருக்கும்போது, மரண தூதன் அறையில் நிற்கும்போது, அந்தப் பழைய

யோர்தான் நதியின் நீராவி என் முகத்தில் வீசும்போது, அவர் அங்கே இருப்பார் என்று நான் எதிர்பார்க்கப்போகிறேன். நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடக்கும்போது, அவர் அங்கே இருப்பார்; கவலைப்பட வேண்டாம்; அவர் அங்கே இருப்பார் என்று அவர் வாக்குத்தத்தம் செய்திருக்கிறார்; நான் அதையே சார்ந்திருக்கிறேன். நான் அதை விசுவாசிக்கிறேன். அவர் வரும்வரை நான் உழைப்பேன். நாம் ஜெபிக்கும்போது கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

என் பரம பிதாவே, உமது நேச குமாரனாகிய கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில், உம்முடைய மகா பெரிய இறையாண்மையைக் குறித்து நான் நினைக்கும்போது, காலங்கள் ஊடாக மக்களை நீர் எப்படி நடத்தினீர் என்பதையும், உம்முடைய பரிசுத்த ஆவியானவர் ஒருபோதும் பூமியை விட்டு விலகவில்லை என்பதையும், அவர் சபையை எடுத்துக்கொண்டு காற்றில் இயேசுவைச் சந்திக்கவும், அதன்பிறகு என்றென்றைக்கும் அவரோடு இருக்கவும்

செல்லும்வரை அவர் விலகமாட்டார் என்பதையும் நான் நினைக்கும்போது.

தேவனே, இன்றிரவு கிறிஸ்துவுக்குப் புறம்பாக பலர் இருக்கிறார்கள், அவர்களுக்குப் பாவமன்னிப்பு குறித்து எதுவும் தெரியாது; ஒருவேளை அவர்கள் சபையைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம், ஆனால் ஒருபோதும் மறுபடியும் பிறக்கவில்லை, பரிசுத்த ஆவியானவரைப் பெறுவது என்றால் என்னவென்று ஒருபோதும் அறியவில்லை, அறிவுப்பூர்வமான தர்க்கங்களை விட்டு விலகி, நான் இதைச் செய்ய வேண்டுமா அல்லது அதைச் செய்ய வேண்டுமா என்று அறிந்துகொள்வது என்னவென்று அவர்களுக்கு ஒருபோதும் தெரியாது. ஓ, தேவனே, இன்றிரவு உம்முடைய ஆவியானவர் இந்தக் கட்டிடத்திற்குள் அசைவாட வேண்டும் என்று நான் ஜெபிக்கிறேன். இன்றிரவு இங்கே அப்படிப்பட்ட ஒரு நபர் இருந்தால், அவர்கள் தாழ்மையான இருதயத்துடன் உம்மை நோக்கித் தங்கள் கைகளை உயர்த்தி, "தேவனே, இதன் மூலமாக, நான் இதை ஒரு வழியாக உங்களிடம் சொல்ல வேண்டும்; இந்த

நேரத்திலிருந்து நான் ஒரு கிறிஸ்தவனாக இருக்க விரும்புகிறேன் என்பதற்காக நான் என் கையை உம்மை நோக்கி உயர்த்துகிறேன்" என்று சொல்லட்டும்.

67 நாம் நம்முடைய தலைகளைத் தாழ்த்தியிருக்கும் வேளையில், நான் ஆச்சரியப்படுகிறேன், இந்தக் கட்டிடத்தில் எங்கிலாவது, அப்படிப்பட்ட ஒரு நபர், உண்மையாகவே மறுபடியும் பிறக்காத ஒருவர், நான் உங்களுக்காக ஜெபிக்க வேண்டும் என்று விரும்புகிற யாராவது இருப்பார்களா என்று. முடவர்களை நடக்க வைக்கவும், குருடர்களைப் பார்க்க வைக்கவும், செவிடர்களைக் கேட்க வைக்கவும் அவர் இங்கே எனக்கு உதவுவார் என்றால், நிச்சயமாக, உங்கள் ஆத்துமாவுக்கான என் ஜெபத்தையும் அவர் கேட்பார். உங்களுக்குத் தெரியும், நீங்கள் ஒருபோதும் அந்த விதத்தில் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளவில்லை மற்றும் மறுபடியும் பிறக்கவில்லை, நான் என் ஜெபத்தில் ஒரு வார்த்தை உங்களை நினைவுகூர வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்கள், இந்தக்

கட்டிடத்தில் நீங்கள் உங்கள் கையை உயர்த்துவீர்களா? தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக, உங்களை. ஓ, ஆச்சரியமே, எங்கும் பாருங்கள், எங்கும்.

மேலே பால்கனிகளில், எனக்கு இடதுபுறத்தில், அங்கே யாராவது இருக்கிறீர்களா, "சகோதரர் பிரான்ஹாம், நீங்கள் என்னை நினைவுகூர வேண்டும் என்று நான் விரும்புகிறேன்; நான் ஒரு கிறிஸ்தவன் அல்ல. நீங்கள் எனக்காக ஜெபிக்க வேண்டும் என்று விரும்புகிறேன்" என்று சொல்லுவீர்களா. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக, உங்களை. பின்புறம் உள்ள பால்கனிகளுக்கு, அங்கே மேலே யாராவது இருக்கிறீர்களா? உங்கள் கையை உயர்த்தி, "சகோதரர் பிரான்ஹாம்..." என்று சொல்லுங்கள். இப்போது யாரும் பார்க்க வேண்டாம், கர்த்தர் மட்டுமே...?...சரி. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

வலதுபுறம் உள்ள பால்கனிகளுக்கு, "இதோ என் கை உயர்கிறது. சகோதரர் பிரான்ஹாம், நான் என் கையை உங்களுக்காக உயர்த்தவில்லை; நான் அதை கிறிஸ்துவுக்காக

உயர்த்துகிறேன்" என்று சொல்லுங்கள். தேவன் உன்னை ஆசீர்வதிப்பாராக, இளைஞனே; நீ அதை ஒருபோதும் மறக்கமாட்டாய். தேவன் உன்னோடு இருப்பாராக. கீழே உள்ள தளத்தில் வேறு யாராவது இங்கே எங்கிலாவது இருக்கிறீர்களா? கிறிஸ்துவை நோக்கி மீண்டும் உங்கள் கையை உயர்த்துங்கள்; அவர் உங்களைப் பார்க்கிறார். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக சகோதரனே, சகோதரியே, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக, உங்களை, உங்களை. ஆம்.

68 இப்போது, நீங்கள் உங்கள் தலைகளைத் தாழ்த்தியிருக்கும் வேளையில், நான் உங்களை ஜெபத்தில் நினைவுகூரப் போகிறேன், மேலும் இந்த ஆராதனை முடிந்தவுடனேயே, நீங்கள் பலிபீடத்தைச் சுற்றிலும் வந்து, இது குறித்து கிறிஸ்துவிடம் தனிப்பட்ட முறையில் பேச வேண்டும் என்று நான் விரும்புகிறேன், வருவீர்களா? கிறிஸ்தவர்களே, இப்போது ஜெபத்தில் என்னோடு இணைந்துகொள்ளுங்கள்.

எங்கள் பரம பிதாவே, இங்கே அநேகர், உண்மையான கிறிஸ்தவராக மாற வேண்டும்

என்பதற்காக டஜன் கணக்கான கைகள் உயர்த்தப்பட்டன. அது என்ன நன்மையைக் கொடுக்கப்போகிறது... நம் நண்பர்கள் என்ன செய்யப்போகிறார்கள்? அந்த நேரத்தில்கூட நம் சபை என்ன நன்மையைத் தரப்போகிறது? மரணம் நம் சட்டையின் கைகள் வழியே ஏறிவரும்போது, நம் நாடித் துடிப்பு அடங்கும்போது, மருத்துவர் தன் சிறிய பையோடு கதவை விட்டு விலகிச் சென்று, அன்பானவர்களிடம், "அவருக்கு இன்னும் சில நிமிடங்கள்தான் இருக்கின்றன, அவர் போய்விட்டார்" என்று சொல்லும்போது. "அவள் இப்போது அதிக நேரம் வாழ முடியாது; அவளுக்கு இன்னும் பதினைந்து நிமிடங்கள்தான் இருக்கின்றன, அவள் போய்விடுவாள்." ஓ, தேவனே, மரணிக்கும் கனத்தை நாம் அழுத்துகிறோம்—தலையைத் தலையணையின் மேல் வைக்கும்போது, நாடித் துடிப்பு நம் சட்டையின் வழியே ஏறிவந்து, பனிக்கட்டியைப் போல மாறும்போது, ஓ தேவனே, அவர்கள் இந்த இரவை நினைவுகூருவார்கள்; அவர்களால் ஒருபோதும் அதிலிருந்து தப்பிக்க முடியாது.

69 பிதாவே, தங்கள் கைகளை உயர்த்திய ஒவ்வொருவருக்கும், இயேசு கிறிஸ்து மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததற்குச் சாட்சியாக இருப்பதற்கான ஓர் அனுபவத்தை இந்த இரவிலேயே நீர் கொடுக்க வேண்டும் என்று நான் ஜெபிக்கிறேன்; அவர் உயிருடன் இருக்கிறார், இன்றிரவு இங்கே நம் நடுவே இருக்கிறார். மேலும் அவர் அவர்களை இரட்சித்துத் தமது பரிசுத்த ஆவியானவரால் நிரப்புவார். அநேகருக்குத் தங்கள் கையை உயர்த்த தைரியம் இல்லை; அது எனக்குத் தெரியும், கர்த்தாவே; நீரும் அதை அறிவீர். நீர் அவர்களையும் ஆசீர்வதிக்க வேண்டும் என்று நான் ஜெபிக்கிறேன். அதை அருளுவீராக.

இங்கே அமர்ந்திருக்கும் அநேகர் சபையைச் சேர்ந்தவர்கள், ஒருவேளை-ஒருவேளை அவர்கள் தங்கள் கையை உயர்த்தினால் என்று பயப்படுகிறார்கள்... இருப்பினும் அதைச் செய்யும்படி நீர் அவர்கள் இருதயத்தில் சொன்னீர். அப்படியிருந்தும், சபையில் இணைந்து இவ்வளவு காலமாய் அங்கு இருந்தபிறகு, அவர்கள் தங்கள் கையை

உயர்த்தப் பயந்தார்கள். தேவனே, நீர் அவர்களுக்குப் பரிசுத்த ஆவியானவரைக் கொடுக்க வேண்டும் என்று நான் ஜெபிக்கிறேன்; தேவன் அவர்களுக்கு வைத்திருக்கும் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளும் வரை அவர்களால் ஓய்ந்திருக்க முடியாத அளவுக்கு அப்படிப்பட்ட ஒரு பசி அவர்கள்மேல் வரட்டும். கர்த்தாவே, அதை அருளுவீராக. எங்கள் மீறுதல்கள் எல்லாவற்றையும் மன்னியுங்கள்.

70 இப்பொழுதும், அன்புள்ள இயேசுவே, வியாதியஸ்தர்களுக்காக ஜெபிக்க நாங்கள் ஆராதனைக்குள் செல்லும்போது, ஒவ்வொரு நபரும், இப்போது இந்த வார்த்தைகளைத் தங்கள் இருதயத்தில் கொண்டிருக்க, பரிசுத்த ஆவியானவர் வருவாராக. இயேசு இப்போதே இந்தக் கட்டிடத்திற்குள் நடந்துவருவாராக. இஸ்ரவேல் புத்திரரை வழிநடத்திய அந்த மாபெரும் அக்கினி ஸ்தம்பம், இன்றிரவு இந்தப் பிரசங்க பீடத்தின் மேல் அசைவாடி, கீழே இறங்கிவந்து, மக்கள் பின்பு சாக்குப்போக்கு

சொல்ல முடியாதபடிக்கு கர்த்தராகிய இயேசுவின் உயிர்த்தெழுதலை நிரூபிப்பாராக.

இன்றிரவு வியாதியஸ்தர்களைக் குணமாக்கும், பிதாவே, குருடர்களைப் பார்க்கச் செய்யும், செவிடர்களைக் கேட்கச் செய்யும், ஊமையர்களைப் பேசச் செய்யும், முடவர்களை நடக்கச் செய்யும். இருதய நோய், புற்றுநோய், எல்லா விதமான நோய்களையும் குணமாக்கும். தேவனே, உடைந்த குடும்பங்களை நீர் சீர்படுத்த வேண்டும் என்றும்—மற்றும் அக்கறையற்ற குடும்பங்களில் இருப்பவர்களை, ஜெபிக்காத தாய்மார்களையும் தகப்பன்மார்களையும், இன்றிரவு அவர்கள் தங்கள் வீட்டில் ஒரு குடும்ப ஜெப பீடத்தைத் தொடங்கும் அளவுக்கு அவர்களுக்கு ஓர் அனுபவத்தைக் கொடுக்க வேண்டும் என்றும் நான் ஜெபிக்கிறேன். கர்த்தாவே, அதை அருளுவீராக.

நகரத்தில் உள்ள ஒவ்வொரு சபையையும் ஆசீர்வதியும். ஓ தேவனே, ஒவ்வொரு போதகரும் நாளை மிகவும் ஏவப்பட்டு, இதற்கு முன் ஒருபோதும் பிரசங்கிக்காதபடி அவர் பிரசங்கிக்கட்டும். கர்த்தாவே, ஒரு பழைய

காலத்தின் எழுப்புதல் இந்த நகரம் முழுவதும் பரவட்டும், இயேசு ஜீவிக்கிறார் மற்றும் அரசாளுக்கிறார் என்பதை அவர்கள் அறிந்துகொள்ளும்படிக்கு, மக்கள் எங்கும் இருந்து இங்கே ஷவானோவுக்கு (Shawano) வரட்டும். பிதாவே, அதை அருளுவீராக. இயேசுவின் நாமத்தில் கேட்கிறோம், ஆமென்.

71 கர்த்தர் உங்கள் அனைவரையும் மெய்யாகவே வளமாக ஆசீர்வதிக்க வேண்டும் என்பதே எனது உண்மையான ஜெபம். நாளை ஞாயிற்றுக்கிழமை; நீங்கள் ஒருவேளை தாமதமாகவே ஞாயிறுப் பள்ளிக்குச் செல்வீர்கள். நீங்கள் கத்தோலிக்க மக்களாக இருந்தால் ஒருவேளை அதிகாலை ஆராதனைக்குச் செல்வீர்கள், மற்றும் எதுவாக இருந்தாலும், உங்களால் அவற்றில் ஒன்றில் கலந்துகொள்ள முடியும். மேலும் நான்-நீங்கள் நின்று கொண்டிருக்கிறீர்கள், உங்களைத் தாமதப் படுத்துவதை நான் வெறுக்கிறேன். ஆனால் நான் உங்களிடம் பேச வேண்டும் என்று உணர்ந்தேன். நீங்கள் மிகவும் அன்பான பார்வையாளர்கள், இப்போது நீங்கள் இந்த வார்த்தைகளை

ஏற்றுக்கொண்டு, குணமாக்கப்படுவதை எதிர்பார்த்திருப்பீர்கள் என்று நான் ஜெபிக்கிறேன். நாம்-ஜெபத்திற்காக ஜெப வரிசையை அழைப்பதற்கு முன்பாக, ஒரு சில நிமிடங்களில் நான் உங்களிடம் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன்.

இன்றிரவு இயேசு இங்கே இருந்தால் அவர் என்ன செய்வார்? இயேசு கிறிஸ்து நேற்றும், இன்றும், என்றென்றைக்கும் மாறாதவராக இருக்கிறார் என்பதை உங்களில் எத்தனை பேர் நம்புகிறீர்கள், அதை நீங்கள் விசுவாசிக் கிறீர்களா? நேற்று அவர் என்னவாக இருந்தார்? அவர் பூமியில் இருந்தபோது என்ன செய்தார்? அவர் பூமியில் இருந்தபோது என்ன செய்தாரோ, அவர் மாறாதவர் என்றால், அதே காரியத்தை அவர் இன்றும் செய்தாக வேண்டும். அது சரிதானே?

72 இப்போது, சுமார் இரண்டு நிமிடங்கள் அதைப் பார்ப்போம். அவருடைய ஊழியம் என்னவாக இருந்தது? அவர் சுற்றித்திரிந்து, "யாரையாவது என்னிடம் கொண்டு வாருங்கள், நான் அவர்களைக் குணமாக்குகிறேன்" என்று

சொன்னாரா? ஒருபோதும் அவர் அப்படிச் சொல்லவில்லை. அவர் சொன்னார், "என்னால் ஒன்றுமே செய்ய முடியாது. நானல்ல, எனக்குள் வாசமாயிருக்கிற என் பிதாவே கிரியைகளைச் செய்கிறார்." அது உண்மையா?

இயேசு தரிசனங்களைக் கண்டார். அவர் பிலிப்பைக் கண்டபோது, மற்றும் அனுப்பியபோது-பிலிப்பு... அவர் பிலிப்புக்காக ஜெபித்தார். பேதுரு அவரிடம் வந்தான்; அவன் பெயர் என்னவென்று அவருக்குத் தெரிந்திருந்தது. அவன் யார் என்று அவர் அவனுக்குச் சொன்னார். மேலும் பிலிப்பு போய் நாத்தான்வேலை, வேறொரு நாட்டில் அங்கே சென்று அவனைக் கூட்டிக்கொண்டு வந்தான். அவன் இயேசுவிடம் வந்தபோது, இயேசு, "இதோ, கபடற்ற ஓர் இஸ்ரவேலன், ஒரு நீதிமான்" என்று சொன்னார்.

அதற்கு அவன், "உமக்கு என்னை எப்போது தெரியும்? நான் யார் என்று உமக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்டான்.

"ஏனென்றால்," அவர் சொன்னார், "பிலிப்பு உன்னை அழைப்பதற்கு முன்பே, நீ வெளியே அத்திமரத்தின் கீழே ஜெபித்துக் கொண்டிருந்தபோது, நான் உன்னைக் கண்டேன்."

அவன் சொன்னான், "நீர் தேவனுடைய குமாரன்."

அவர் சொன்னார், "நான் உன்னை அத்திமரத்தின் கீழே கண்டேன் என்று உனக்குச் சொன்னதினால் என்னை விசுவாசிக்கிறாயா?"

அவன் சொன்னான், "ஆம்."

அவர் சொன்னார், "அப்படியானால் இதிலும் பெரியவைகளைக் காண்பாய்."

73 கிணற்றருகே இருந்த பெண்ணிடம் அவளோடு பேசிய பிறகு, அவளுடைய பாவங்கள் எங்கே இருக்கின்றன, அவள் என்ன செய்திருக்கிறாள் என்பதையும், மற்றும்-மற்றும் பல காரியங்களையும் அவர் அவளுக்குச் சொன்னார். முடவர்கள், சப்பாணிகள், குருடர்கள், சூம்பின உறுப்புடையவர்கள் என

ஒரு பெரிய திரளான மக்கள் படுத்திருந்த பெதஸ்தா குளத்தருகே அவர் சென்றார் (யோவான் 5). மேலும் அவர்-அவர்... அதற்குச் சில நாட்களுக்கு முன்பு ஒரு பெண் அவருடைய வஸ்திரத்தைத் தொட்டுவிட்டுச் சென்று கூட்டத்தில் தள்ளி நின்றாள். இயேசு கூட்டத்தைச் சுற்றிலும் பார்த்து, அவர் சொன்னார்—அவள்—அவர் சொன்னார், "யாரோ என்னைத் தொட்டார்கள்."

"ஏன்," அவர்கள் சொன்னார்கள், "எல்லோரும் உம்மைத் தொட்டுக் கொண்டிருக்கிறார்களே."

அவர் சொன்னார், "ஆம், ஆனால் நான் பெலவீனமடைந்தேன்; வல்லமை என்னிலிருந்து புறப்பட்டது; நான் பெலவீனமடைந்தேன்." அவர் சொன்னார், "சரி," என்று கூட்டத்தைச் சுற்றிலும் பார்த்தார். அவர் சொன்னார்—அந்தச் சிறிய பெண்ணைப் பார்த்தார்; அவள் எங்கே இருக்கிறாள் என்பதை அவர் கண்டுபிடித்தார். அவர் சொன்னார், "உன் விசுவாசம் இப்போது அந்த இரத்தப் பாட்டை குணமாக்கிவிட்டது; உன் விசுவாசம் அதைச் செய்தது."

74 இப்போது, அவர் எப்படி தேவனுடைய மகா பெரிய ஈவாக இருந்தாரோ, அதேபோல உங்கள் விசுவாசம் தேவனுடைய ஈவிலிருந்து இழுத்துக்கொள்கிறது. இங்கே இருக்கும் இந்த ஈவு ஒரு சிறிய ஆரம்பக்கட்ட (amateur) ஈவுதான், ஆனால் அதுவும் அதேபோல தேவனுடையதுதான். எனவே உங்கள் விசுவாசம்தான் அதைச் செயல்படுத்துகிறது, என்னுடையது அல்ல; உங்களுடையதுதான் அதைச் செய்கிறது. அந்தப் பெண்ணைக் குணமாக்கியது இயேசுவின் விசுவாசம் அல்ல; அவர் சொன்னார், "உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது." உன் விசுவாசம் அதைச் செய்தது. அவளுடைய-அவளுடைய விசுவாசம் அவருக்குள் இருந்த தேவனுடைய ஈவைச் செயல்படுத்தியது.

இப்போது, அவர் அந்தக் குளத்தின் வழியே சென்றபோது, எல்லாவற்றையும் பாருங்கள்... அவர் அன்பானவர் என்று நாம் நம்புகிறோம், நீங்கள் அப்படி நம்பவில்லையா? மனதுருக்கம் நிறைந்தவர் அல்லவா? ஆனால் அவர் அதன் வழியே சென்றபோது... பாருங்கள், மனதுருக்கம்

என்றால் என்னவென்று மக்களுக்குத் தெரியவில்லை. பல நேரங்களில் அன்பு என்றால் என்னவென்று அவர்களுக்குத் தெரிவதில்லை.

75 பைபிளில் இரண்டு வெவ்வேறு வகையான அன்புகள் குறித்துப் பேசப்பட்டிருக்கிறது, அது உங்களுக்குத் தெரியுமா? கிரேக்க வார்த்தையில், இங்கே உள்ள அறிஞர்களுக்குத் தெரியும், அவற்றில் ஒன்று பிலியோ (phileo) என்றும், மற்றொன்று அகபே (agapao) என்றும் அழைக்கப்படுகிறது. பிலியோ என்பது பூமிக்குரிய அன்பு, நாம் ஒருவர் மீது ஒருவர் கொண்டிருப்பது. இப்போது, அது... நீங்கள் உங்கள் மனைவியை நேசிக்கிறீர்கள், ஆனால் நீங்கள் அவள் மீது வைத்திருக்கும் அந்த அன்பு... வேறொரு மனிதன் அவளை அவமதித்தால், அதற்காக நீங்கள் அந்த மனிதனைக் கொன்றுவிடுவீர்கள் (புரிகிறதா?), ஏனென்றால் அது பிலியோ அன்பு.

ஆனால் அகபே என்பது தெய்வீக அன்பு. உங்கள் மனைவியை அவமதித்த அந்த

மனிதனின் ஆத்துமாவுக்காக உங்களை ஜெபிக்கச் செய்வது அதே அன்புதான். அது முற்றிலும் வித்தியாசமானது. மனதுருக்கமும் அதே காரியம்தான்; இன்னும் சிறிது நேரம் இருந்தால் நன்றாக இருக்கும் என்று விரும்புகிறேன், உங்களிடம் பேசவும், மற்றும்-மற்றும் அந்தக் காரியங்களைக் குறித்து உங்களிடம் பேசவும் சில நாட்கள் இருந்தால் நன்றாக இருக்கும்.

76 பின்பு அவர் மனதுருக்கத்தால் நிறைந்து, அந்த வழியாய் நடந்து, சப்பாணிகள், முடவர்கள், சூம்பின உறுப்புடையவர்களைக் கடந்து, ஒரு பாயின் மேல், அதாவது தரையில் இருந்த ஒரு சிறிய போர்வையில், ஒரு சிறிய படுக்கையில் படுத்திருந்த அந்த மனுஷனைக் கண்டுபிடிக்கும் வரைக்கும் நேராக நடந்து சென்றார். அவருக்கு ப்ராஸ்டேட் (prostate) வியாதியோ அல்லது நாம் அழைப்பது போல ஏதோ ஒன்று இருந்தது. முப்பத்தெட்டு வருஷமாக அது அவனுக்கு இருந்தது; அது அவனைக் கொல்லப்போவதில்லை. மற்ற மனுஷர்களைப் போல அவனாலும் நடக்க முடிந்தது. ஆனால் அவர், "சொஸ்தமாக

வேண்டுமென்று விரும்புகிறாயா?" என்று கேட்டார்.

அவன், "ஓ, யாராவது என்னை முந்திக்கொண்டு, என்னை விட வேகமாக ஓடி, குளத்தில் இறங்கி விடுகிறார்கள்" என்றான். ஏனென்றால், அந்த தூதன் இறங்கி வந்து அந்த தண்ணீரைக் கலக்குவதற்காக பல ஆயிரக்கணக்கானோர் காத்துக் கொண்டி ருந்தார்கள். அதில் முதலில் இறங்கியவன் சுகமானான், அந்த தூதனின் வல்லமை விலகி, தண்ணீரிலிருந்து முழுமையாக நீங்கிவிடும். ஆகையால் அவன், "என்னைத் தண்ணீரில் இறக்கிவிட ஒருவருமில்லை; நான் வருவதற்குள்ளாக வேறொருவன் எனக்கு முந்தி இறங்கிவிடுகிறான்" என்றான்.

அவர், "உன் படுக்கையை எடுத்துக்கொண்டு வீட்டுக்குப் போ" என்றார்.

77 இப்போது கவனியுங்கள். அவன் அங்கே படுத்திருந்ததை இயேசு அறிந்திருந்தார், மேலும் அவன் இந்த நிலைமையில் இருந்ததையும் அவர் அறிந்திருந்தார். அப்படித்தானே

வேதாகமம் சொல்கிறது? இயேசு அறிந்திருந்தார். பின்பு யூதர்கள் அவரைக் கேள்வி கேட்டார்கள். நான் இப்போது யோவான் 5:19-ல் இருக்கிறேன். இயேசு என்ன சொன்னார் என்று கேளுங்கள். இப்போது, இன்றிரவு சொல்வது போலவே யூதர்களும் சொல்லியிருப்பார்கள்; "போய் அந்த ஒருவனைக் குணமாக்குங்கள், அப்போது நான் அதை நம்புவேன்." சாத்தானும் இதே காரியத்தைத் தான் சொன்னான், "இந்தக் கல்லை அப்பமாக மாற்றுங்கள். சிலுவையிலிருந்து கீழே இறங்கி வாருங்கள், அப்போது நாங்கள் உங்களை விசுவாசிப்போம்." "எனக்கு முன்பாக ஒரு அற்புதத்தைச் செய்யுங்கள், நான் அதைப் பார்க்கட்டும்." தேவன் ஒருபோதும் அப்படிச் செய்ததில்லை, இனி ஒருபோதும் அப்படிச் செய்யவும் மாட்டார். இல்லை ஐயா; அவர் அந்த வழியில் அதைச் செய்வதில்லை.

மேலும்—மேலும் ஆகையால் இந்த—இந்த யூதர்கள் சொன்னார்கள், "சரி, மீதமுள்ளவர்களை அவர் ஏன் குணமாக்கவில்லை, மற்றும் பல? அங்கே ஆயிரக்கணக்கானவர்கள் இருக்கி றார்களே; அங்கே இருக்கும் முதியவர் சகோதரர் ஜோன்ஸ், ஜான் டோ மற்றும் அவர்கள்

அனைவரையும் எனக்குத் தெரியும், அவர்கள் எங்கள் சபையின் நல்ல விசுவாசிகள், அவர்கள் இத்தனை வருஷங்களாக முடவர்களாய் இருக்கிறார்களே; அவர் ஒரு குணமாக்குபவராக இருந்தால் அவர் போய் அவர்களைக் குணமாக்கட்டுமே." இதே காரியம் தான் இன்றும் சொல்லப்படுகிறது. காண்கிறீர்களா?

78 ஆனால் தேவன் அந்த வழியில் அதைச் செய்யவில்லை. அவர் ப்ராஸ்டேட் வியாதி அல்லது முப்பத்தெட்டு வருஷங்களாக இருந்த ஏதோ ஒரு வியாதியைக் கொண்டிருந்த ஒரு மனுஷனிடம் சென்று, அவனைக் குணமாக்கிவிட்டு, அங்கிருந்து நடந்து சென்றுவிட்டார். ஆகையால் அவர்கள் அவரைக் கேள்வி கேட்டார்கள். இன்றும் அவர்கள் அதே காரியத்தைத் தான் செய்கிறார்கள். இப்போது, இயேசு சொன்னதைக் கேளுங்கள்; இயேசு சொன்னார், "மெய்யாகவே, மெய்யாகவே...(அந்த 'மெய்யாகவே' என்ற வார்த்தைக்கு 'முற்றிலுமாக, முற்றிலுமாக' என்று அர்த்தம்), நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், பிதாவானவர் செய்யக் குமாரன்

காண்கிறதெதுவோ, அதையேயன்றி, வேறொன்றையும் தாமாய்ச் செய்யமாட்டார்; பிதா எவைகளைச் செய்கிறாரோ, அவைகளைக் குமாரனும் அந்தப்படியே செய்கிறார்." யோவான் 5:19, அது சரியா?

பிதாவானவர் முதலில் ஒரு தரிசனத்தின் மூலம் அவருக்கு, என்ன செய்ய வேண்டும், எதைச் செய்ய வேண்டும் என்று காண்பிக்கும் வரை, தாம் எந்த அற்புதத்தையும் அல்லது எதையும் செய்யவில்லை என்று இயேசுவின் சொந்த வார்த்தைகளே கூறின. அதன் பின்பு அவர் சென்று பிதா தமக்குக் காண்பித்ததைச் செய்தார். இப்போது, இயேசு சொன்னார், "நான் செய்கிற இந்தக் கிரியைகளை நீங்களும் செய்வீர்கள்," அது சரியா? "நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால் இவைகளைப்பார்க்கிலும் பெரிதானவைகளையும் செய்வீர்கள்." அவர் சொன்னார், "சற்றுநேரஞ்சென்றால் உலகம் (உலகம் இல்லை—இல்லை; அது கோஸ்மோஸ், உலகத்தின் அமைப்பு, உலகம். அவிசுவாசி), உலகம் என்னைக் காணாது. நான் சிலுவையில் அறையப்பட்ட பின்பு உலகம் இனி என்னைக்

காணாது; அவர்கள் இனி என்னைக் காணமாட்டார்கள், ஆனாலும் நீங்கள் (விசுவாசி) என்னைக் காண்பீர்கள், ஏனென்றால் நான், (தனிப்பட்ட பிரதிபெயர்), உலகத்தின் முடிவுபரியந்தமும் நான் உங்களுடனேகூட, உங்களுக்குள்ளேயும் இருப்பேன்." "இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்."

79 அவர் நேற்று என்ன செய்தாரோ, அவர் ஜனக்கூட்டத்தின் மத்தியில் நின்றார்; பிதா அவருக்குச் செய்யக் காண்பித்ததை அவர் செய்தார்; அவர் பேசினார். அவர்—அவரால் முடிந்தது... அந்த... அவர்களுடைய சிந்தனைகளைத் தாம் அறிந்திருந்ததாக இயேசு சொன்னார். இயேசு அவர்கள் சிந்தனைகளை அறிந்தார், அது வேதவசனமா? ஓ, நீங்கள் ஏன் தர்க்கிக்கிறீர்கள்? உன் விசுவாசம் உன்னைக் குணமாக்கிற்று." அங்கே குருடனான பர்திமேயுவை உன் விசுவாசம் சொஸ்தமாக்கிற்று, இதுபோல அந்த எல்லா காரியங்களும். ஜனங்கள் அவரிடம்

கொண்டுவரப்பட்டபோது, பிதா தமக்குக் காண்பித்தபடியே அவர் செய்தார்.

இப்போது, அவர் மரித்தோரிலிருந்து எழுந்திருந்தால், அவர் இன்றிரவும் அதையே செய்வார். அது சரியா? அவர் அதைச் செய்வாரானால், நீங்கள் அவரை விசுவாசித்து அவரை நேசிப்பீர்களா? இன்னும் ஒருமுறை நாம் ஜெபிப்போம்.

80 பிதாவே, இப்போது கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே, உயிர்த்தெழுதலுக்குப் பின்பு, கிலெயோபாவும் அவனுடைய நண்பனும் ஒரு பட்டணத்திற்கு நடந்து சென்றுகொண்டிருந்தார்கள். அங்கே அந்த வழியில் ஒரு அந்நியர் வந்து அவனிடம் பேசத் தொடங்கினார். அவர்கள் நாள் முழுவதும் பேசினார்கள், மேலும் அவர் அவர்களுக்கு வேதவசனங்களை விளக்கினார். அது அவர்தான் என்று அவர்கள் அறியவில்லை. அவர் பட்டணத்திற்குச் சமீபமாய் வந்தபோது, அவர் அப்புறம் போகிறவர்போலக் காண்பித்தார். ஆனால் அவர்கள் அவரை உள்ளே வந்து தங்களுடனே தங்கும்படி வற்புறுத்தினார்கள்.

வீட்டிற்குள் சென்று கதவு சாத்தப்பட்ட பின்பு, அவர் ஏதோ ஒன்றைச் செய்தார். அது ஒரு சாதாரண மனுஷன் செய்வதிலிருந்து வித்தியாசமாக இருந்தது. அவர் அதைத் தம்முடைய வழியில் செய்தார், அது அவர்தான் என்று அந்த ஜனங்கள் அறிந்துகொண்டார்கள். ஓ, எம்மாவுவிலிருந்து, எருசலேம் வரைக்கும் அவர்கள் எப்படித் திரும்பி ஓடிச்சென்று, "கர்த்தர் மெய்யாகவே உயிர்த்தெழுந்தார், ஏனென்றால் நாங்கள் அவரைக் கண்டோம்" என்று அவர்களிடம் சொன்னார்கள்.

இயேசுவே, மதக் கூட்டங்களில் செய்யப்படுவதை விட வித்தியாசமான ஏதோ ஒன்றை இன்றிரவு இந்தக் கூட்டத்தில் வந்து நீங்கள் செய்வீர்களா. கர்த்தாவே, நீங்கள் பூமியில் இருந்தபோது நீங்கள் செய்த வழியில், உங்களுடைய வழியில் அதைச் செய்யுங்கள், நீங்கள் மரித்தோரிலிருந்து எழுந்திருக்கிறீர்கள் என்பதை ஜனங்கள் அறியும்படி அப்படிச் செய்யுங்கள். நீங்கள் அந்த ஈஸ்டர் தினத்தில் மட்டும் உயிர்த்தெழவில்லை; அதிலிருந்து நீங்கள் எழுந்தவராகவே இருக்கிறீர்கள். நீங்கள்

எப்போதும் உயிருள்ளவராக இருப்பீர்கள்; நீங்கள் சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறீர்கள்.

ஓ கிறிஸ்துவே, தயவுசெய்து உமது—உமது பரிசுத்த நாமத்தினாலே, நீர் எங்களுடைய எல்லாப் பாவங்களையும் மன்னிக்கும்படி நான் கேட்கிறேன்; எங்களுடைய எல்லா அக்கிரமங்களையும் எங்களை விட்டு அகற்றிவிடும். மேலும் பிதாவே, உமது அடியானாகிய என்னுடைய தவறுகளை மன்னித்து, இன்றிரவு உமது பரிசுத்த ஆவியினால் எங்களைப் பரிசுத்தமாக்கும். கர்த்தாவே, உம்மோடு பேசிக்கொண்டிருக்கும் தகுதியற்ற இந்தப் நபருடைய சரீரத்திற்குள் வந்து, நீர் வாக்குத்தத்தம் செய்தபடியே, அதை ஒரு கருவியாகப் பயன்படுத்தும். அங்கே இருக்கும் செவிகளைப் பயன்படுத்தும்; உமது வார்த்தையைக் கேட்கும்படி, அங்கே இருக்கும் இருதயத்தையும் செவிகளையும் விருத்தசேதனம் செய்யும். நாங்கள் அனைவரும் ஆவிக்குள்ளாகி, எதிர்பார்ப்போடு இருப்போமாக. நீர் இந்த அறையைப் பரிசுத்த ஆவியினால் நிரப்பி, இங்கேயுள்ள ஒவ்வொரு வியாதியஸ்தரையும் குணமாக்கி, ஒவ்வொரு பாவியையும்

இரட்சித்து, அது தேவனுடைய மகிமைக்கென்று இருப்பதாமாக. இந்த ஆராதனைக்காக எங்களை உமது கரத்தில் ஒப்படைக்கிறோம்— ஒப்புக்கொடுக்கிறோம், இயேசுகிறிஸ்துவின் நாமத்தில். ஆமென்.

81 இன்று நீங்கள் சபையில் ஜெப அட்டைகளைக் கொடுத்தீர்களா? [நாடாவில் காலி இடம்] அதின் பின்பக்கத்தில் பாருங்கள்; அதில் என்னுடைய... [நாடாவில் காலி இடம்]... நீங்கள்... இப்போது உங்களை நீங்களே எடுத்துக்கொள்ளுங்கள், உங்களில் யாராவது ஒருவர், இன்றிரவு இங்கே குறைந்தபட்சம் ஆயிரத்து ஐந்நூறு அல்லது ஆயிரத்து அறுநூறு பேர் அமர்ந்திருக்க, நேராகக் கீழே பார்த்துக்கொண்டிருக்க, மற்றும் சாத்தான், தம்மால் முடிந்தால் ஒரு குறையையாவது கண்டுபிடிக்கும்படி சுற்றிக்கொண்டிருக்க, இந்த ஸ்திரீக்கு முன்பாக உங்களை இங்கே நிறுத்திப் பாருங்கள்... இப்போது என்னுடைய இடத்தில் உங்களை வைத்துப் பாருங்கள்.

விசுவாசிக்கவும், பரிசுத்த ஆவியானவர் அசைவாடுவதைக் கவனிக்கவும், அதைக் குறித்து

உங்களிடம் சொல்லவும், குணமாக்கவும், அங்குள்ள ஜனங்களாகிய உங்களுக்கு, பார்வையாளர்களுக்கு இந்தச் சவால் விடப்படுகிறது. பாருங்கள், இது எளிமையானது போலத் தெரிகிறது, ஆனால் வந்து முயற்சி செய்து பாருங்கள். அப்போது நான் எதை— என்ன சொல்கிறேன் என்று உங்களுக்குத் தெரியும். இப்போது, கிறிஸ்தவர்களாகிய நீங்கள் எனக்காக ஜெபத்தில் இருப்பீர்கள் என்று, எனக்காக ஜெபிப்பீர்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன். நாம் பேசுவது நம்முடைய கர்த்தரைக் குறித்துத்தான்.

82 இன்றிரவு இயேசுவை ஏற்றுக்கொண்டு, தங்களுக்குக் கைகளை உயர்த்தியவர்கள், அவருக்கு ஊழியம் செய்யுங்கள், அநேகமாக முப்பது, நாற்பது பேர் அப்படிச் செய்தார்கள். ஆனால் பாருங்கள் நண்பர்களே, தேவன் அவர்களை அழைத்தாலொழிய அவர்களால் தங்கள் கைகளை உயர்த்தியிருக்க முடியாது. இயேசு சொன்னார், "பிதா ஒருவனை முதலில் அழைத்தாலொழிய, எந்த மனுஷனும் என்னிடத்தில் வரமாட்டான். வருகிற

அனைவனுக்கும் நான் நித்திய ஜீவனைக் கொடுப்பேன்." இப்போது, அவர்கள் குழந்தைகள், இப்போதுதான் ஆரம்பிக்கிறார்கள். இப்போது, தாங்கள் ஏற்றுக்கொண்ட இந்தக் கிறிஸ்து யார் என்று அவர்கள் அறிய விரும்புகிறார்கள். அவர்கள் புத்தரைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறார்கள்; அவர்கள் விக்கிரகங் களைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறார்கள். கிறிஸ்தவத்திற்கு வெளியே அவர்கள் மற்ற மதங்களைப் பற்றியும் மற்றும் பலவற்றைப் பற்றியும் கேள்விப்பட்டிருக்கிறார்கள், ஆனால் தாங்கள் இப்போது ஏற்றுக்கொண்ட இந்தக் கிறிஸ்து யார்? அவர்கள் அதை விசுவாசத்தினாலே செய்தார்கள்.

இப்போது, அவர் மரித்தோரிலிருந்து எழுந்தார் என்று நான் சொல்கிறேன்: தேவன் ஒரு மரித்தவர் அல்ல. முகமது, புத்தர், மற்றும் மற்ற அனைவரும் பல ஆயிரம் வருஷங்களாக மரித்தவர்களாயிருக்கிறார்கள், ஆனால் இயேசு மரித்தோரிலிருந்து எழுந்தார், அவர் இன்றிரவு உயிரோடிருக்கிறார். அது ஒன்றுதான் இதை நிரூபிக்க முடியும்.

83 இப்போது, இங்கே நாம் ஒரு சிறிய கையளவு ஜனங்களுக்குள்ளே இருக்கிறோம், ஆனால் கிறிஸ்தவத்தைப் பிரதிநிதித்துவப் படுத்துகிற உயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்து, நம்முடைய எண்ணங்களை நிரூபிக்க இன்றிரவு இங்கே இருக்கிறார்... கிறிஸ்தவர்களான நீங்கள் அனைவரும், நீங்கள் சரியான பக்கத்தில் இருக்கிறீர்கள், அது முற்றுமுழுதான உண்மை. நீங்கள் தோற்றுப்போக முடியாது; நீங்கள் கிறிஸ்துவுக்குள் இருக்கிறீர்கள்.

இப்போது, சொல்லுங்கள்... இந்த ஸ்திரீ, அவள் வியாதியுள்ளவளாயிருக்கலாம்; அவளுக்குப் பாடுகள் இருக்கலாம். அவளுடைய இருதயத்தில் கவலைகள் இருக்கலாம். அவள் தனக்காகவே கூட நிற்காமல் இருக்கலாம், ஒருவேளை வேறு யாருக்காகவோ அவள் இங்கே வந்திருக்கலாம். அவள்—அவளுக்குப் பொருளாதாரப் பிரச்சனைகள் இருக்கலாம், ஒருவேளை எங்கேயோ இருக்கும் தன் பிள்ளைகளுக்காக ஜெபிக்க வேண்டும் என்று அவள் விரும்பலாம். எனக்குத் தெரியாது; என்னால் உங்களுக்குச் சொல்ல முடியாது.

அறிந்திருக்கிறவர் ஒருவரே உண்டு, அது தேவன்தான்.

ஆனால் கிணற்றருகே இருந்த ஸ்திரீயின் காரியத்தைப் போலவே இதுவும் இருக்கிறது. இயேசு கிணற்றருகே இருந்த ஸ்திரீயோடு பேசினார், அவர்... முதல் காரியமாக, அவர் அவளோடு பேசத் தொடங்கினார், பின்பு அவளோடு உரையாடின பின்பு, அவர் அவளை நோக்கி, "நீ போய், உன் புருஷனை அழைத்துக் கொண்டுவா" என்றார்.

அவள், "எனக்குப் புருஷன் இல்லை" என்றாள்.

அவர், "அது சரிதான்; உனக்கு ஐந்து புருஷர் இருந்தார்கள்" என்றார்.

"ஏன்," அவள் சொன்னாள், "ஆண்டவரே, நீர் தீர்க்கதரிசி என்று காண்கிறேன். இப்போது, மேசியா வரும்போது, அவர் இந்தக் காரியங்களை எங்களுக்குச் சொல்வார் என்று எனக்குத் தெரியும்." யோவான் 4. "அவர் இந்தக் காரியங்களை எங்களுக்குச் சொல்வார், ஆனால் நீங்கள் யார்?"

மேசியாவின் அடையாளம் என்னவா யிருந்தது? அடையாளம் என்னவாயிருந்தது? அவர் உங்கள் இருதயத்தின் இரகசியங்களை அறிவார். அது சரியா? அதனுடைய அடையாளம்... அவள் சொன்னாள், "எனக்குத் தெரியும். எங்களுக்குத் தெரியும், மேசியா வரும்போது அவர் இந்தக் காரியங்களைச் செய்வார் என்று சமாரியராகிய எங்களுக்குத் தெரியும், ஆனால் நீங்கள் யார்? நீங்கள் ஒரு தீர்க்கதரிசியாகத்தான் இருக்க வேண்டும்."

அவர் சொன்னார், "உன்னுடனே பேசுகிற நானே அவர்."

அவள் ஊருக்குள் சென்று, "ஒரு மனுஷனை வந்து பாருங்கள்..." என்றாள். அது சரிதான். அது சரிதான். நீங்களும் நாளை இதே காரியத்தைப் போய்ச் சொல்லுங்கள், "காலையில் சபைக்கு வந்து ஒரு மனுஷனைப் பாருங்கள் (காண்கிறீர்களா?), உங்கள் இருதயத்தின் இரகசியங்கள் அனைத்தையும் அறிந்திருக்கிற தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்துவை வந்து பாருங்கள்."

84 இப்போது, இந்த ஸ்திரீயை ஒரு நீதிமான் என்று நான் நம்புகிறேன். மேலும் இப்போது, அவள் ஒரு கிறிஸ்தவள், அல்லது அது என்னிடம் ஏற்கனவே சொல்லப்பட்டிருக்கிறது. கிணற்றருகே இருந்த ஸ்திரீக்கு அவர் செய்ததைப் போல, வேதாகமம் முழுவதும் அவர் செய்ததைப் போல, அவள் எதற்காக இங்கே வந்திருக்கிறாள் என்பதை தேவன் எனக்குச் சொல்வாரானால், இயேசு மெய்யாகவே மரித்தோரிலிருந்து எழுந்து இன்றிரவு இங்கே இருக்கிறார் என்பதை நீங்கள் விசுவாசிப்பீர்களா? நீங்கள் அப்படிச் செய்வீர்களா? உங்கள் கைகளை உயர்த்தி, "எனக்குத் தெரிந்தால் நான் அதைச் செய்வேன்... அது எனக்கு நிரூபிக்கப்பட்டால், என் மனதிலிருக்கும் எல்லா சந்தேகங்களும் நீங்கிவிடும்" என்று சொல்வீர்களா. இப்போது, கர்த்தர் அதை அருளுவாராக.

நான் அந்தச் சகோதரியிடம் ஒரு நிமிடம் பேச விரும்புகிறேன். பின்பு, நீங்கள் அதைப் பற்றி என்ன நினைத்தாலும் அது உங்களைப் பொறுத்தது. இப்போது, இது இயற்கைக்கு

அப்பாற்பட்டது என்பதை நீங்கள் அறிந்திருக்க வேண்டும். நான் சொல்ல வருத்தப்படுகிறேன்; உங்களில் சிலர் இதை விசுவாசிப்பதில்லை, ஆனால் எப்படியிருந்தாலும் அது அப்படித்தான் இருக்கிறது. காண்கிறீர்களா? இப்போது, நீங்கள் உங்களை மறைத்துக்கொள்ள முடியாது. காண்கிறீர்களா? அவர் இப்போது என்னை அபிஷேகம் செய்திருக்கிறார். காண்கிறீர்களா? ஆனால் அது சரிதான். ஆனால் நீங்கள் காண்பீர்கள், அதைப் பற்றிய உங்கள் மனப்பான்மைதான் உங்கள் சேருமிடத்தைத் தீர்மானிக்கும். அது சரிதான்.

85 இப்போது, சகோதரி, நீங்கள் ஒரு கிறிஸ்தவள் என்பதை அறிந்து நான் உங்கள் பக்கம் திரும்பும்போது, ஏனென்றால் சற்று நேரத்திற்கு முன்பு பரிசுத்த ஆவியானவர்... நான் உங்களிடம் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன், அங்கே உங்களுக்கு ஒருவித பரிசுத்தமான உணர்வைப் போல ஒரு வினோதமான உணர்வு வந்தது, அது சரியா? உங்கள் கண்களில் கண்ணீரைக் கொண்டுவரும் அளவிற்கு... அது சரிதான். காகிதத்தில் நீங்கள் பார்க்கிற

தேவனுடைய தூதனாகிய அவர் இப்போது இங்கே இருக்கிறார் என்ற அபிஷேகம் என்னைத் தாக்கியது அப்போதுதான். அதைத்தான் நீங்கள் இப்போது உணருகிறீர்கள். அப்படிப்பட்ட ஒரு இனிமையான உணர்வு, ஒருவருமில்லை, ஓ, இந்த அற்புதமான, பரலோகச் சூழ்நிலையை நீங்கள் மட்டும் உணர முடிந்தால். அது அவருடைய பிரசன்னம்.

இப்போது, நீங்கள் எல்லாரும் அந்தப் படத்திலுள்ள அந்தத் தூதனைக் கண்டீர்களா? நியாயத்தீர்ப்பு நாளிலே என்னை நியாயந்தீர்க்கப்போகிற சர்வவல்லமையுள்ள தேவன், அந்தத் தூதன் இப்போது சரியாக இங்கே இருக்கிறார் என்பதை அறிவார். நீங்கள் இந்தப் பக்கமாகப் பார்த்துக்கொண்டு, நேராக அதைப் பார்த்துக்கொண்டிருக்கிறீர்கள். என்னை அல்ல, அவரை. அது பார்வையாளர்கள் மத்தியில், எல்லா இடங்களிலும் அசைவாடுவதை என்னால் உணர முடிகிறது. இப்போது, நான் இந்தச் சகோதரியிடம் ஒரு நிமிடம் பேச முடிந்தால்.

86 இப்போது, சகோதரி, நான் உங்களுக்கு ஒரு அந்நியனாக இருக்கிறேன், என் வாழ்க்கையில் நான் உங்களைப் பார்த்ததே இல்லை. பின்பு நீங்கள் எதற்காக இங்கே வந்தீர்கள் என்று தேவன் எனக்கு அறியத்தந்து, உங்களைப் பற்றி எனக்கு எதுவுமே தெரியாத ஒரு காரியத்தை அவர் எனக்குச் சொல்வாரானால், அது இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையின் மூலமாகத்தான் வர வேண்டும் என்று நீங்கள் அறிந்துகொள்வீர்கள். ஆனால் அது கர்த்தராகிய இயேசுதான் என்று விசுவாசிப்பீர்களா, நீங்கள் எதைத் தேடி வந்தீர்களோ அவர் அதை உங்களுக்குக் கொடுக்கும்போது அதை ஏற்றுக்கொள்வீர்களா, நான் அவரைச் சரியாகப் பிரதிநிதித்துவப்படுத்தியிருக்கிறேன் என்று அவரை விசுவாசிப்பீர்களா? இப்போது, நான் அவரைப் பற்றிப் பேசிக்கொண்டும், அவர் எப்படிப்பட்டவர் என்று சொல்லிக்கொண்டும் இருந்தேன், இப்போது அதை எனக்கு வெளிப்படுத்த வேண்டியது அவர்தான், அது சரியா?

இப்போது, பார்வையாளர்களுக்கு என் சத்தம் கேட்டால், என் குரல் எவ்வளவு சத்தமாக இருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை, அந்த ஸ்திரீ என்னை விட்டு விலகிச் செல்கிறார். நான் அவளைப் பார்க்கிறேன்; அவள் ஏதோ ஒரு இடத்தில் இருக்கிறாள்; அது ஒரு மருத்துவரின் அலுவலகம் அல்லது ஒரு மருத்துவமனை. அவளுக்கு—ஒரு அறுவை சிகிச்சை நடக்கிறது. அது அவளுடைய கையில் நடக்கிறது; அது அவளுடைய வலது கை மற்றும் அவளுடைய நடுவிரல். மேலும் அவளுக்கு... அங்கே மருத்துவர் சொல்கிறார்... அது ஒரு வீரியமிக்க கட்டி (malignancy) என்று அவர் சொல்கிறார் என நான் நம்புகிறேன். அவர் அறுவை சிகிச்சை செய்தார், ஆனால் அது எந்த நன்மையையும் செய்யவில்லை. அது மறுபடியும் நகர்ந்து கொண்டிருக்கிறது.

மேலும் அந்த ஸ்திரீயும் பாடுபடுகிறாள். அவள் தன் உடைகளை மாற்றிக்கொள்ளும் இடத்தை நான் பார்க்கிறேன். அவளுடைய காலில் உள்ள ஏதோ ஒன்றினால் அவள் பாடுபடுகிறாள்; அது வெரிகோஸ் வெயின்ஸ்

(varicose veins), அவள் அதைத் தேய்த்துவிடுகிறாள், அது அவளுடைய காலில் தசைப்பிடிப்பை ஏற்படுத்துகிறது. அந்த காரியங்கள் உண்மைதான், அப்படித்தானே சகோதரி? அவைகள் உண்மையானால், உங்கள் கையை உயர்த்துங்கள். நீங்கள் விசுவாசிக்கிறீர்களா?

87 இப்போது, நான் அந்த ஸ்திரீயிடம் என்ன சொன்னேன் என்று எனக்குத் தெரியாது; அது நானல்ல பேசினது; அந்தப் படத்தில் நீங்கள் காணும் அந்தத் தூதன்தான் அது. இப்போது, அவர் என்ன சொன்னாரோ, அதைச் சோதித்துப் பார்த்து அது உண்மையா இல்லையா என்று பாருங்கள். இப்போது, அந்த அபிஷேகம் இங்கே இருந்து, நான் அந்த ஸ்திரீயின் மேல் என் கைகளை வைத்தால்... இயேசுவின் வாயிலிருந்து வந்த அந்த கடைசி வார்த்தைகள், அவர் சொன்னார், "நீங்கள் உலகமெங்கும்போய், சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்; விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான். விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையா

ளங்களாவன." அவர் சொன்ன கடைசி காரியம், "வியாதியஸ்தர்மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள்." அது சரியா? பின்பு அது எதுவாக இருந்தாலும், நீங்கள் ஜெபிக்கும்போது நானும் சகோதரிக்காக ஜெபிக்கிறேன். சகோதரி, நீங்கள் சற்று அருகில் வருவீர்களா.

பரம பிதாவே, இந்த நபரை நீர் அறிந்திருக்கிறீர், நீர் இவளைக் குணமாக்கி, இவளைச் சொஸ்தமாக்கும்படி, அல்லது இவளுடைய இருதயத்தின் விருப்பத்தை இவளுக்குக் கொடுத்து இவள் நீண்ட ஆயுளோடிருக்கும்படி நான் கேட்கிறேன். இவள் வாழும் பகுதியிலே இவளுடைய சாட்சி ஒரு எழுப்புதலை உண்டாக்குவதாக. இந்த ஆசீர்வாதத்தை இயேசுவின் நாமத்தில் கேட்கிறேன். ஆமென். சகோதரி, தேவன் இப்போது உங்களை ஆசீர்வதிப்பாராக; செல்லுங்கள், அவரைச் சந்தேகிக்க வேண்டாம், ஆனால் இயேசு உங்களுக்கு ஜெயத்தைத் தருகிறார் என்று உங்கள் முழு இருதயத்தோடும் அவரை விசுவாசியுங்கள்.

கர்த்தருக்கு ஸ்தோத்திரம். அவர் பெரியவர், ஆச்சரியமானவர்; அவர் தோற்றுப்போக முடியாது, ஏனென்றால் அவரே கர்த்தராகிய தேவன். ஆமென், நாம் அவரை எவ்வளவு நேசித்து, அவரைத் துதிக்கிறோம்.

88 அங்கே நேராகப் பின்புறம் அமர்ந்திருக்கும் சகோதரி, அங்கே வரிசையின் முடிவில் நேராகப் பின்புறம் அமர்ந்திருக்கிறவர், இருதய வியாதியைக் கொண்டிருக்கிறீர்கள், அங்கே அமர்ந்துகொண்டு என்னை அப்படிப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். பயப்பட வேண்டாம்; அப்போதே உங்கள் விசுவாசம் உங்களை இரட்சித்தது. உங்கள் முழு இருதயத்தோடும் நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? நீங்கள் அப்படிச் செய்தால், நீங்கள் உங்கள் சுகத்தைப் பெற்றுக்கொள்ளலாம். நன்றி...?...

இதோ, நீங்கள் அறிந்துகொள்ளும்படியாக, உங்களுக்கு முன்னால் உள்ள இரண்டாவது வரிசையில், இரண்டாவது நபராக, கீல்வாதம் (arthritis). இயேசுகிறிஸ்து உங்களைச் சொஸ்தமாக்குகிறார் என்று நீங்கள்

விசுவாசித்தால், நீங்கள் கேட்பதை நீங்கள் பெற்றுக்கொள்ளலாம். ஆமென்.

இங்கே தன் கைகளைத் தட்டிக்கொண்டிருக்கும் சிறிய சகோதரி, நேராக இங்கே முன்னால் இருக்கிறவர், குறிப்பாக இரவு நேரத்தில் சாப்பிட்ட பிறகு, படுக்கும்போது அவளுக்கு இருதயத் துடிப்பு அதிகமாகிறது. அது சரிதான். அது சரியல்லவா சகோதரி? அப்படியாக உங்கள் கையை உங்கள் வாயின் மேல் வையுங்கள், அது உண்மைதானே, உங்கள் தோள்களைச் சுற்றி ஒரு சிறிய சால்வையுடன் நேராக இங்கே இருக்கிறீர்கள்? நீங்கள் படுக்கும்போது உங்களுக்கு மூச்சுத் திணறல் ஏற்படுகிறது; அது இருதய வியாதி என்று நீங்கள் நினைக்கிறீர்கள், ஆனால் அது அதல்ல. அது அஜீரணம்; நீங்கள் சாப்பிடுவது குழாய் வழியாக மேலே தள்ளப்பட்டு உங்கள் இருதயத் துடிப்பை அதிகரிக்கச் செய்கிறது. இனி உங்களுக்கு அது இருக்காது; உங்கள் விசுவாசம் உங்களைச் சொஸ்தமாக்கிற்று. உங்களிடம் ஜெப அட்டை இல்லை, அப்படித்தானே? உங்களுக்கு அது

தேவையில்லை (காண்கிறீர்களா?), நீங்கள் விசுவாசத்தோடு மட்டும் இருங்கள்...?...

89 இப்போது, எனக்கு முன்பாக இருக்கும் மனுஷனே, இயேசு மாறாதவர் அல்லவா? என்ன நடந்தது? அந்த ஸ்திரீயின் விசுவாசம், அவள் ஜெபித்துக்கொண்டிருந்தாள்; அது என்னையல்ல, இயேசுவைத் தொட்டது. ஆனால் நாம் அவருடையவர்கள்... பூமியில் அவருக்கு இருக்கிற ஒரே உதடுகள் நம்முடைய உதடுகள்தான். அவருக்கு இருக்கிற ஒரே கைகள் நம்முடைய கைகள்தான். "நான் உங்களுடனேகூட, உங்களுக்குள்ளேயும் இருப்பேன்..." தம்மைத் தாமே உலகத்திற்கு வெளிப்படுத்திக்கொண்டிருக்கிறார். "நான் செய்கிறவைகளை நீங்களும் செய்வீர்கள்." பேசுவதற்கு நம்முடைய உதடுகளை மட்டும் பயன்படுத்துகிறார்...

"அது என்ன, சகோதரர் பிரன்ஹாம்?" அது பரிசுத்த ஆவியானவருக்குக் கீழ்ப்படிந்து ஒப்புக்கொடுப்பது; அவ்வளவுதான், ஒப்புக் கொடுப்பது. அவர் உங்களை எதற்காகப் பயன்படுத்த விரும்புகிறார் என்பதைக்

கண்டறிந்து, பின்பு அவருக்கு உங்களை ஒப்புக்கொடுங்கள். யாரையாவது சென்று பேச வேண்டும் என்றால், உங்களை ஒப்புக்கொடுத்துவிட்டுச் சென்று பேசுங்கள். விசுவாசியுங்கள்.

90 இப்போது, இங்கே நிற்கும் மனுஷனே, மாலை வணக்கம் அப்பா. நாம் ஒருவருக்கொருவர் அந்நியர்கள், அப்படித்தானே சகோதரரே? என் வாழ்க்கையில் நான் உங்களைப் பார்த்ததே இல்லை. என் தந்தை இன்றிரவு உயிரோடிருந்தால், அவருக்கு உங்களுடைய வயது இருக்கும் என்று நான் கற்பனை செய்கிறேன். அவர் உங்களைப் போன்ற உருவத்தைக் கொண்ட ஒரு மனுஷன். அப்பா, நீங்கள் நிற்கும் இடத்தில் அவர் நின்றால் இன்றிரவு உலகத்தையே நான் கொடுப்பேன். இனி நான் அவரை இந்தப் பூமியில் ஒருபோதும் பார்க்கப்போவதில்லை; அவர் சென்றுவிட்டார். ஆனால் தேவன் அவருடைய ஆத்துமாவை, அவருடைய வீரம் மிக்க ஆத்துமாவை சமாதானத்தில் இளைப்பாறப் பண்ணுவாராக.

ஆனால் இயேசு உயிரோடிருக்கிறார்; அவர் மரித்தோரிலிருந்து எழுந்தார். இப்போது, உங்களைப் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்பதை நீங்கள் அறிவீர்கள், அப்பா. நான் வெறும்—நான் இங்கே நிற்கும் ஒரு மனுஷன் மட்டுமே. அநேகமாக நீங்கள் என் தந்தையாக இருப்பதற்குப் போதுமான வயதுடையவர். நான்—நான் உங்களைப் பார்த்ததே இல்லை, உங்களைச் சந்தித்ததும் இல்லை; உங்களைப் பற்றி எல்லாவற்றையும் தேவன் ஒருவரே அறிவார். அது—அது உண்மைதான், அல்லவா? ஆனால் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவுக்கு உங்களைப் பற்றி எல்லாம் தெரியும், அப்படித்தானே? நிச்சயமாக அவருக்குத் தெரியும், நிச்சயமாக.

91 இப்போது, இந்த மனிதர், பார்வையாளர்கள் என் பேச்சைக் கேட்க முடியுமானால்; நான் எவ்வளவு சத்தமாகப் பேசுகிறேன் என்று எனக்குத் தெரியவில்லை, ஆனால் நான் வேறு எங்கோ இருக்கிறேன். நான் ஒரு மேடையில் இருக்கிறேன் என்று எனக்குத் தெரியும், ஆனால் நான் ஒரு மருத்துவமனையிலும் நின்று

கொண்டிருக்கிறேன். இந்த மனிதருக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது; அது குடல் இறக்கத்திற்காக (hernia) செய்யப்பட்டது. அவருக்கு இரண்டு அறுவை சிகிச்சைகள் நடந்துள்ளன. அவற்றில் ஒன்று அவருக்கு மிகவும் வலிக்கச் செய்தது, அதுவே முதலாவதாக இருந்தது. இரண்டாவது அவ்வளவு மோசமாக இல்லை. நீங்கள் ஒரு திருமணமான மனிதர்; உங்கள் மனைவி, அவர் இங்கே இருக்கிறார், அவருடைய காலில் ஒரு பிரச்சனை இருக்கிறது. உங்களுக்கு ஒரு மகன் இருக்கிறான், அந்த மகன் நடுத்தர வயதுடையவர், அவருக்கு இளம்பிள்ளை வாதம் (polio) வந்துள்ளது; அவருடைய கை ஊனமாக இருக்கிறது. அவர் இன்றிரவு உங்களுடன் இங்கே இருக்கிறார். அந்த காரியங்கள் உண்மையானவை; நீங்கள் விசுவாசிக்கிறீர்களா?

தேவனே, என் இரட்சகரே, இந்த என் சகோதரருக்கு, அவருடைய இருதயத்தின் ஆழமான வாஞ்சையை நீர் தர வேண்டும் என்று நான் ஜெபிக்கிறேன். ஆண்டவரே, அவருக்குத் தேவையான காரியம் எதுவாக இருந்தாலும் சரியே. இந்த அன்பான முதிய சகோதரரை என்

மார்போடு அரவணைத்துக் கொண்டு, இயேசுவின் நாமத்தில் நான் ஜெபிக்கிறேன், நீர் அவருடைய வாஞ்சையை அவருக்குத் தருவீராக. ஆமென். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக, என் அன்பான சகோதரரே, கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில் நீங்கள் எதற்காக வந்தீர்களோ அதைப் பெற்றுக்கொள்ளுங்கள் (ஆமென்). சரி.

92 சகோதரன் வுட், நீங்கள் இங்கே வந்து சில நிமிடங்கள் என் அருகில் நின்றால், அவர்கள் விரும்பினால், கொஞ்சம் உதவி செய்ய முடியுமா.

நீங்கள் உங்கள் முழு இருதயத்தோடும் விசுவாசிக்கிறீர்களா? வெறுமனே விசுவாசமாயிருங்கள். ஓ, எவ்வளவு அற்புதம், தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக.

ஐயா, அங்கே உட்கார்ந்து ஜெபித்துக்கொண்டிருக்கும் உங்களை, அந்த முழங்கால் பிரச்சனையிலிருந்து தேவன் குணமாக்க முடியும் என்று விசுவாசிக்கிறீர்களா, இங்கே சரியாகப் பின்னால் உட்கார்ந்திருக்கிற,

சுமார்...?...ஏழு வரிசைகளுக்குப் பின்னால், ஆறு அல்லது ஏழு வரிசைகளில் இங்கே, முன் பக்கத்தில் உட்கார்ந்திருக்கிற, முழங்கால்களில் பிரச்சனை உள்ளவரே. நீங்கள் தேவனை விசுவாசிக்கிறீர்களா, சரியாக, உங்கள் கையைப் பின்னால் வையுங்கள், நீங்கள் தான் ஐயா, அங்கே சிவப்பு சட்டை அணிந்திருக்கிறவரே, திரும்பி, சரியாக உங்கள் பின்னால், உங்கள் பின்னால், உங்களுக்குச் சரியாகப் பின்னால் உட்கார்ந்திருக்கிற அந்தப் பெண்மணி மீது உங்கள் கையை வையுங்கள். என்னையே மிகவும் ஊக்கமாகப் பார்த்துக்கொண்டிருக்கிற, உங்களுக்குச் சரியாகப் பின்னால் உட்கார்ந்திருக்கிறவர் மீது.

பிதாவே, கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில், நான் கேட்கிற நபருக்கு இந்த ஆசீர்வாதத்தை உமது மகிமைக்காக நீர் அருள வேண்டும் என்று நான் ஜெபிக்கிறேன். ஆமென்.

93 அது உங்களுக்கு எந்தத் தீங்கும் செய்யாது, ஐயா. உங்களுக்குத் தெரியாத ஒரு காரியத்தை நான் உங்களுக்குக் காண்பிக்கிறேன். முழங்கால் பிரச்சனை இருந்த அந்தப்

பெண்மணிக்கு, உங்களுக்குப் பக்கத்தில் இருக்கும் பெண்மணி மீது உங்கள் கையை வையுங்கள், ஏனென்றால் அவர் பித்தப்பை (gallbladder) பிரச்சனையால் கஷ்டப்படுகிறார். அது சரிதானே, அம்மா? அப்படியானால், உங்கள் கையை உயர்த்துங்கள். சரி. இப்போது, அம்மா, நீங்கள் உங்கள் கையை அவர் மீது வையுங்கள். இப்போது, இயேசுவின் நாமத்தில் அது இனி ஒருபோதும் உங்களைத் தொந்தரவு செய்யாதிருப்பதாக. நீங்களும் அறிந்து கொள்ளும்படியாக, உங்களுக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருக்கும் பெண்மணிக்குக் கழுத்துப் பிரச்சனை, முதுகுப் பிரச்சனை இருக்கிறது. அது சரிதானே, அம்மா? அது சரி என்றால், உங்கள் கையை உயர்த்துகிறீர்களா? ஆமென். அவர் இங்கே இருக்கிறார்.

இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார். அவர் உங்கள் நடுவில் உயிருடன் இருக்கிறார். நோக்கிப் பார்த்துப் பிழைக்க உங்கள் விசுவாசத்திற்கு நான் சவால் விடுகிறேன். உங்கள் முழு இருதயத்தோடும் விசுவாசியுங்கள். நீங்கள் கேட்பதை நீங்கள் பெற்றுக்கொள்ள முடியும்.

94 வணக்கம், ஐயா. நாம் ஒருவருக்கொருவர் முன்பின் அறிமுக மில்லாதவர்கள் என்று நான் நினைக்கிறேன், ஐயா. எனக்கு உங்களைத் தெரியாது, ஆனால் தேவனுக்கு உங்களைத் தெரியும், இல்லையா?

அவர் என்னைச் சந்தித்த அந்த இரவில், வியாதியஸ்தர்களுக்காக ஜெபிக்க நான் அழைக்கப்பட்டிருக்கிறேன் என்று என்னிடம் சொன்னார். அதனால்தான் எனக்கு மூன்று நிமிடம் வயதாக இருக்கும்போதே அந்த வெளிச்சம் வந்தது. நான் அவரிடம், "மக்கள் என்னை நம்ப மாட்டார்கள்" என்று சொன்னேன்.

அவர் சொன்னார், "இஸ்ரவேல் புத்திரரை விடுவிக்க மோசே தேவனால் அனுப்பப்பட்டார் என்பதை நிரூபிக்க அவனுக்கு அடையாளங்கள் கொடுக்கப்பட்டது போல, உனக்கும் அடையாளங்கள் கொடுக்கப்படும்." அவர் சொன்னார், "அவர்களுடைய இருதயத்தில் உள்ள அதே சிந்தனையை நீ அவர்களிடம் சொல்வாய், இதன் மூலம் அவர்கள் விசுவாசிப்பார்கள்."

நீங்கள் அதை விசுவாசிக்கிறீர்களா? நான் உங்களுக்கு முன்பின் அறிமுகமில்லாத வனாகவும், உங்களை அறியாதவனாகவும் இருக்கிறேன், ஆனால் தேவனுக்கு உங்களைத் தெரியும், அவர் உங்கள் இருதயத்தின் ரகசியத்தை, அல்லது உங்கள் இருதயத்தின் வாஞ்சையை எனக்கு வெளிப்படுத்தினால், நீங்கள் எதற்காக வந்தீர்களோ அதை ஏற்றுக்கொள்வீர்களா? பார்வையாளர்களும் அதே காரியத்தைச் செய்வார்களா? தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக, சகோதரரே.

95 இப்போது, இந்த மனிதர் என்னிடமிருந்து நகர்கிறார் (பார்வையாளர்கள் என் பேச்சைக் கேட்க முடியுமானால்). இந்த மனிதர் வேறு ஒருவருக்காக இங்கே வந்திருக்கிறார். அது அவருடைய மனைவி, அவர் ஒரு மருத்துவமனையில் இருக்கிறார். அவளுக்கு ஏதோ இருக்கிறது—அவளுடைய கால்களில் கட்டுகள் சுற்றப்பட்டுள்ளன. அவளுடைய உடல் முழுவதும் ஏதோ ஒரு வகையான தடிப்பு (breaking out) வந்திருக்கிறது. இன்றிரவு நீங்கள் அவருக்காக நிற்க வந்திருக்கிறீர்கள். நான் தேவனுடைய

ஊழியக்காரன், அவருடைய தீர்க்கதரிசி என்பதை நீங்கள் அறிந்துகொள்ளும்படியாக, நீங்களும் கஷ்டப்படுகிறீர்கள். அது ஒரு வயிற்றுப் பிரச்சனை. உங்கள் வயிறு எப்போதும் எரிகிறது. நீங்கள் மிகவும் பதட்டமாகவும் கவலையாகவும் இருப்பதே இதற்குக் காரணம். அது உங்கள் வயிற்றின் அடிப்பகுதியில் உள்ள ஒரு புண் (ulcer). சில நேரங்களில் நீங்கள் ஏப்பம் விடும்போது, நீங்கள்—புளித்த ஏப்பங்களுடன் நீங்கள் மிகவும் கூச்சமாக உணர்கிறீர்கள். பின்னர் இங்கே மேலே, உங்கள் பாதையில் அடைபட்ட குழாய்கள் உள்ளன. அது உண்மைதானே, இல்லையா? நீங்கள் வீட்டிற்குச் சென்று நீங்கள் கேட்டதைக் கண்டடைவீர்கள் என்று விசுவாசிக்கிறீர்களா? அப்படியானால் சென்று அதை இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் பெற்றுக்கொள்ளுங்கள்...?...தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

96 நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம். நீங்கள் விசுவாசித்தால் மட்டும் போதும், சில நிமிடங்களில் முடவர்கள் நடப்பதையும், குருடர்கள் பார்ப்பதையும்,

செவிடர்கள் கேட்பதையும், ஊமைகள் பேசுவதையும் நீங்கள் காண்பீர்கள். ஒரு நிமிடம் கவனியுங்கள். அவர்கள் இங்கே இருக்கிறார்கள். விசுவாசம் அந்த இடத்தை அடையும் வரை காத்திருங்கள். நான் அதை எதிர்பார்க்கிறேன்.

வணக்கம், ஐயா. நாம் ஒருவருக்கொருவர் முன்பின் அறிமுகமில்லாதவர்கள், ஐயா. எனக்கு—எனக்கு உங்களைத் தெரியாது, ஆனால் தேவனுக்கு உங்களைத் தெரியும், இல்லையா? நான் பயபக்தியுடன் இருக்கவே முயற்சிக்கிறேன். அப்போது ஏதோ நடந்தது; அது எங்கே இருந்தது என்று என்னால்—என்னால் பார்க்க முடியவில்லை. யாரோ சுகமாக்கப்பட்டார்கள். நான் மிகவும் பலவீனமாகிவிட்டேன், அந்த—அந்த வெளிச்சம் பார்வையாளர்கள் மீது வருவதை நான் பார்த்தேன், ஆனால் அது எங்கே இருக்கிறது என்று என்னால் பார்க்க முடியவில்லை. அங்கும் இங்கும் நகர வேண்டாம்; மிகவும் பயபக்தியுடன் இருங்கள். அது எனக்கு மேலே உள்ள பால்கனியில் (balcony) இருந்தது என்று நான் நம்புகிறேன் அல்லது—அது எங்கே என்று

என்னால் சரியாகச் சொல்ல முடியவில்லை... அது அந்தத் திசையிலிருந்து வந்தது.

இப்போது நாம்—நாம் தேவனுக்கு முன்பாக இருக்கிறோம்; நாம் தேவனுடைய பிரசன்னத்தில் இருக்கிறோம். மிகவும் பயபக்தியுடன் இருங்கள். பார்த்தீர்களா? உங்கள் முழு இருதயத்தோடும் விசுவாசியுங்கள். இப்போது, அது என்னை மிகவும் பலவீனமாக்குகிறது, எனவே உங்கள் இருதயத்தில் ஜெபியுங்கள்.

97 இப்போது, இந்த மனிதர்—நான் ஒருபோதும் பார்த்திராத ஒரு மனிதர் இங்கே நிற்கிறார். அவர் ஏதோ ஒரு நோக்கத்திற்காக இங்கே இருக்கிறார்; எனக்குத் தெரியாது. நான் அவரை சுகமாக்க விரும்புகிறேன், நான் சுகமாக்க விரும்புகிறேன், ஆனால் என்னால் முடியாது. வேறு யாராலும் முடியாது; அதற்குத் தேவன் தேவை. அவர் தேவன் மேல் விசுவாசம் வைக்க வேண்டும். நான்—தேவன் எனக்குக் கொடுத்த ஒரு வரத்தினால், அவர் விசுவாசிக்கும் நிலைக்கு அவருடைய விசுவாசத்தை எழச் செய்ய என்னால்

முடியலாம். நீங்கள்—நீங்கள் விசுவாசிக் கிறீர்களா, ஐயா? உங்களுக்கு உள்ள பிரச்சனை என்னவென்றால், உங்களுக்குக் கட்டிகள் (tumors) உள்ளன. அந்தக் கட்டிகள் உங்கள் தோள்பட்டையில் உள்ளன. அது சரிதான். இப்போது, உங்கள் கோட் புடைத்திருப்பதால் (நான் அதைப் பார்த்துக் கொண்டிருந்தேன் என்று பொதுமக்கள் நினைக்கலாம்), நீங்கள் என்னை தேவனுடைய தீர்க்கதரிசியாக விசுவாசிக்கிறீர்களா? என்னைப் பார்த்து வெறுமனே... எதையும் பற்றி சிந்திக்க வேண்டாம்; என்னைப் பார்த்து—இயேசுவைப் பற்றி சிந்தியுங்கள், "இயேசுவே, நான் உம்மை விசுவாசிக்கிறேன்" என்று சொல்லுங்கள், அப்பொழுது அது அப்படி இல்லை என்பதை பொதுமக்கள் பார்ப்பார்கள். ஒருவேளை அவர் எனக்கு வேறு ஏதாவது காண்பிப்பார்.

ஆம், நான் வேறு ஒன்றைப் பார்க்கிறேன். பிரச்சனையிலிருக்கும் ஒரு மனைவி உங்களுக்கு இருக்கிறார். அவர் உங்களுடன் இருக்கிறார், அவர் தனது காலில் ஏதோ ஒரு பிரச்சனையால் கஷ்டப்படுகிறார். அது அவருடைய இடது கால், அது இப்போது கட்டுகளால்

சுற்றப்பட்டுள்ளது. அது சரிதானே, இல்லையா? பயப்பட வேண்டாம், சகோதரியே. இப்போது, நீங்கள் கேட்டதைச் சென்று பெற்றுக் கொள்ளுங்கள். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில், அதுவாக...?... நீங்கள் வேறு ஒரு காரியத்தையும் அறிந்துகொள்ளும்படியாக, அந்தப் பிரச்சனை—அவளுடைய கால்களுக்குக் காரணம்... அது புண்கள் (ulcers). அது சரிதானே, இல்லையா? அதைத்தான் மருத்துவர் சொன்னார். அவர் அதைச் சொன்னபோது நான் கேட்டேன். இப்போது விசுவாசமாயிருங்கள்; அவிசுவாசியாயிருக்க வேண்டாம். உங்கள் முழு இருதயத்தோடும் விசுவாசியுங்கள். இப்போது. அனைவரும் விசுவாசமாயிருங்கள்.

98 இங்கே சரியாக உட்கார்ந்திருக்கும் ஒருவர், மிகவும் அற்புதமாக விசுவாசம் கொண்டிருக்கிறார். அது யாராக இருந்தாலும், நீங்கள் சுகமாவீர்கள் என்று நான் நம்புகிறேன். இது எல்லா இடங்களிலிருந்தும் வருகிறது.

வணக்கம், அம்மா. இப்போது, நாம் ஒருவருக்கொருவர் முன்பின் அறிமுகமில்லாதவர்கள். நான் உங்களை ஒருபோதும்

பார்த்ததில்லை என்று நினைக்கிறேன். நாம் ஒருவருக்கொருவர் புதியவர்களா? உங்களுக்கு என்னைத் தெரியுமா? உங்களுக்கு என்னைத் தெரியாதா? சரி. நான் உங்களை எப்போதாவது பார்த்திருப்பேன் என்று நான் நினைக்கவில்லை. சில நேரங்களில் நான் மக்களைப் பார்க்கிறேன், ஒருபோதும்...அவர்கள் பார்வையாளர்களில் உட்கார்ந்திருக்கிறார்கள், உங்களுக்குத் தெரியும், ஆனால் நீங்கள் எதற்காக இங்கே வந்திருக்கிறீர்கள் என்று எனக்குத் தெரியாது, உங்களைப் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. அது உங்களுக்குத் தெரியும். ஆனால் இயேசுவுக்குத் தெரியும். உங்களுக்கு என்ன வேண்டும் என்பதை தேவன் எனக்கு வெளிப்படுத்தினால், அதை உங்களுக்குக் கொடுக்க அவர் இங்கே இருக்கிறார் என்பதை நீங்கள் விசுவாசிப்பீர்களா? அது உங்களோடு என்றென்றைக்கும் நிலைத்திருக்குமா? நீங்கள் அதை ஏற்றுக்கொள்வீர்களா? இப்போது, பயப்பட வேண்டாம். நீங்கள் அந்த அபிஷேகத்தை விலக்குகிறீர்கள். பார்த்தீர்களா? அது மட்டுமே உங்களுக்கு உதவக்கூடியது.

சில நிமிடங்களுக்கு முன்பு இங்கே ஒரு மனிதர் இருந்தார் அல்லவா, அவருடைய தோள்பட்டையில் ஏதோ ஒன்று இருந்தது, அவருக்காக ஜெபிக்கப்பட்டதே? ஏதோ ஒரு மனிதர்...அது அவரா? ஓ, ஆம். அது சரிதான். சில கணங்களுக்கு முன்பு, நீங்கள் மீண்டும் மேடையைக் கடந்து செல்வதை நான் பார்த்தேன். நீங்கள் எங்கிருந்தோ, இண்டிகோ (Indigo) என்று அழைக்கப்படும் ஒரு இடத்திலிருந்து அல்லது அதுபோன்ற ஏதோ ஒரு இடத்திலிருந்து வந்திருப்பதைப் போல் தெரிகிறது. நீங்கள் வசிப்பது அங்கே தானா? ஓ, நீங்கள் நகரத்தை விட்டு வெளியேறுவதை நான் பார்த்தேன். என்னால்—என்னால் சொல்ல முடியவில்லை. நீங்கள் இன்னும் எனக்கு முன்பாக இங்கே இருக்கிறீர்கள். கவலைப்பட வேண்டாம்; விசுவாசமாயிருங்கள்; இப்போது உங்களைச் சுற்றிலும் முழுவதும் வெளிச்சமாக இருக்கிறது, வெறுமனே விசுவாசமாயிருங்கள். அதுவே அந்தத் தடையாயிருந்தது.

99 இப்போது, உங்களுக்கு நரம்புத் தளர்ச்சி (nervous) இருப்பதால்தான் நீங்கள் இங்கே இருக்கிறீர்கள். அதுவே நீங்கள்—அப்படி

நடந்துகொள்வதற்குக் காரணம், ஏனென்றால் உங்களுக்கு நரம்புத் தளர்ச்சி இருக்கிறது, நீங்கள் ஒரு அதிர்ச்சியால் கஷ்டப்படுகிறீர்கள். அது சரிதானே? ஒரு அதிர்ச்சி... நான் உங்களைப் பார்க்கிறேன்: உங்களுக்கு இந்த நிலையை ஏற்படுத்திய ஒரு அதிர்ச்சியை உண்டாக்கிய கார் விபத்து ஒன்றில் நீங்கள் இருந்தீர்கள். நீங்கள் இந்த நகரத்தைச் சேர்ந்தவர் அல்ல; நீங்கள் இந்த மாநிலத்தைச் சேர்ந்தவரும் அல்ல. நீங்கள் மிச்சிகனிலிருந்து (Michigan) வந்திருக்கிறீர்கள், இங்கிருந்து தொலைவில் உள்ள கிரிஸ்டல் ஃபால்ஸ் (Crystal Falls) என்ற இடத்திலிருந்தோ அல்லது அதுபோன்ற ஏதோ ஒரு இடத்திலிருந்தோ நீங்கள் வந்திருக்கிறீர்கள். அது சரிதான். நீங்கள் வீட்டிற்குச் சென்று சுகமாக இருக்க விரும்புகிறீர்களா? அப்படியானால் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசியுங்கள், இப்போது நீங்கள் அவருடைய பிரசன்னத்தில் இருக்கிறீர்கள் என்று விசுவாசியுங்கள். நீங்கள் அதைச் செய்கிறீர்களா?

உங்கள் பின்னால் உட்கார்ந்திருக்கும் இந்த மனிதர் உங்களுடன் வந்தவர். நீங்கள் உங்கள் முழு இருதயத்தோடும் விசுவாசித்தால், நீங்கள்

சுகமாக்கப்படலாம். நீங்கள் அதை விசுவாசிக்கிறீர்களா? இங்கே வாருங்கள்.

எங்கள் பிதாவாகிய தேவனே, உம்முடைய குமாரனாகிய இயேசுவின் நாமத்தில், சாபத்தை அகற்றி, எங்கள் சகோதரி முற்றிலுமாகச் சுகமாக்கப்படுவாராக. அவர் மீது என் கைகளை வைத்து, இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் நான் கேட்கிறேன். ஆமென். இப்போது ஏதோ ஒன்று அமைதியாக இருக்கிறது. இப்போது நீங்கள் நன்றாக உணர்கிறீர்களா? இப்போது, அது சரி என்றால், பார்வையாளர்களிடம் சொல்லுங்கள். நீங்கள் நன்றாக உணர்கிறீர்களா? [அந்தப் பெண்மணி, "நான் நன்றாக உணர்கிறேன். இயேசு..." என்கிறார்] உங்களைச் சுகமாக்குகிறார். [அவர், "ஆம்." என்கிறார்] ஆமென். பார்த்தீர்களா? நீங்கள் ஜெர்மன் (German) தேசத்தவரா? ["இல்லை, நான் ஃபின்னிஷ் (Finnish)."] அப்படியா? ஃபின்—ஃபின்னிஷ்? ஃபின்னிஷ். கீட்டோஸ் (Kiitos). தேவன்மேல் விசுவாசமாயிருங்கள்.

100 இப்போது, நீங்கள் அங்கே உட்கார்ந்திருந்தபோது, நான் திரும்பி, நான்

செய்ததைச் சொன்னபோது, என்னை அவருடைய தீர்க்கதரிசி என்று நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? அப்படியானால் சென்று உங்கள் இரவு உணவைச் சாப்பிடுங்கள். உங்கள் வயிற்றுப் பிரச்சனை உங்களை விட்டு நீங்கிப்போகும், அது இனி உங்களைத் தொந்தரவு செய்யாது. நீங்கள் அதை விசுவாசிக்கிறீர்களா? அப்படியானால் நான் சொல்வதைப் போலச் செய்யுங்கள். கவலைப்படுவதை விட்டுவிடுங்கள். நீங்கள் ஆழமாகச் சிந்திப்பவர். நீங்கள் எப்பொழுதும் மற்றவர்களின் பிரச்சனைகளை உங்களுக்குள் எடுத்துக்கொள்கிறீர்கள், பாலத்தை அடைவதற்கு முன்பே அதைக் கடக்க நினைக்கிறீர்கள். நீங்கள் எப்பொழுதும் நடக்காத ஒன்றைத் திட்டமிடுகிறீர்கள். அப்படிச் சிந்திப்பதை விட்டுவிடுங்கள்; மகிழ்ச்சியாயிருங்கள், சந்தோஷப்படுங்கள். இது ஒரு வயிற்றுப் புண் (peptic ulcer), வேறு வழியில்லை, உங்கள் உணவையும் உங்கள் வயிற்றில் உள்ள மற்ற எல்லாவற்றையும் புளிப்படையச் செய்து, உங்களுக்குத் தசைப்பிடிப்பை ஏற்படுத்துகிறது. அது இனி உங்களைத் துன்புறுத்தாது.

தொடர்ந்து சென்று சாப்பிடுங்கள், மகிழ்ச்சியாயிருங்கள், சந்தோஷப்படுங்கள், இயேசு கிறிஸ்துவைச் சேவியுங்கள்...?...

சகோதரரே, உங்களுடன் சேர்ந்து, மரணத்தின் ஒரு இருண்ட ஆவியும் வருகிறது. அது ஒரு பிசாசு: புற்றுநோய். அங்கே ஒரு பெண்மணி உட்கார்ந்திருக்கிறார், அவருக்கும் புற்றுநோய், இடுப்பெலும்பில் புற்றுநோய் இருக்கிறது. அது சரிதானே? நான் உங்களைப் பார்க்கிறேன்—நீங்கள்—நீங்கள்—யாரோ சொல்வதை நான் கேட்கிறேன்—உங்கள் பெயர்; நீங்கள் மிஸ். ராய் ஜூக் (Roy Zuke), ஜீக்ஸ் (Zeeks) அல்லது அதுபோன்ற ஒன்று, அது சரிதானே, உங்கள் கையை அசைக்கிறீர்களா? அது சரிதான். இப்போது, அந்தப் பிசாசு உங்கள் இருவருக்கும் இடையில் இழுத்துக் கொண்டிருக்கிறது; அது இப்போது உங்கள் இருவரையும் விட்டு விலகிவிட்டது; இப்போது, உங்களுக்கு இடையில் வெளிச்சம் இருக்கிறது. உங்கள் முழு இருதயத்தோடும் விசுவாசித்துக் கொண்டு செல்லுங்கள்.

101 தேவனுக்கு ஸ்தோத்திரம். சாத்தான் அந்தப் போரில் தோற்றுவிட்டான். அல்லேலூயா. உங்களுக்குத் தெரியுமா அது... பிசாசு ஒன்றை மற்றொன்று அழைக்கிறது. அவை அலறி, உதவிக்காக ஒன்றையொன்று அழைக்கின்றன. அதனால்தான் நான் உங்கள் ஜெபத்தைக் கேட்கிறேன். எனக்காக ஜெபியுங்கள், உதவுங்கள், தொடர்ந்து ஜெபியுங்கள். நீங்கள் பார்க்கிறீர்களா? இது ஒரு வல்லமை; இது ஒரு போர். இது பிசாசின் போர்—சரியானதற்கு எதிராகத் தவறானது போராடுகிறது; தவறானதற்கு எதிராகச் சரியானது போராடுகிறது. சந்தேகப்படுவதை விட்டுவிடுங்கள். உங்கள் முழு இருதயத்தோடும் விசுவாசியுங்கள். நீங்கள்தான் அடுத்தவர் என்று எதிர்பாருங்கள். பரிசுத்த ஆவியானவர் கட்டிடம் முழுவதும் சுகமாக்கிக்கொண்டிருக்கிறார். நீங்கள்தான் அடுத்தவர் என்று எதிர்பாருங்கள்.

இப்போது, அதன் முடிவு என்னவென்று எனக்குத் தெரியாது. அந்தக் காரியம் அவர்களை விட்டு விலகிவிட்டதை நான் அறிவேன். அவர்களுக்கிடையே ஒரு இருண்ட கோடு (streak) இருந்தது, இது இரக்கத்திற்காக, "உதவி,

உதவி, உதவி. அவரை விசுவாசிப்பதிலிருந்து தடுத்து நிறுத்துங்கள். அவரை விசுவாசிப்பதிலிருந்து தடுத்து நிறுத்துங்கள்" என்று அழைத்தது. அது எங்கே இருக்கிறது என்று நான் கீழே பார்த்தேன், அந்தப் பெண்மணியை நான் பார்த்தேன். மற்றொரு பெண்மணி அவளை அழைப்பதையும், அழைத்ததையும் நான் பார்த்தேன்—அது என்னவென்று எனக்குத் தெரியாது—வேறு ஏதோ ஒன்றை அழைத்தது. என்னால் அதைச் சரியாகப் புரிந்துகொள்ள முடியவில்லை. பிறகு அந்த இருண்ட கோடு முழுவதும் விலகிவிட்டது, அது வெளிச்சமாக மாறியது, பரிசுத்த ஆவியானவர் அவர்களுக்கு இடையில் அசைவாடிக்கொண்டிருந்தார். அது—அதன் ஜீவன் விலகிவிட்டது. விசுவாசமாயிருங்கள்.

102 மேலும் சகோதரியே, நீங்கள் அதை விசுவாசித்தால், தேவன் அந்த நீரிழிவு நோயிலிருந்து (diabetes) உங்களைக் குணமாக்கி உங்களைச் சுகமாக்குவார். அவருடைய...? என்று நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? நீங்கள் அதை விசுவாசிக்கிறீர்களா? அப்படியானால் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அது

அப்படியே ஆகக்கடவது. ஆமென். இப்போது, தேவன்மேல் விசுவாசமாயிருங்கள்.

வாருங்கள், சகோதரியே. பிழைப்பதற்காக, இப்போது இந்த வழியைப் பாருங்கள். உங்கள் முழு இருதயத்தோடும் கர்த்தராகிய இயேசுவை நோக்கிப் பார்த்து விசுவாசியுங்கள். இப்போது, நரம்புத் தளர்ச்சியாகிய மன அழுத்தத்தால் நீங்கள் கஷ்டப்படுகிறீர்கள். உங்களுக்கு விசித்திரமான மற்றும் பைத்தியக்காரத்தனமான எண்ணங்கள் உங்கள் மனதில் ஓடிக்கொண்டே இருக்கின்றன, குறிப்பாக மாலை நேரத்தின் இறுதியில். நீங்கள் மிகவும் பலவீனமாகிவிடுகிறீர்கள். பல நேரங்களில் நீங்கள் உட்கார வேண்டியிருக்கிறது. சூரியன் அஸ்தமிக்கும்போது, ஒரு இருண்ட நிலை உங்கள் மீது வருகிறது. நீங்கள் உங்கள் மனதை இழக்கப் போகிறீர்கள் என்று பிசாசு உங்களிடம் சொல்ல முயற்சிக்கிறான். அந்த காரியங்கள் உண்மையானவை, அம்மா. நீங்கள் வருவதற்கு முன்பாக ஜெபித்துக்கொண்டிருந்தீர்கள். "நீங்கள்—தேவனே, நீர் எனக்கு ஒரு ஜெப அட்டை (prayer card) கொடுத்து என்னை மேடைக்கு முன்பாக நிறுத்தினால், நீர்

இருப்பீர்—நீர் என்னைச் சுகமாக்குவீர் என்று நான் விசுவாசிப்பேன்" என்று நீங்கள் ஜெபித்துச் சொன்னீர்கள். அது சரிதான். அது...அது சரி என்றால், உங்கள் கையை உயர்த்துகிறீர்களா? அது சரிதான். நீங்கள் அங்கே முழங்கால்படியிட்டிருந்த இடத்தில் நான் உங்களைப் பார்க்கிறேன். இப்போது, தேவன் உங்களுக்குப் பலனளித்திருக்கிறார், உங்கள் விசுவாசம் உங்களைச் சுகமாக்கியுள்ளது. அது உங்களை விட்டு நீங்கிவிட்டது. அது மெனோபாஸ் (menopause) காரணமாக ஏற்பட்டது, ஆனால் நீங்கள் சுகமாகப் போகிறீர்கள். எனவே சந்தோஷத்துடன் உங்கள் வழியில் செல்லுங்கள். என் சகோதரியே, இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் நான் உங்களை ஆசீர்வதிக்கிறேன். ஆமென்.

"நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்" என்று சொல்வோம்.

103 சகோதரியே, நீங்கள் அங்கே நின்று, இருதயப் பிரச்சனையிலிருந்து தேவன் உங்களைச் சுகமாக்குவார் என்று விசுவாசித்தால்,

நீங்கள் படியேறி கீழே சென்று சுகமாவீர்கள். நீங்கள் அதை விசுவாசிக்கிறீர்களா? அப்படியானால் திரும்பிப் படிகளில் கீழே சென்று, இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் முழுமையடையுங்கள். அல்லேலூயா. நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? இப்போது, "அல்லேலூயா" என்பதைக் குறித்துப் பயப்பட வேண்டாம். "அல்லேலூயா" என்ற வார்த்தைக்கு "நம்முடைய தேவனைத் துதியுங்கள்" என்று பொருள்.

இப்போது, எல்லோரும் உங்கள் தலையைத் தாழ்த்துங்கள். இதோ ஒரு பார்வையற்ற பெண்மணி—பார்வையற்ற ஆவி. அவருக்கு இருக்கிறது என்று நான் நம்புகிறேன்...?...நீங்கள் பெற்றுக்கொள்ளப் போகிறீர்கள் என்று இப்போது நீங்கள் விசுவாசிக்கிறீர்களா...?... மேலும் நீங்கள் போகிறீர்கள்...?... தேவன் அந்தக் கண்புரைகளை (cataracts) குணமாக்குவார் என்று...?... எங்கள் பரலோகப் பிதாவே, அது என்னவென்று அறிந்து... தெருவில் ஒரு பார்வையற்ற நபரைக் காண்கிறீர், ஒரு சிறிய வெள்ளை பிரம்பு. இந்த அம்மா தன் வாழ்நாள் முழுவதும் நடைமுறையில் இப்படித்தான் இருந்ததாகச் சொன்னாள்.

அவளைப் பார்க்கும்படி செய்ய உம்மால் முடியும். உமக்கு வல்லமை இருக்கிறது. அன்று பார்வையற்ற பர்திமேயுவை (Bartimaeus) குணமாக்கினவர், மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்திருக்கிறார். பார்வையற்ற ஆவி அந்த மனிதனை விட்டு விலகியபோது, அவனால் பார்க்க முடிந்தது என்று அவர்கள் சொன்னார்கள். உமது பரிசுத்த குமாரனாகிய இயேசுவின் நாமத்தினாலே, இந்தப் பார்வையற்ற ஆவியை எங்கள் சகோதரியை விட்டு விலகச் செய்வீரா? உமது ஊழியக்காரனாக, நான் அவள் மீது கைகளை வைத்து, இந்தப் பார்வையற்ற ஆவியைக் கடிந்துகொள்வேன். இந்தப் பெண்மணியின் பார்வையை அடைத்து, அவளை எங்கேயாவது ஒரு வாகனத்தின் முன் நடக்கச் செய்து, அவளைக் கொல்லும்படி செய்து, அகாலத்தில் அவளைக் கல்லறைக்கு அனுப்ப நினைக்கும் பொல்லாத பொருளே—அவளை விட்டு வெளியே வா, இயேசு கிறிஸ்துவின் நாமத்தில், இந்தப் பெண்மணியை விட்டுப் போகும்படி நான் உனக்குக் கட்டளையிடுகிறேன்.

104 தயவுசெய்து உங்கள் தலையை உயர்த்தும்படி நான் உங்களிடம் கேட்கும் வரை ஒவ்வொரு நபரும் தங்கள் தலையைத் தாழ்த்தியபடியே வைத்திருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். தயவுசெய்து உங்கள் தலையைத் தாழ்த்தி, உங்கள் கண்களை மூடியபடியே இருங்கள். இப்போது, சந்தேகப்பட வேண்டாம். உங்கள் முழு இருதயத்தோடும் விசுவாசியுங்கள்...?... பார்த்தீர்களா? உங்கள் கையை வையுங்கள்...?... உங்களால் நன்றாகப் பார்க்க முடிகிறதா? என் விரல்களை உங்களால் எண்ண முடியுமா? எத்தனை? இப்போது? சரி, அது எப்படி வருகிறது என்று பார்க்கிறீர்களா? பார்த்தீர்களா? அந்தக் கண்புரை செத்துவிட்டது. நீங்கள் பார்க்கிறீர்களா? பார்த்தீர்களா? தேவனுக்கு ஸ்தோத்திரம். ஒரு நிமிடம் உங்கள் தலையை உயர்த்துங்கள். இதைக் கவனியுங்கள். உங்களால் பார்க்க முடிந்தால், அம்மா, உங்கள் விரலால் என் மூக்கைத் தொடவும். உங்கள் கையை எடுத்து என் மூக்கைத் தொடுங்கள். நான் எத்தனை விரல்களை உயர்த்தியிருக்கிறேன்? ஐந்து. இப்போது எத்தனை இருக்கிறது? ஒன்று.

"தேவனுக்கு ஸ்தோத்திரம்" என்று சொல்வோம். இப்போது, மேடையிலிருந்து சரியாக நடந்து செல்லுங்கள்...?... நடவுங்கள்...?... அவளை வழிநடத்த வேண்டாம், அவள் தானாகவே செல்லட்டும். எல்லாரும், "கர்த்தருக்கு ஸ்தோத்திரம்" என்று சொல்வோம்.

எங்கள் பரலோகப் பிதாவே, துதியும் மகிமையும் செலுத்துவதற்காக, நாங்கள் உமக்கு நேராக எங்கள் கைகளை உயர்த்துகிறோம். இன்று, ஆண்டவரே, அந்தப் பெண்மணியின் கண்களிலிருந்து கண்புரைகளைக் கொன்று எறிந்தவரே... ஓ தேவகுமாரனாகிய இயேசுவே, உமது நற்குணத்திற்காக நாங்கள் உம்மை ஆராதிக்கிறோம், நீர் செய்த எல்லாவற்றிற்காகவும் உம்மைத் துதிக்கிறோம், இயேசு கிறிஸ்துவின் நாமத்தில், நாங்கள் உம்மைத் துதிக்கிறோம். ஆமென். மக்களுடன் கைகுலுக்கிக்கொண்டு செல்லும் அந்தப் பெண்மணியைப் பாருங்கள்.

105 அது என்ன? கண்புரை. கண்புரை என்றால் என்ன? நான் ஒரு நிமிடம்

எடுத்துக்கொள்கிறேன், ஒரே ஒரு நிமிடம். உங்கள் கவனத்தை எனக்குக் கொடுங்கள்.

கட்டி (tumor) என்றால் என்ன? புற்றுநோய் என்றால் என்ன? அது ஒரு பிசாசு. இங்கே பாருங்கள். நீங்கள் எங்கிருந்து வந்தீர்கள்? ஒரு சிறிய கிருமியிலிருந்து (germ). உங்கள் சரீரத்தை நான் பிரித்துப் பார்த்தால், நீங்கள் ஒரு கிருமியாகச் சுருங்கி விடுவீர்கள். அந்தக் கிருமி எங்கிருந்து வந்தது? உங்கள் தகப்பனிடமிருந்து. அதற்கு அப்பால் என்ன இருக்கிறது...அந்தக் கிருமி ஒரு சிறிய செல் (cell). அதை நீங்கள் உங்கள்—உயர்திறன் கொண்ட கண்ணாடியால் (high powered glass) மட்டுமே பார்க்க முடியும். அந்தச் சிறிய செல்லுக்கு அப்பால் என்ன இருக்கிறது? ஜீவன் இருக்கிறது. அந்த ஜீவன் எங்கிருந்து வந்தது? தேவனிடமிருந்து.

புற்றுநோய் என்றால் என்ன? அது ஒரு ஜீவன். பாருங்கள், என் கையில் எந்தப் புற்றுநோயும் இல்லை. சில சமயங்களில் அது வரலாம். புற்றுநோய் எதிலிருந்து வருகிறது? (இயற்கையான ஒவ்வொன்றும், ஆவிக்குரிய ஒன்றைப் பிரதிபலிக்கிறது.) புற்றுநோய் ஒரு—

ஒரு துப்புரவாளர் (scavenger) போல, இறந்தவைகளைத் தின்னும் பிணந்தின்னிக் கழுகைப் (buzzard) போல இருக்கும். புற்றுநோய் ஒரு காயத்திலிருந்து (bruise) வருகிறது. அந்த காயம் ஏற்படும்போது, அங்கு காயமடைந்த ஒரு—ஒரு சிறிய செல் இருக்கிறது, அது பின்வாங்குகிறது. ஒரு ஜீவன், மற்றொரு ஜீவன், உங்கள் ஜீவன் அல்ல, ஒரு கிருமி, அங்கு வருகிறது. இது முதலில் ஒரு ஆவியாக இருந்து, ஒரு கிருமியின் மூலம் தன்னைச் சுற்றி வளர்ச்சியடைகிறது அல்லது உங்கள் சரீரத்தில் ஏற்கனவே உள்ள கிருமியை எடுத்துக்கொண்டு, அதன் இடத்தை எடுத்துக்கொள்கிறது.

106 சாத்தானால் சிருஷ்டிக்க முடியாது. தேவன் சிருஷ்டித்ததை அவனால் உருமாற்ற மட்டுமே முடியும், எனவே அவன் அந்தச் சிறிய கிருமிக்குள் வருகிறான். அவன் என்ன செய்கிறான்? அவன் செல்களைக் கட்டி, வளர்ச்சியை உருவாக்கத் தொடங்குகிறான். கண் புரை (cataract) அதே காரியத்தைத்தான் செய்கிறது. இப்போது, அது பெரிதாகிறது. அது

என்ன செய்யப் போகிறது? உங்களுடைய சிறிய கிருமி உங்களை வாழ வைப்பதற்கானது. ஆனால் அந்தக் கிருமியோ, உங்களைக் கொல்வதற்காக உங்களிடமிருந்து இரத்தத்தை உறிஞ்சுகிறது. (காசநோய் மற்றும் மற்ற எல்லாமே... அவைகள் உயிருள்ள பிசாசுகள். அது-அது ஒரு கொடிய நோய். அது வளருகிறது; அது ஒரு வளர்ச்சி.)

இப்போது, இங்கே பாருங்கள். அந்தப் பெண்ணின் கண்களில் இருந்த கண் புரை-குருடு. என்ன நடந்தது? இப்போது, அங்கே... நான் அந்த வளர்ச்சியைக் கையாளவில்லை; அந்த வளர்ச்சியில் உள்ள ஜீவனைக் கையாளுகிறேன்.

இதைப்போலவே. என் கையைச் சுற்றி இரத்த ஓட்டத்தைத் தடுக்கும் ஒரு ஒளிபுகும் பட்டை இருந்தால் என்ன ஆகும். மருத்துவராலோ-அவர் செய்யக்கூடிய ஒரே காரியம்-ஓ, அறுவை சிகிச்சை செய்வதுதான், அதாவது அவர் பார்க்கக்கூடிய அல்லது உணரக்கூடியதை மட்டுமே அவரால் செய்ய முடியும். அவரால் அதை பார்க்கவோ அல்லது

உணரவோ முடியாது. அவர், "சரி," பார்வையைப் பற்றிச் சொல்வது போலவே, "நீங்கள் குருடாகிவிட்டீர்கள்" என்றார்.

"எது உங்களைக் குருடாக்கியது?"

"சரி, பார்வை நரம்பு செத்துவிட்டது."

"சரி, அதைக் கொன்றது எது?" நீங்கள் செவிடாகிவிட்டீர்களா? அதைச் செய்தது எது? உங்களைச் செவிடாக்கியது எது? சரி, உங்கள் காதில் உள்ள நரம்பு செத்துவிட்டது.

"அதைக் கொன்றது எது?" உங்கள் நரம்புகள் உடல் முழுவதும் செத்துப்போகவில்லை.

"சரி, இப்போது," நரம்பு செத்துவிட்டது என்று மருத்துவர் கூறினார்.

வேதாகமம் என்ன சொல்லுகிறது? அது ஒரு ஆவி என்று வேதாகமம் சொல்லுகிறது. "செவிடான ஆவி (செவிடான ஆவி) ஒரு மனுஷனை விட்டுப் புறப்பட்டுப்போனபோது, அவனால் கேட்க முடிந்தது. குருடான ஆவி அந்த மனுஷனை விட்டு நீங்கியபோது, அவனால் பார்க்க முடிந்தது. குருடான ஆவி..."

107 ஆகவே அந்தப் பெண்ணின் கண்களில் இருந்த அந்தக் கண்புரை—என்ன நடந்தது? அது அந்த ஒளிபுகும் பட்டையைப் போலவே இருந்தது. அது ஒரு வளர்ச்சியை வளர்த்து பார்வையைத் தடுத்துக் கொண்டிருந்தது. சரி, என்ன நடந்தது? இப்போது, இந்த ஒளிபுகும் பட்டை (இப்போது, அது இந்த வழியில் அதைக் கொல்லவில்லை; அது அந்த வழியில்தான் அதைக் கொல்கிறது.) அதனால் தான் நீங்கள் குருடாகும்போது, நீங்கள்—உங்கள் உடலில் உள்ள நரம்புகள் முழுவதும் செத்துப்போவதில்லை. நரம்பின் காரணமாக நீங்கள் செவிடாகும்போது, உடல் முழுவதிலும் அது சாவதில்லை; அது அங்கே மட்டுமே சாகிறது. அது என்ன? அதைத் தடுத்து நிறுத்துவது இயற்கைக்கு அப்பாற்பட்ட ஒரு சக்தி ஆகும். இப்போது, அது விடுவிக்கப்பட்டால், உடனே, அது சிறிது வலிக்கச் செய்யும், ஆனால் இரத்த ஓட்டம் மீண்டும் தொடங்கிவிடும்.

இயற்கையைத் தடை செய்யும் எதுவாக இருந்தாலும் அது பிசாசுதான். நீங்கள்

ஆரோக்கியமாகவும் பலமாகவும் இருக்க வேண்டும் என்று தேவன் சித்தம் கொண்டிருக்கிறார், ஆனால் பிசாசு வந்து தேவன் செய்ததைத் தடை செய்கிறான். நான் சொல்வது உங்களுக்குப் புரிகிறதா?

108 இப்போது, அந்தக் கண்புரை ஒரு சரீரத்தை வளர்த்து, அவளுடைய கண்களின் மீது பரவி: அவளுடைய கண்ணின் சளியிலிருந்து சாப்பிட்டு வாழ்ந்து கொண்டிருந்தது. இப்போது, நான் அந்த—அந்த வளர்ச்சியோடு எதுவும் செய்யவில்லை. மருத்துவர் உள்ளே பார்க்கக்கூடும். அந்த வளர்ச்சி இன்னும் அங்கேயேதான் இருக்கும். ஆனால் என்ன நடந்தது? அந்த வளர்ச்சியில் உள்ள ஜீவனான ஆவியை நான் அழைத்தேன். என்ன நடக்கிறது? அந்த ஜீவன் வெளியே போகிறது. எல்லாருக்கும் தெரியும்... மான்களை வேட்டையாடும் வேட்டைக்காரர்கள் யாராவது இங்கே இருக்கிறீர்களா? உங்கள் கைகளைப் பார்ப்போம்? நிறைய சகோதரர்கள் இருக்கிறார்கள், இல்லையா? கவனியுங்கள், நீங்கள் இன்றிரவு ஒரு மானைக் கொன்று, அது

எவ்வளவு எடை இருக்கிறது என்று பையன்களிடம் சொல்கிறீர்கள். காலையில் கவனமாகப் பாருங்கள். அது பல பவுண்டுகள் எடை குறைந்திருக்கும். அது சரியா? நிச்சயமாக, அது சுருங்கிவிடும். சில நாட்கள் அதை அங்கேயே கிடக்க விட்டால், அது பல பவுண்டுகள் எடை கூடியிருக்கும். அது சரியா? (ஒரு சிறிய நாய் தெருவில் அடிபட்டு கிடக்கட்டும்...) இங்கே ஒரு—ஒரு—பிரேத அடக்கம் செய்பவர் இருக்கிறார்—நாளைக்கு அதைப் பாருங்கள். அது—அது—அது... நீங்கள்—நீங்கள்—அந்த உடல்... ஒரு நபர் இறந்துவிட்டால், அவருக்குப் பொய்க்கண், பொய்ப்பல் இருந்தால், அவர்கள் அதை வெளியே எடுத்து விடுவார்கள். ஏன்? அது வெளியே தள்ளும்: உடல் சுருங்கும். அதை அங்கேயே கிடக்க விட்டால், அது அழுகத் தொடங்கும், சிதைந்து போகும், செல்கள் உடைந்து போகும். எழுபத்திரண்டு மணி நேரத்திற்குப் பிறகு, அது உப்பத் தொடங்கும். இப்போது என்ன நடக்கிறது?

109 இப்போது, அந்தக் கண்புரையின் ஆவி அந்தப் பெண்ணின் கண்களை விட்டு

வெளியேறியபோது, அவளால் இப்போது பார்க்க முடிகிறது. அவளால் இன்னும் நன்றாகப் பார்க்க முடியும். நாளை அது இன்னும் நன்றாக இருக்கும். அடுத்த நாள் அது இன்னும் நன்றாக இருக்கும். பின்பு அது மறுபடியும் மோசமாகப் போகும். மோசமாகிறதே, என்ன காரணம்? அந்தக் காரியம் வீக்கமடைகிறது. புற்றுநோயின் நிலை என்ன? புற்றுநோய்... சொல்லுகிறார்கள், "அப்பாடா... வலி போய்விட்டது. ஓ, நான் மிகவும் நன்றாக உணர்கிறேன்." கட்டி: "ஓ, ஆச்சரியமே, நான் மிகவும் நன்றாக உணர்கிறேன்." ஏன்? அது செத்துவிட்டது; அது சுருங்குகிறது.

கவனமாக இருங்கள். எழுபத்திரண்டு மணி நேரத்திற்கு அது அவ்வாறு செய்யும். எழுபத்திரண்டு மணி நேரத்திற்குப் பிறகு உங்களுக்கு வியாதி உண்டாகத் தொடங்கும். ம்ம்ம். அப்போதுதான் ஆபத்தான கட்டம் வருகிறது. நீங்கள் சொல்வீர்கள், "ஓ, என் சுகத்தை நான் இழந்துவிட்டேன்." இல்லை! நீங்கள் உங்கள் சுகத்தைப் பெற்றுக்கொண்டீர்கள் என்பதற்கான உலகின் சிறந்த அடையாளம்

அதுதான். அந்தக் காரியம் செத்துவிட்டது. மேலும் அது அங்கே ஒரு அழுகிய சதையின் துண்டாக இருக்கிறது, மேலும் உடலின் அசுத்தங்களை இரத்த ஓட்டம் கட்டாயமாக வெளியேற்றியாக வேண்டும் என்பது உறுதி. அது அதனை எடுத்துக்கொள்கிறது, அது காய்ச்சலை ஏற்படுத்துகிறது. (ஒரு—ஒரு பழுதான பல் கூட உங்களுக்குக் காய்ச்சலை உண்டாக்கும். ஏதேனும் தொற்றுக் கிருமிகள்...) புற்றுநோயைப் போல அவ்வளவு நீளமான, அல்லது அவ்வளவு பெரிய, செத்துப்போய் உங்கள் உடலில் கிடக்கும் ஒரு சதைத் துண்டைப்பற்றி என்ன சொல்வது! புரிகிறதா? சந்தேகப்பட வேண்டாம். விசுவாசியுங்கள். அது இங்கே (அறிவில்) நிலைநிறுத்தப்பட்டிருந்தால், நீங்கள் அதை தர்க்கம் செய்து, "சரி, நான் அதை இழந்துவிட்டேன் என்று நினைக்கிறேன்" என்று சொல்வீர்கள். ஆனால் அது இங்கே கீழே (இருதயத்தில்) இருந்தால், நரகத்திலுள்ள சகல பிசாசுகளாலும் உங்களைச் சந்தேகப்பட வைக்க முடியாது. எப்படியிருந்தாலும் நீங்கள் அதை விசுவாசிப்பீர்கள், ஏனென்றால் ஏதோவொன்று

நடந்துவிட்டது—அறிவுப்பூர்வமாக அல்ல, ஆனால் வெளிப்பாட்டின் மூலமாக.

110 அங்கேதான் இயேசு தமது சபையைக் கட்டினார். அதில் இருக்கும் அனைவரும் அதே காரியத்தின் மேல்தான் கட்டப்பட்டுள்ளார்கள். "மனுஷகுமாரனாகிய என்னை ஜனங்கள் யார் என்று சொல்லுகிறார்கள்?"

"சிலர், நீங்கள் மோசே அல்லது நீங்கள் எலியா, அல்லது நீங்கள் தீர்க்கதரிசிகளில் ஒருவர் அல்லது..." என்றார்கள்.

"நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள்..." என்று அவர் கேட்டார்.

அவன், "நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து" என்றான்...?..

கத்தோலிக்கர்கள் அது பேதுருவின் மேல் கட்டப்பட்டதாகச் சொல்கிறார்கள். புராட்டஸ்டன்ட்கள் அது கிறிஸ்துவின் மேல் கட்டப்பட்டதாகச் சொன்னார்கள். இரண்டுமே இல்லை... இயேசு அப்படிச் சொல்லவில்லை. அவர், "யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ

பாக்கியவான்; மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை, பரலோகத்திலிருக்கிற என் பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார். இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன் (இயேசு கிறிஸ்துவின் ஆவிக்குரிய வெளிப்பாடு) - இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன், பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை" என்றார். இயேசு கிறிஸ்துவைப்பற்றிய ஆவிக்குரிய வெளிப்படுத்தப்பட்ட சத்தியம்: அற்புதமான ஒன்று.

111 ஐயா, இன்சுலின் எடுத்துச் சோர்வடைந்துவிட்டீர்களா, அந்த நீரிழிவு நோயிலிருந்து மீண்டு வர விரும்புகிறீர்களா? நலமடைய விரும்புகிறீர்களா? அவர் உங்களைக் குணமாக்கிவிட்டார் என்று விசுவாசிக்கிறீர்களா? அப்படியானால் இந்த மேடையிலிருந்து இறங்கிப் போய், உங்கள் முழு இருதயத்தோடு அவருக்குச் சேவை செய்யுங்கள். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

நாம் "கர்த்தருக்கு ஸ்தோத்திரம்" என்று சொல்வோம். உங்களால் விசுவாசிக்க

முடிந்தால்... தேவன்மேல் விசுவாசமாயிருங்கள். இயேசு பிடித்துக்கொள்ளும்போது, இருதய கோளாறு மற்றும் மற்ற எல்லாமே விசுவாசிக்கின்றன. அது சரிதானே, ஐயா? அவர் இப்போது உங்களைக் குணமாக்குகிறார் என்று விசுவாசிக்கிறீர்களா? சந்தோஷத்தோடே உங்கள் வழியில் செல்லுங்கள். அப்படித்தான் அதைச் செய்ய வேண்டும். ஆமென். அவர் அதைச் செய்கிறார் என்று அவரை விசுவாசியுங்கள். "இது சத்தியம்; இது வல்லமையுள்ளது; இது தேவன். இது ஒருக்காலும் தவறாது" என்று சொல்லுங்கள்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே, அது நமது சகோதரனை விட்டு நீங்குவதாக. ஆமென். அல்லேலூயா.

அந்த நாற்காலியில் உட்கார்ந்திருக்கும் நீங்கள் சுகமாகிவிட்டீர்கள் என்று நான் உங்களிடம் சொன்னால், நீங்கள் அதை விசுவாசிப்பீர்களா? அப்படியானால், சந்தோஷ மாகப் போங்கள், ஏனென்றால் நீங்கள் சுகமாக்கப்பட்டீர்கள். இயேசு கிறிஸ்து உங்களைக் குணமாக்கியிருக்கிறார்.

112 இப்போது, இங்கே ஒரு குருடான பெண்மணி மீண்டும் வருகிறாள். எல்லாரும் உங்கள் தலைகளைத் தாழ்த்துங்கள். தேவன்மேல் விசுவாசமாயிருங்கள். சகோதரியே, என்னால் முடியுமானால், முடி நரைத்த, கைகள் சுருங்கிய என் ஏழைச் சகோதரியே. சந்தேகமில்லாமல், அவள் பல கடுமையான நாட்களை வேலையில் கழித்திருக்கிறாள். இங்கே குருடராக நிற்கிறீர்கள், நான் உங்கள் எண்ணைக் கூப்பிட்டபோது அவர்கள் உங்களைப் படிகளில் ஏற்றி நடத்தி வருவதையும் வெளியே நடத்துவதையும் நான் பார்த்தேன். அவர்கள் உங்களை குருடராக இங்கே நடத்தி வருவதை நான் பார்க்கிறேன், ஆனால் நீங்கள் விசுவாசித்தால் எஜமானருடைய கரத்தால் நீங்கள் நடத்தப்படலாம். என்னால் ஜெபிக்க மட்டுமே முடியும்.

நீண்ட காலமாகிவிட்டது, இல்லையா, சகோதரியே? இருளிலும் காரிருளிலும் நடமாடுவது பயங்கரமானது, இருளும் காரிருளுமான உலகத்தில், உங்களுக்குள்ளாகவே ஒரு தனி உலகத்தில் தங்கியிருப்பது கொடியது.

இன்றிரவு இயேசு உங்களுக்குப் பார்வையளிப்பாராக, சகோதரியே. இங்குள்ள ஒவ்வொரு ஆணும், பெண்ணும், சிறுவனும், சிறுமியும் உங்கள் தலைகளைத் தாழ்த்தி என்னோடு சேர்ந்து ஜெபிக்கும்படி நான் கேட்டுக்கொள்கிறேன். இயேசு கிறிஸ்துவின் நாமத்தில்.

113 இப்போது நினைவில் கொள்ளுங்கள், நாம் குருடான ஆவிகளுடன் போராடிக் கொண்டிருக்கிறோம். அவை ஒருவரை விட்டு வெளியே வரும்போது, அவை மற்றொருவருக்குள் செல்ல முயற்சிக்கின்றன. எனவே நீங்கள் தெரிந்துகொள்ளும்படிக்கு, நிமிர்ந்து பார்க்கச் சொல்லும் வரை உங்கள் தலைகளைத் தாழ்த்தியே இருங்கள், ஏனென்றால் இன்னும் சில நாட்களுக்கு-உங்களுக்குப் பார்வை இல்லாமல் போகலாம். "உங்கள் தலைகளை நிமிர்த்துங்கள்" என்று நான் சொல்லும் வரை காத்திருங்கள். ஏனென்றால் நீங்கள் பார்க்கும்போது, "கண்களே ஆத்துமாவிற்கான வாசல்."

"சகோதரர் பிரன்ஹாம், அது உளவியல்" என்று நீங்கள் சொல்லுகிறீர்கள். அது அப்படியானால், இயேசு அதைப் பயன் படுத்தினார். அவர் ஒரு குருடனைப் பிடித்து, கூட்டத்தை விட்டு விலக்கி, பட்டணத்திற்கு வெளியே அழைத்துச் சென்று, அவனுக்காக ஜெபித்தார், கூட்டத்தை விட்டு அவனை விலக்கினார். இப்போது ஜெபியுங்கள். அவர் யவீருவின் குமாரத்தியை உயிரோடு எழுப்பச் சென்றபோது, வீட்டிலிருந்த அனைவரையும் வெளியேற்றினார். அவர் இன்றிரவும் அதே இயேசுவாகவே இருக்கிறார். அந்தப் பெண்ணால் பார்க்க முடியுமா என்று எனக்குத் தெரியாது. அவள் முற்றிலும் இருளில் குருடராக இங்கே நிற்கிறாள். இப்போது, தயவுசெய்து தேவன் மேல் விசுவாசம் வையுங்கள், நான் அவளுக்காக ஜெபிக்கும்போது விசுவாசியுங்கள்.

114 இப்போது, சகோதரியே, இப்போது உங்கள் தலையைத் தாழ்த்திக்கொள்ளுங்கள், நான் நம்முடைய கர்த்தராகிய இயேசுவிடம் கேட்கும்போது உங்கள் குருடான கண்களின் இமைகள் மூடியிருக்கட்டும்... அவர் உள்ளே

புகுந்து இங்குள்ள இந்தப் பிசாசுகளைச் சுருங்கச் செய்யப் போகிறார் என்றும், உங்களால் பார்க்க முடியும் என்றும் விசுவாசியுங்கள். ஓ அன்பான பிதாவே, நான் ஒரு குருடான பெண்ணின் அருகில் நிற்கும்போது... "ஒருவன் வழியருகே உட்கார்ந்து பிச்சை கேட்டுக்கொண்டிருந்தான்... பின்பு இயேசு வந்தார்." ஓ ஆண்டவரே, சமீபமாய் வாரும். அங்கே விசுவாசம் உள்ள அநேகர் இருந்திருக்கலாம். எனக்குத் தெரியாது; நான் அங்கே இல்லை, ஆண்டவரே, ஆனால் நீர் சந்தித்து-பர்திமேயுவுக்கு அவன் பார்வையைக் கொடுத்தீர் என்பதை நான் அறிவேன். அவனால் பார்க்க முடியும் என்று அவன் கண்டபோது, அவன் உம்மைப் பின்பற்ற முயன்றான் என்று நான் விசுவாசிக்கிறேன்.

இங்கே நின்றுகொண்டிருக்கும் இந்த ஏழைச் சிறிய தாய், அவள் குருடராக இருக்கிறாள், ஆண்டவரே. அவளை நீர் அறிவீர். நான் ஒரு சாதாரண மனிதன்; நான் உம்மைப் பிரதிபலிக்க முயன்றேன். அவளுக்காக இந்த இருளை விலக்குவீரா, ஆண்டவரே? இந்தக் குருடான கண்களில் பார்வையை உதிக்கச் செய்யும். நாங்கள் அற்புதங்களைக் கேட்கவில்லை,

ஆண்டவரே, ஆனால் அவளை உற்சாகப் படுத்துவதற்காக, நீர் தேவனுடைய குமாரன் என்றும், சத்தியத்தை அவர்களுக்குச் சொல்ல நான் உமது ஊழியன் என்றும் அவள் அறிந்துகொள்ளும்படிக்கு ஏதாவதொன்றைச் செய்யும் ஆண்டவரே. நீர் இதைச் செய்தால், ஆண்டவரே, இங்குள்ள அனைவரும் உடனே உம்மை ஏற்றுக்கொள்வார்கள் என்று நான் விசுவாசிக்கிறேன். தயவுசெய்து செய்யும். இப்போது, இயேசுவின் நாமத்தில் என் முழு இருதயத்தோடு நான் உம்மைக் கேட்கும்போது, நீர் என் ஜெபத்தைக் கேட்பீரா.

115 இப்போது, சாத்தானே, இது விசுவாசத்தின் போர்; நீ அவளுக்கு உரிமை கொண்டாடுகிறாய், நான் இயேசுவுக்காக அவளுக்கு உரிமை கொண்டாடுகிறேன். அவள் மேல் உனக்கு எந்த அதிகாரமும் இல்லை என்று நான் உரிமை கொண்டாடுகிறேன். எதன் மீதும் உனக்கு அதிகாரம் இல்லை என்று நான் உரிமை கொண்டாடுகிறேன். கலவாரியிலே என் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து உனக்கிருந்த அனைத்தையும், உன்னுடைய ஒவ்வொரு

சட்டப்பூர்வமான உரிமையையும் உன்னிடமிருந்து உரிந்து, பறித்துக்கொண்டார். நான் அவருடைய பிரதிநிதியாக இங்கே நிற்கிறேன். அவர் இந்த மேடையில் இருக்கிறார் என்பது உனக்குத் தெரியும். இந்த வரத்தைப் பற்றி உனக்கு எல்லாம் தெரியும். அவர் எங்கே ஊழியம் செய்தார், அதை எப்படிச் செய்தார் என்பது உனக்குத் தெரியும். ஜீவனுள்ள தேவனைக் கொண்டு நான் உனக்குக் கட்டளையிடுகிறேன், இந்தப் பெண்ணை விட்டு நீ வெளியே வா. இயேசு கிறிஸ்துவின் நாமத்தில், அவளை விட்டு விலகு.

ஒவ்வொரு தலையும் தாழ்ந்திருக்கட்டும். முதலில் நான் உங்கள் கண்களைப் பார்க்கட்டும். ஏதாவது நடந்தால் நான் உங்களை அழைக்கிறேன். இப்போது, உங்கள் தலையை நிமிர்த்துங்கள். உங்களால் என்னைப் பார்க்க முடிகிறதா? உங்கள் கைகளை என் மூக்கின் மேல் வையுங்கள். ஆமென். உங்கள் கண்களைத் திறங்கள். இந்தப் பெண்ணால் பார்க்க முடிகிறது. அவளுக்குப் பார்வை கிடைத்துவிட்டது.

116 கர்த்தருக்கு ஸ்தோத்திரம். எல்லாரும் எழுந்து நின்று, "கர்த்தருக்கு ஸ்தோத்திரம்" என்று சொல்வோம். நீங்கள் சுகமாக வேண்டுமா? நீங்கள் சுகமாக வேண்டுமா? இப்போதே எழுந்து நின்று உங்கள் கைகளை தேவனுக்கு நேராக உயர்த்துங்கள். இயேசு கிறிஸ்துவின் நாமத்தில், நான் விசுவாசத்தின் ஜெபத்தை ஏறெடுக்கிறேன். சர்வவல்லமையுள்ள தேவனே, இயேசு கிறிஸ்துவின் நாமத்தில், பிசாசின் ஒவ்வொரு ஆவியையும், ஒவ்வொரு குருடான ஆவியையும், ஒவ்வொரு செவிடான ஆவியையும், முடவனாயிருக்கிற ஒவ்வொரு நபரையும் கட்டியிருக்கிற கட்டுகளை நான் கடிந்துகொள்கிறேன்... ஓ, சாத்தானே, நீ அம்பலப்படுத்தப் பட்டுவிட்டாய்; நீ தோற்கடிக்கப் பட்டுவிட்டாய்; போரில் நீ தோற்றுவிட்டாய். இங்கிருந்து வெளியே வா, இயேசு கிறிஸ்துவின் நாமத்தில், இங்குள்ள ஒவ்வொரு நபரையும் விட்டு விலகி ...?... க்குள் போகும்படி நான் உனக்குக் கட்டளையிடுகிறேன்.